UCSC யின் தொழில்நெறிசார் அபிவிருத்தி நிலையம் (உ.அ.நி) தகவல் தொழில்நுட்பத் தொழிற்துறையுடன் ஒரு நெருங்கிய தொடர்பை வைத்திருப்பதற்காகவும் தொழிற்துறை பங்குடமை மூலம் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. இந்தக் உ.அ.நி. பணியாளர்கள் மற்றும் உள்ளக மாணவர்களின் உயர்தொழில் திறன்களை மேம்படுத்துதல், உள்வாரி இளமாணி மாணவர்களுக்கான தொழிற்துறைப் பயிற்சிவாய்ப்புக்கள் மற்றும் விஜயங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் ஆகியனவற்றின் மீது முதன்மையாகக் கவனம் செலுத்துகின்றது. UCSC யின் உயர்தொழில் அபிவிருத்தி நிலையத்தின் (உ.அ.நி) பணி தொழில்நெறிசார் திறன்கள், புத்தாக்கத் திறன்கள் மற்றும் வெற்றிகரமான தொழில்வாழ்க்கையைத் தொடர்வதற்கும் அதன் மூலம் இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கு தொழில்முனைவு

போன்ற பாடவிதானத்திற்குப் புறம்பான திறன்களைக் கொண்ட கணினிப் பட்டதாரிகளை உருவாக்குவதாகும்.

***2018ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்***

- 69 நிறுவனங்களில் 238 இளமாணி பட்டதாரி மாணவர்களுக்குபயிற்சி வாய்ப்புக்கள்
- இறுதி ஆண்டு மாணவர்களுக்காக தொழிற்துறைப் பிரதிநிதிகளைப் பயன்படுத்தி மாதிரி நேர்முகத்தேர்வுகளை ஒழுங்கு செய்தல்.
- மாணவர்களுக்காக 2018 தொழிற் சந்தையை ஒழுங்கு செய்தமை.
- தொழிற்துறை பங்கேற்புடன் தொழிற்துறைப் பயிற்சி வாய்ப்பு மதிப்பீட்டு அமர்வுகளை நடாத்தியமை.
- 2018 ஆம் ஆண்டு வருடாந்த பட்டமளிப்பு விழாவிற்கு சிறந்த பயிற்சி வாய்ப்புக்களைத் தெரிவு செய்வதற்கு மாணவர்களையும் பயிற்சி வாய்ப்புக்களையும் மதிப்பீடு செய்வதற்கு ஒழுங்கு செய்தமை.
- 2018 முதல் அரையாண்டு காலப் பகுதியில் மாணவர்களுக்குப் பின்வரும் நிறுவனங்களில் இருந்து பின்வரும் தலைப்புக்களில் தொழில்நுட்ப சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்தமை.

## டிஜிட்டல் சட்ட மருத்துவவியலுக்கான நிலையம் (CDF)

டிஜிட்டல் சட்ட மருத்துவியலுக்கான நிலையம் (டி.ச.நி), எண்ணியல் தடவியல் செயற்பாடுகளில் குறித்த சட்டம் மற்றும் ஒழுங்கு நிறுவனங்களுக்கு உதவுமாறு கோரப்பட்டமையினால், 2011 ஆம் ஆண்டில் UCSC யின் கட்டளைச் சட்டம் ஒரு விசேட அறிவித்தல் மூலம் மாற்றியமைக்கப்பட்டதன் ஊடாக தாபிக்கப்பட்டது. கடந்த 15 வருட காலப்பகுதியில், நாட்டிலுள்ள இந்த அதிகாரங்கள், நாட்டின் முறையான பொறிமுறையொன்று இன்மையினால்,UCSC யினை விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தன. மிகுந்த சிரமங்களுடன்,UCSC இந்த நிறுவனங்களுக்கு உதவி வருகின்றது. சேவைகளைக் கோருகின்ற மக்கிய நிறுவனங்களாவன வெவ்வேறு நீதிமன்றங்கள், குற்றவியல் விசாரணை திணைக்களம் மற்றும் பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் ஆகியன ஆகும்.

சைபர் தாக்குதல் நடவடிக்கைகளில் ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு உணர்திறன்மிக்க அத்துடன் அது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அணுகுமுறை தேவைப்படுகின்ற ஒரு சிக்கலான செயல்முறையாகும். கடந்த காலங்களில்,UCSC யில் இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு கல்விசார் மற்றும் கல்விசாரா ஆதரவுப் பணியாளர்களினால் பல்வேறு துணைக் கருவிகள் உருவாக்கப்படடன: அவற்றுள் சில சர்வதேச மாநாடுகளில் பிரசுரிக்கப்பட்டன (எ.கா. இ-ஆசியா 2009, சைபர் குற்றத் தடயவியல்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான 3வது சர்வதேச மாநாடு, கன்ரபரி பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம் 2010)

கடந்த இரண்டு தசாப்தங்களில் UCSC 600க்கும் அதிகமான வேண்டுகோள்களை பல்வேறு சட்ட நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொண்டிருந்தது. ஆனால் வேண்டப்பட்ட ஆதரவினை வழங்குவது சிக்கலான தன்மை மற்றும் நிதி மற்றும் உட்கட்டுமாணம் இன்மை காரணமாக மிகவும் சிரமமானதாக இருந்தது. கொரிய அரசாங்கத்தின் உதவியுடன், UCSC அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் ஆகியவற்றிற்கு இந்த செயற்பாட்டுப் பணிகளுக்காக புறம்பான அலகுகளைத் தாபிப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவியது. ஆகையால், எதிர்காலத்தில் டி.ச.நி டிஜிட்டல் சட்டமருத்துவியலில் மேலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தும்.

# 2. கல்வி

# 2. கல்வி

UCSCயின் கூட்டுத் திட்டத்திற்கு இணங்க நிறுவகத்தின் முக்கிய பொறுப்பு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயைபான நியமங்களுக்கேற்ப கணினிக் கல்வியினை மேம்படுத்துவதாகும். ஆகையால்,UCSC இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் (உள்வாரி), பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் வெளிவாரி அல்லது விரிவாக்கல் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கணினி கல்வியினை நிர்வகிக்கின்றது. இந்தக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்பாட்டுச் செயன்முறைகளுக்குப் பொறுப்பாக மூன்று கற்கைச் சபைகள் (முன்னைய பிரிவுகளில் விபரிக்கப்பட்டவாறு) உள்ளன.

## 2.1 இளமாணி பட்டக் கல்வி

கொழும்புப் பல்கலைக்கழகத்தில், விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்படும் கற்கைநெறியின் ஒரு பகுதியாக கணினிக் கற்கைகள் முதன் முறையாக 1967 ஆம் ஆண்டில் இளமாணிப் பட்ட மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பீடமான UCSC, விஞ்ஞான பீடத்தில் இன்னமும் கற்கைநெறிகளைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன் UCSC யினால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளை விஞ்ஞான பீடத்தின் 1060 மாணவர்கள் தொடர்ந்தனர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தின் கீழ் கணினியில் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் UCSC தாபிக்கப்பட்டதன் பின்னர், கணினி இளமாணிப் பட்டங்கள் UCSC யின் பிரதான பொறுப்பாகியது. 2018 ஆம் ஆண்டில், ப.மா.ஆ னால் தெரிவுசெய்யப்பட்ட 301 மாணவர்களுக்கு கணினி விஞ்ஞானப் (க.வி.) பட்டம், தகவல் முறைமை (த.மு.)பட்டம், மற்றும் மென்பொருள் பொறியியல் (மெ.பொ.) பட்டம் ஆகிய பட்டக் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

### 2.1.1 உள்ளக இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

UCSC தற்பொழுது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பிரகனப்படுத்தப்பட்ட **இ.த.க. மட்டம் 5** மற்றும் **இ.த.க. மட்டம் 6** ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கணினி விஞ்ஞானம், மென்பொருள் பொறியியல், மற்றும் தகவல் முறைமைகளில் ஐந்து இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இந்த பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பாடவிதானம் கணினி பட்டங்களுக்கான IEEE/ACM சர்வதேச வழிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. UCSC பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத்திறனை 90% மேல் பேணுவதற்காக UCSC உள்ளூர் தொழிற்துறையில் இருந்து பின்னூட்டல்களைப் பெற்று அதன் அனைத்து கணினி பட்டங்களின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்துவதற்காக கல்வியாளர்-தொழிற்துறை ஆலோசனைச் சபை ஒன்றினைத் தாபித்தது. அந்த ஐந்து பட்டங்களும் இ.த.க.மட்டங்களுடன் ஒப்பிட்டு காட்டப்பட்டுள்ளன.

***அட்டவணை: 2.1.1. - அ: UCSC இளமாணி மாணவர்களின் பரம்பல்***

| பட்ட நிகழ்ச்சித்திட்டம் | காலப்பகுதி (கல்வியாண்டுகள்) | இ.த.கமட்டம் |
|---|---|---|
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (BSc in CS) | 3 ஆண்டுகள் | மட்டம் 5 |
| கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞானமாணி (BSc Hons. in CS) | 4 ஆண்டுகள் | மட்டம் 6 |
| மென்பொருள் பொறியியல் கௌரவ விஞ்ஞானமாணி (BSc Hons. in SE) | 4 ஆண்டுகள் | மட்டம் 6 |
| தகவல் முறைமைகளில் விஞ்ஞானமாணி (BSc in IS) | 3 ஆண்டுகள் | மட்டம் 5 |
| தகவல் முறைமைகளில் கௌரவ விஞ்ஞானமாணி (BSc Hons. in IS) | 4 ஆண்டுகள் | மட்டம் 6 |

நான்கு ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான தெரிவு, மாணவர்கள் முதல் இரண்டு வருட செயலாற்றுகையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் 2.75 தர புள்ளி சராசரியினை (GPA) விட புள்ளிகளை ஈட்டுகின்ற போது கௌரவ பட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி

பெறுகின்றனர். எனினும், க.க.(C.S) மற்றும் த.மு.(IS) தொடர்களுக்கான தற்போதைய உள்ளெடுப்பு அளவு முறையே 40 மற்றும் 20 ஆகும். க.க.(C.S) மாணவர்கள் கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞானமாணி அல்லது மென்பொருள் பொறியியல் கௌரவ விஞ்ஞானமாணியினைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை பெறுகின்றனர். மூன்றாம் வருடக் கற்கைகளின் முதலாம் அரையாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் முதல் இரண்டு வருடப் பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. அனைத்து பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான திருத்தப்பட்ட பாடவிதானங்கள் தற்போது செயலிலுள்ளன. உயர் தரத்தில் இணைந்த கணிதத்தில் அல்லது பௌதீகவியலில் அல்லது உயர் கணிதத்தில் ஒரு திறமைச் சித்தி (c) மற்றையது இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது கணிதவியல் ஆகியவற்றிலிருந்து வேறு இரண்டு பாடங்களில் சாதாரண சித்தி (s) இணையும் பெற்றுக்கொள்ளும் உ/த மாணவர்கள் UCSC யில் க.வி. பிரிவு விண்ணப்பிக்கத் தகைமை பெறுவர். த.மு. பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு **2018 மே மாதத்தில் ஒரு தெரிவுப் பரீட்சை (உளச்சார்புப் பரீட்சை) நடைபெற்று அங்கு 2494 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்து 331 மாணவர்கள் த.மு. பிரிவுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றனர்.** பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் உள்ளபடியான எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

## 2.1.2 கல்வியாண்டு – 2017/2018 மற்றும் மாணவர் சேர்வு

***அட்டவணை 2.1.2. - அ: சேர்ப்பு - UCSCயின் உள்ளெடுப்பு பரம்பல்– 2018***

| கற்கைப் பிரிவு | உள்ளெடுப்பு அளவு | சேர்த்த எண்ணிக்கையினர் | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| **CS** பிரிவு | 200 | 199 (99.5%) | 139 (69%) | 60 (30%) |
| **IS** பிரிவு | 100 | 102 (102%) | 39 (38%) | 63 (61%) |
| மொத்தம் | **300** | **301 (100.33%)** | **178 (59%)** | **123 (41%)** |

ஒரு கல்வியாண்டு வழமையாக இரண்டு அரையாண்டுகளைக் கொண்டிருக்கும். இங்கு ஒவ்வொரு அரையாண்டும் 15 வாரங்களை உள்ளடக்குகின்றது. ஒரு நடு-அரையாண்டு ஓய்வு ஒரு வாரமாகவும் அரையாண்டின் பின்னர் பரீட்சைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு வார கால கல்வி விடுமுறையும் இருக்கின்றது. 2018 கல்வி ஆண்டிற்கான நாட்காட்டி கீழே தரப்பட்டுள்ளது. UCSC க்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய இளமாணி மாணவர்களுக்கு 2018 ஜனவரி 17ம் திகதி அன்று அங்குரார்ப்பணம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து கல்வியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2018 ஜனவரி 18 ஆந் திகதி முதல் 30 ஆந் திகதி வரை நடைபெற்றது. https://ucsc.cmb.ac.lk/events/inauguration-ceremony-undergraduate-academic-year-20162017/

**2018 ஆம் ஆண்டிற்கான கல்விசார் நேர அட்டவணை**

| காலப்பகுதி | | வாரங்கள் | 12/13 | 13/14 | 14/15 | 15/16 |
|---|---|---|---|---|---|---|
| 08/01/2018 | 21/01/2018 | 2 | முதலாம் வருட திசைமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | | | |
| 22/01/2018 | 11/02/2018 | 3 | UCSC மாணவர் அனைவருக்கும் விடுமுறை | | | |
| 02/12/2018 | 08/04/2018 | 8(5)* | 4S1 | 3S1 | 2S1 | 1S1 |
| 09/04/2018 | 22/04/2018 | 2 | தமிழ், சிங்கள புதுவருட விடுமுறை | | | |
| 23/04/2018 | 01/07/2018 | 10 | 4S1 | 3S1 | 2S1 | 1S1 |
| 02/07/2018 | 08/07/2018 | 1 | படிப்பு லீவு | | | |
| 09/07/2018 | 12/08/2018 | 5 | முதலாம் அரையாண்டு பரீட்சைகள் | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13/08/2018 | 19/08/2018 | 1 | விடுமுறை | | | |
| 20/08/2018 | 23/09/2018 | 5 | 4S2 | 3S2 | 2S2 | 1S2 |
| 24/09/2018 | 30/09/2018 | 1 | நடு அரையாண்டு ஓய்வு | | | |
| 01/10/2018 | 02/12/2018 | 9 | 4S2 | 3S2 | 2S2 | 1S2 |
| 03/12/2018 | 09/12/2018 | 1 | படிப்பு லீவு | | | |
| 10/12/2018 | 31/12/2018 | 3 ** | இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் | | | |
| 01/01/2019 | 04/02/2019 | 5 | புதுவருட விடுமுறை, வினாத்தாள்களை மதிப்பிடுதல்&1ம் வருட திசைமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | | | |

**கல்விசாரா பதவியினரின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக 17/03/2018முதல்17/04/2018 வரைகல்வி நடவடிக்கை இல்லை.*

*** நத்தார் விடுமுறையின்போது பரீட்சை நடைபெறவில்லை(22/12/2017 முதல் 26/12/2017 வரை).*

விஞ்ஞான பீட மற்றும் UCSC போதனைக் கற்கைநெறிகள் இரண்டினையும் ஒத்திசைப்பதில் பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகளை UCSC எதிர்கொள்கின்றது. பற்றாக்குறையான விரிவுரை மண்டபங்கள் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் கற்பித்தல், செய்முறை மற்றும் போதனைச் செயற்பாடுகளை நிர்வகிப்பதில் ஆழமாக பாதித்தது.

***அட்டவணை 2.1.2. - ஆ: உள்ளக பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மாணவர் சேர்ப்பு– 2018***

**UCSC *இல் மொத்த மாணவர் எண்ணிக்கை (உள்வாரி இளமாணி மாணவர்கள்)***

| பாடநெறி | உள்ளெடுப்பு 2016/17 | 1ம் ஆண்டுமாணவர்கள் | 2ம் ஆண்டுமாணவர்கள் | 3ம் ஆண்டுமாணவர்கள் | 4ம் ஆண்டுமாணவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (BSc in CS) | 200 | 199 | 155 | 118 | - | 472 |
| கணினி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞானமாணி (BSc Hons. in CS) | 100 | 102 | 97 | 67 | - | 266 |
| மென்பொருள் பொறியியல் கௌரவ விஞ்ஞானமாணி (BSc Hons. in SE) | - | - | - | 30 | 30 | 60 |
| தகவல் முறைமைகளில் விஞ்ஞானமாணி (BSc in IS) | - | - | - | 10 | 10 | 20 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (BSc in CS) | - | - | - | 20 | 19 | 39 |
| **UCSC யின் இளமாணி மாணவர்கள்** | **300** | **301** | **252** | **245** | **59** | **857** |
| விஞ்ஞான பீடம் - விஞ்ஞானமாணி (பொது) | - | 381 | 498 | 92 | 72 | **1043** |

UCSC யில் அனைத்து கற்கைநெறிகளும் ஆங்கில மொழிமூலம் மாத்திரம் நடாத்தப்படுகின்றன.

## 2.1.3 பரீட்சைகளில் மாணவர் செயலாற்றுகை

***அட்டவணை 2.1.3. - அ: கற்கை நிகழ்ச்சித்திட்டம்: CS பிரிவு***

| கல்வியாண்டு | பதிவுசெய்த மாணவர்கள் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண். | மாணவர் எண்.– GPA>=2.00 | மாணவர் எண்.2.0>GPA>=1.5 | GPA<1.5 | சித்தி வீதம்% [மாணவர் எண்.>=1.5 /பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண். |
|---|---|---|---|---|---|---|
| 2016/2017 | 199 | 194 | 166 | 16 | 12 | 93.81% |
| 2015/2016 | 163 | 155 | 141 | 11 | 3 | 98.06% |
| 2014/2015 | 158 | 157 | 151 | 3 | 3 | 98.08% |
| 2013/2014 | 40 | 40 | 40 | 0 | 0 | 100% |

***அட்டவணை 2.1.3. - ஆ: கற்கை நிகழ்ச்சித்திட்டம்: IS பிரிவு***

| கல்வியாண்டு | பதிவுசெய்த மாணவர்கள் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண். | மாணவர் எண். – GPA>=2.00 | மாணவர் எண். 2.0>GPA>=1.5 | GPA<1.5 | சித்தி வீதம்[மாணவர் எண்.>=1.5/ பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண். |
|---|---|---|---|---|---|---|
| 2016/2017 | 102 | 97 | 2 | 94 | 1 | 98.97% |
| 2015/2016 | 99 | 96 | 84 | 8 | 4 | 95.83% |
| 2014/2015 | 92 | 83 | 79 | 3 | 1 | 98.79% |
| 2013/2014 | 20 | 19 | 19 | 0 | 0 | 100% |

பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பாடவிதானத்தின் அடிப்படையில் குறித்த கல்வி கற்கைநெறியில் சித்தி அடைவதற்கு தொடர் மதிப்பீடுகள் மற்றும் அரையாண்டுப் பரீட்சைகள் இரண்டினையும் பூர்த்தி செய்ய வேண்டுமெனக் கருதப்படுகின்றனர். அனைத்து பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மெய்நிகர் கற்றல் சூழலிலும் (VLE) கலப்புக் கற்றல் முறையும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.http://ugvle.ucsc.cmb.ac.lk

## 2.1.4 தொழிற்றுறைப் பயிற்சிவாய்ப்பு

தேசிய மற்றும் சர்வதேச தொழிற்துறைத் தேவைப்பாடுகள் தொடர்பாக பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, தொழிற்துறைப் பயிற்சிவாய்ப்பு ஒரு கட்டாயத் தேவையாக UCSC யின் அனைத்து மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. உயர்தொழில் அபிவிருத்தி நிலையம் (PDC) இந்த தேவைகளை கவனிப்பதற்கு அமைக்கப்பட்டதுடன் தொழிற்துறையின் உதவியுடன் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதற்காக த.தொ. தொழிற்துறையுடன் நெருக்கமான தொடர்பினையும் வைத்திருக்கின்றது. மூன்றாம் வருடத்தின் இரண்டாம் அரையாண்டு தொழிற்றுறை பயிற்சி வகுப்புகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. UCSC பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் திறனை 90% மேல் பேணுவதற்காக UCSC உள்ளூர் தொழிற்துறையில் இருந்து பின்னூட்டல்களைப் பெற்று அதன் அனைத்து கணினி பட்டங்களின் பொருத்தப்பாட்டினை மேம்படுத்துவதற்காக கல்வியாளர் தொழிற்துறை ஆலோசனைச் சபை ஒன்றினைத் தாபித்தது. 2018 ஆம் ஆண்டு பயிற்சி வாய்ப்புக்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

***அட்டவணை 2.1.4. - அ: நிறுவனங்கள் தொடர்பாக தொழிற்துறைபயிற்சி வாய்ப்புக்களின் பரம்பல்***

| நிறுவனங்களின் வகை–பயிற்சி வாய்ப்பு | அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாரிய தகவல் தொழில்நுட்ப கம்பனிகள் | 109 | 27 |
| சிறிய தகவல் தொழில்நுட்ப கம்பனிகள் | 91 | 31 |
| அரசாங்க நிறுவகங்கள் | 14 | 10 |
| UCSC யில் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைத் திட்டங்கள் | 24 | 10 |
| மொத்தம் | **238** | **78** |

PDC நிறுவனங்கள் சுயவிருப்புடன் பங்குபற்றுவதற்காக அதிதி விரிவுரைகள் தொடர்களையும் கூட ஒழுங்கு செய்திருந்தது. இந்த விரிவுரைகளின் ஊடாக, இளமாணி மாணவர்கள் அவர்கள் பட்டம் பெற்ற பின்னர் தொழில்வல்லுனராக ஆற்ற வேண்டிய வகிபாகம் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற்துறைப் பயிற்சிக்கு அப்பால், வெளியேறிய மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குகின்ற அதேவேளை, தொ.அ.நி. டெக்-டோக் அமர்வுகள், மாதிரி நேர்முகத் தேர்வுகள், தொழிற் திறன்கள் மேம்பாடு ஆகியவற்றினை ISMAPAC (pvt) Ltd ஒத்துழைப்புடன் உள்ளக தொழிற்றுறை செயலமர்வையும் ஒழுங்குசெய்தது.

## 2.1.5 இளமாணி பட்டதாரி மாணவர் நலன்புரி

### 2.1.5.1 இளமாணி பட்டதாரி மாணவர் நலன்புரி

#### (அ) விடுதி வசதிகள்

வருடத்தில்,UCSC தேவையுள்ள 1ஆம் வருட அத்துடன் தேவையுள்ள இறுதி வருட இளமாணிப்பட்ட மாணவர்களுக்கு UCSC யின் கொள்கையைக் கருத்திற்கொண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (ப.மா.ஆ) முன்னேற்றத்திற்கு இணங்கவும் வதிவிட வசதிகளை வழங்கியது. அர்ப்பணிக்கப்பட்ட விடுதி வசதிகள் இல்லாமையினால்,UCSC பத்தரமுல்லையில் ஆண்களுக்காகவும் (இது சுமார் 35 மாணவர்களுக்கு இடமளிக்கும்) மற்றும் கொஹுவலையில் பெண் விடுதிக்காகவும் (இது சுமார் 35 மாணவர்களுக்கு இடமளிக்கும்) இரண்டு தனியார் ஆதனங்களை வாடகைக்கு எடுத்தது. UCSC யின் பணியாளர் குழாம் உறுப்பினர்களான கல்விசார் விடுதிப் பாலகர் மற்றும் கல்விசார் உப-விடுதிப் பாலகர் விடுதிகளின் முகாமைத்துவத்தைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டிருப்பதுடன் கல்விசார் வெளியீடுகள் மற்றும் மாணவர் நலன்புரி பிரிவு இரண்டு விடுதிகளையும் பிரதிப் பதிவாளரின் மேற்பார்வையின் கீழ் முகாமைத்துவம் செய்கின்றது. 2018 ஆம் ஆண்டின் விபரமான புள்ளிவிபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்படுகின்றன.

ஆண்கள் விடுதி:

விடுதி முகவரி: 474/B, கடுவெல வீதி, தெனியாவத்தை, பத்தரமுல்ல
கல்விசார் விடுதிப் பாலகர்: கலா.கே.எல.ஜயரட்ண
கல்விசார் உப-விடுதிப் பாலகர்: கலா.எம்.ஐ.ஈ.விக்கிரமசிங்க
கொள்ளளவு: 35

பெண்கள் விடுதி:

விடுதி முகவரி: 76/16A, சுனெத்திராதேவி மாவத்தை, கொஹுவலை, நுகேகொட
கல்விசார் விடுதிப் பாலகர்: கலா. (திருமதி.)ரி.ஏ.வீரசிங்க
கல்விசார் உப-விடுதிப் பாலகர்: திருமதி.எம்.ஜி.ஏ.ஸ்ரீமாலீ
கொள்ளளவு: 36

***அட்டவணை 2.1.5.1. – அ: 2018ஆம் ஆண்டில் விடுதி வசதிகள் கோரிக்கை மற்றும் அனுமதி***

| விடுதி | விடுதி வசதிக்கான விண்ணப்பங்கள் | 1ம் வருட மாணவர்கள் | | இறுதிவருட(3ம், 4ம்) மாணவர்கள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | CS பிரிவு | IS பிரிவு | CS பிரிவு | IS பிரிவு | SE பிரிவு | |
| ஆண்கள் விடுதி | 73 | 21 | 14 | - | - | - | 35 |
| பெண்கள் விடுதி | 67 | 19 | 17 | - | - | - | 36 |
| மொத்தம் | **140** | **43** | **21** | **-** | **-** | **-** | **71** |

***அட்டவணை 2.1.5.1. - ஆ: விடுதி வசதிகளுக்காகச் செலவிடப்பட்ட நிதிகள்***

| விடுதி | இயலளவு | 12 மாதங்களுக்கான வாடகை | பயன்பாட்டுக் கிரயம் | முகாமைத்துவக் கிரயம் | பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் | மாணவருக்கான கிரயம்ரூ. |
|---|---|---|---|---|---|---|
| ஆண்கள் விடுதி | 35 | 1,354,500.00 | ஏனைய: 97,565.00<br>நீர்: 174,470.71<br>மின்சாரம்: 94,986.30<br>ரூ.367,022.01 | பாலகர் கொடுப்பனவு 500*12 = 6,000.00<br>உபபாலகர் கொடுப்பனவு – 750*12 = 9,000.00<br>பொறுப்பாளர் சமபளம்: 262,498.00 | 35 | **57,114.86** |
| பெண்கள் விடுதி | 36 | 720,000.00 | ஏனைய: 248,155.60<br>நீர்: 138,651.78<br>மின்சாரம்: 123,218.19<br>தொலைபேசி: 18,407.30<br>ரூ. 528,432.87 | பாலகர் கொடுப்பனவு 500*12 = 6,000.00<br>உபபாலகர் கொடுப்பனவு – 750*12 = 9,000.00<br>பொறுப்பாளர் சமபளம்: 262,498.00 | 36 | **42,386.97** |
| | | | | மொத்தம் | **71** | **48750.91** |

### (ஆ) சிற்றுண்டிச்சாலை வசதிகள்

ஏனைய பீடங்களின் சிற்றூண்டிச்சாலைகள் மதிய நேரத்தில் நெரிசலானதாக இருக்கின்றமையாலும் UCSC வளாகத்திற்கு அருகாமையில் இல்லாதிருப்பதனாலும் UCSC வேறாக அதன் மாணவர்களுக்கு சிற்றூண்டிச்சாலை வசதிகளை வழங்குகின்றது. 2015 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட புதிய சிற்றூண்டிச்சாலை உணவு தயாரிப்பதற்கு ஒரு சமையலறையில் இன்மையினால் பல்வேறு செயற்பாட்டுப் பிரச்சினைகளை எதிர்கொண்டது. எவ்வாறாயினும், சிற்றூண்டிச்சாலை தற்காலிக ஒழுங்குகளின் கீழ் இயக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் எதிர்காலத்தில் சிற்றூண்டிச்சாலைக்கு ஒரு நிரந்தரச் சமையலறை வழங்கப்படும்.

UCSC மாணவர் சிற்றுண்டிச்சாலை வழமையாக மு.ப.7.00 மணிக்கு திறக்கப்பட்டு கல்வி அரையாண்டுகள் காலப் பகுதியில் பி.ப.6.00 வரையில் சேவைகள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. சிற்றுண்டிச்சாலையின் முகாமைத்துவம் ஒரு சிற்றுண்டிச்சாலை குழுவினால் கண்காணிக்கப்படுகின்றது. அது சிரேஷ்ட கல்விசார் ஊழியர்கள், நிர்வாகப் பணியாளர் உறுப்பினர்கள் மற்றும் மாணவர் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருக்கின்றது. இந்தக் குழு கிரமமான இடைவேளைகளில் கலந்துரையாடுவதற்கு கூடுகின்றது. அத்துடன் UCSC யில் சிற்றுண்டிச்சாலை சேவைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது.

திரு.எஸ்.அமரசிங்க சிற்றுண்டிச்சாலை ஒப்பந்தராராக மாணவர் சிற்றுண்டிச்சாலைக்கு ஒரு வருட காலப்பகுதிக்கு அரசாங்க பெறுகை நடைமுறையின் கீழ் தெரிவுசெய்யப்பட்டார். UCSC மின்சாரம், நீர் மற்றும் சிற்றுண்டிச்சாலை இயக்குவதற்குத் தேவையான பாத்திர பண்டங்களை இலவசமாக வழங்குகின்றது. சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர் அவர்களுடைய சேவைகளை உடன்படிக்கைகளுக்கு இணங்க வழங்குவார் என கருதப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் UCSC ஏறக்குறைய ரூ.10,000.00 ற்கு மாணவர் சிற்றுண்டிச்சாலைக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்குச் செலவிடப்பட்டது. உள்ளக கண்காணிப்பின்படி UCSC, சிற்றுண்டிச்சாலை மின்சாரம் பொருட்டு ஏறக்குறைய ரூ.25,000ஐ செலவு செய்கிறது.

மாணவர் சிற்றுண்டிச்சாலை சாதாரண செயற்பாட்டு நேரங்களில் நெரிசலாக இருப்பதனால், கட்டடக் கூரையின் மாடியில் ஒரு சிறிய பதவியினர் சிற்றுண்டிச்சாலை பேணப்படுகின்றது. இந்தச் சிற்றுண்டிச்சாலையை பதவியினர்களும் விருந்தினர்களும் மாத்திரம் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் கட்டடத் தொகுதியின் கூரை மாடியில் மதிய உணவுப் பகுதியும் அமைந்திருக்கின்றது.

### (இ) இளமாணி மாணவர்களுக்கான ஆலோசனைச் சேவைகள்

மாணவர் ஆலோசனை UCSC யினால் அனைத்து இளமாணி மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்ற ஒரு சேவையாகும். கடந்த பல தசாப்தங்களுக்கு மேலாக எமது அனுபவங்களின் ஊடாக, குடும்ப விடயங்கள், உறவுகள், கற்றல் மற்றும் தொழில்சார் தீர்மானங்கள் போன்ற பல்வேறு சம்பவங்களில் இருந்து விளையும் மன அழுத்தம் தொடர்ந்து அதிகரித்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. UCSC யின் ஆலோசனைச் சேவைகள் உதவியை நாடும் மாணவர்களுக்கு, அவர்களுடைய குறிப்பாக உளவியல் சமூகப் பிரச்சினைகளின் ஆரம்ப கட்டங்களில் இருப்பவர்களுக்கு உகந்த சூழலை வழங்குவதனைக் கவனத்தில் கொண்டுள்ளது. எமது ஆலோசகர்கள் மாணவர்களின் பிரச்சினைகளைச் செவிமடுப்பதற்கும் அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை அவர்களே கையாளுவதில் அவர்களுக்கு உதவுவதற்கும் தகுதி வாய்ந்தவர்களாக உள்ளனர். எவ்வாறாயினும், ஒரு குறித்த பிரச்சினைக்கு மேலும் உதவி தேவையா என்பதனைத் தீர்மானிப்பதிலும் கூட அவர்கள் பயிற்றப்பட்டு உள்ளனர். மற்றும் அவ்வாறான மாணவர்களை வாராந்த அடிப்படையில் UCSC க்கு வருகை தரும் ஒரு தொழில்சார் ஆலோசகருக்கு சிபார்சு செய்வர். 2016 ஆம் ஆண்டிலிருந்து மாணவர் ஆலோசனைக்கு ஒரு புறம்பான அறை ஒதுக்கப்பட்டு உள்ளதுடன் உதவி நாடும் நபர்களுக்காக சேவைகள் வழங்கப்படுகின்றன.

மாணவர் ஆலோசகரிடம் மாணவர்கள் தெரிவிக்கும் அனைத்து தகவலும் இரகசியமாக வைக்கப்பட்டு இருப்பதுடன் மாணவர் சம்மதித்தால் ஒரு தொழில்சார் ஆலோசகருக்கு மாத்திரம் தெரிவிக்கப்படும் என்பதனை முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவும். அவ்வாறே, தொழில்சார் ஆலோசகரும் UCSC யினால் மாணவர் ஈடுபட்டுள்ள கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரச்சினை மீதான ஏதாவது தாக்கம்

தொடர்பாக யாதாயினும் நடவடிக்கை வேண்டப்படுவதாக இருந்தால் மாத்திரமே UCSC க்குத் திரும்பத் தெரிவிப்பார். தொழில்சார் ஆலோசகர் மேலதிக உதவி சேவையெனத் தீர்மானித்தால் அவர் குறித்த மாணவரை, அவனுடைய/அவளுடைய சம்மதத்துடன் ஒரு மருத்துவ உளவியலாளர் அல்லது மனநல மருத்துவரிடம் சிபாரிசு செய்வர்.

2018 ஆம் ஆண்டில் அனைத்து மாணவர்களுக்கும் இரு மாணவர்களின், குறிப்பாக கலா.(திருமதி) ரி.ஏ.வீரசிங்க, திரு.ஜி.பி. செனவிரட்ண ஆகியோரின் சேவைகள் வழங்கப்பட்டன. அத்துடன் ஆலோசனைகள் வேண்டப்படுகின்றன. மாணவர்களுக்கு வசதியளிப்பதற்காக திருமதி. நிலாணி துசந்திகா எனும் ஆலோசகரின் சேவையும் நாள் ஒன்றிற்கு 2-3 மணித்தியாலங்கள் பெறப்பட்டது. UCSC தொழில்சார் ஆலோசகரின் சேவைகளுக்கு மணித்தியால அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொண்டது. பொதுவாக, இந்த ஆலோசகர்களிடம் இருந்து சுமார் 20 - 30 மாணவர்கள் கிரமமான ஆலோசனைகளைப் பெற்றதுடன் பரீட்சைக் காலங்கள் போன்ற குறித்த காலப்பகுதிகளில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாகியது.

### (ஆ) இளமாணி மாணவர்களுக்கான நிதி உதவி

மாணவர்களுக்கு மகாப்பொல புலமைப்பரிசில், உதவித்தொகைகள், தொழிற்துறைப் புலமைப்பரிசில்கள் மற்றும் மாணவர் நலன்புரி மற்றும் இடர் நிதி வடிவில் நிதி உதவி ஒன்று வழங்கப்பட்டது.

### மகாபொல புலமைப்பரிசில்கள்

வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சின் மகாப்பொல நம்பிக்கை நிதியத்தினால் அனுசரனையளிக்கப்பட்ட மகாப்பொல புலமைப்பரிசில்கள் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் 263 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. திறமை மற்றும் சாதாரண புலமைப்பரிசில்களின் பெறுமதி முறையே ரூ.5,050 மற்றும் ரூ.5,000 ஆக இருந்தது.

***அட்டவணை 2.1.5.1. – அ: 2018இல் மகாபொல புலமைப்பரிசில் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை***

| உள்ளெடுப்பு ஆண்டு | கற்கை ஆண்டு | *திறமை புலமைப்பரிசில்* (CS+IS) | *சாதாரண புலமைப்பரிசில்* (CS+IS) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2016/17 | ஆண்டு 1 | 14(14+00) | 77(48+29) | 91 (62+29) |
| 2015/16 | ஆண்டு 2 | 07(05+02) | 75(51+24) | 82 (56+26) |
| 2014/15 | ஆண்டு 3 | 01(00+01) | 73(45+28) | 74 (45+29) |
| 2013/14 | ஆண்டு 4 | 00(00+00) | 16(13+03) | 16 (13+03) |
| அனைத்தும் | மொத்தம் | **22** | **241** | **263** |

### உதவித்தொகைகள்

உதவித்தொகைக்காக மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதனை நிர்வகிக்கும் பா.மா.ஆ. சுற்றுநிருபத்திற்கு இணங்க உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 49 மாணவர்களுக்கு உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2018 ஆம் அண்டில் உதவித்தொகை பெற்றவர்களின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டு உள்ளன (கணினி விஞ்ஞானம் + தகவல் முறைமை).

***அட்டவணை 2.1.5.1. – அ: மாணவர் உதவித்தொகை அனுமதி - 2018***

| உள்ளெடுப்பு ஆண்டு | கற்கை ஆண்டு | முழு உதவித்தொகை (ரூ.4,000) | அரை உதவித்தொகை (ரூ.3,900) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2016/17 | ஆண்டு 1 | 10(07+03) | 05(05+00) | 15 (12+03) |
| 2015/16 | ஆண்டு 2 | 07(04+03) | 04(01+03) | 11 (05+06) |

| | | | | |
|---|---|---|---|---|
| 2014/15 | ஆண்டு 3 | 09(08+01) | 10(08+02) | 19 (16+03) |
| 2013/14 | ஆண்டு 4 | 02(01+01) | 2(00+02) | 04 (01+03) |
| **அனைத்தும்** | மொத்தம் | **28** | **21** | **49** |

### தொழிற்துறை புலமைப்பரிசில்கள்

ஒவ்வொரு ஆண்டும் தேவையுள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களுக்கு அனுசரணை வழங்குமாறு தனியார் நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன. IFS R&D கம்பனி 12 மாதங்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.5000 ஆக 8 புலமைப்பரிசில்களுக்கு அனுசரணை வழங்கியது. மாணவர் ஆலோசகரும் துறைத் தலைவரும் நேர்முகத் தேர்வின் மூலம் இந்த மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதில் நேரடியாக சம்பந்தப்படுகின்றனர்.

### UCSC மாணவர் இடர் மற்றும் நலன்புரி சங்கம்

சில வருடங்களுக்கு முன்பு,UCSC கல்விசார் பணியாளர்களின் நிதி நெருக்கடிகள் மற்றும் பெற்றோரின் திடீர் இழப்பு, சுகாதாரப் பிரச்சினைகள் போன்ற எதிர்பாராத தனிப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு மாணவர்களின் தேவைகளைக் கண்காணித்தனர். ஆகையால், கல்விசார் பணியாளர்கள் முதுமாணிகள் மற்றும் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் இருந்தான 2% இனை ஒதுக்கி அதனை மாணவர்களின் இடர்கள் மற்றும் நலன்புரி செயல்பாடுகளுக்கு பயன்படுத்தத் தீர்மானித்தனர். 2018 ஆம் ஆண்டில், இந்த ஒதுக்கத்தில் இருந்தான நிதியினைப் பயன்படுத்தி பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**2018ஆம் ஆண்டில், மாணவர் இடர் மற்றும் நலன்புரி நிதியத்திலிருந்து 42 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. அவற்றுக்கிடையே ஒரு 12 மாத காலப் பகுதிக்கு ரூ.5,000 புலமைப்பரிசில்கள் 21 உம்,ரூ.3,000 புலமைப்பரிசில்கள் 21 உம் இருந்தன.** ஆகையால்,UCSC யின் தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தில் இருந்து 2 மில்லியன் நிதி நெருக்கடிகளை எதிர்கொண்ட மாணவர்களுக்காக விசேட புலமைப்பரிசில் தொடர்பாக செலவிடப்பட்டது.

***அட்டவணை 2.1.5.1. – ஈ: விசேட நிதி உதவிகள் 2018***

| பயன்பாட்டு வகுதி | நிகழ்வு | மாணவர் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|
| UCSC யினை சர்வதேச நிகழ்வில் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களுக்கான கொடுப்பனவு | IEEE பிராந்தியம் 10 SYWL காங்கிரஸ் 2018 பாளி- இந்தோனேசியா. | 01 | 15,000.00 |
| | Hack the North 2018! வோட்டர்லூ பல்கலைக்கழகம் - கனடா. | 04 | ஒரு மாணவருக்கு15,000.00 |
| | NBQSA இல் “வெள்ளிப்பதக்கம்” – 2018 and APICTA சீனா. | 03 | ஒரு மாணவருக்கு15,000.00 |
| | **மொத்தம்** | **08** | **120,000/=** |

## 2.1.6 UCSC மாணவர் சங்கம்

2002ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைப் பிரிவுக் கட்டளைச்சட்டத்தின் 25ம் 26ம் உபபந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, 2018ஆம் ஆண்டு பொருட்டுமாணவர் சங்க தேர்தல் நடைபெற்றதுடன் பின்வரும் உறுப்பினர்கள் மாணவர் சங்கம் பொருட்டு தெரிவுசெய்யப்பட்டனர்.

| மாணவர் பெயர் | பதிவிலக்கம் | பதவிதாங்குவோர் |
|---|---|---|
| எம்.பீ.எஸ்.பத்தும் | 2015/IS/046 | தலைவர் |
| பீ.கே.சிறிசேன | 2016/CS/138 | உப தலைவர் |
| ஓ.கே.சேனாநாயக்க | 2016/IS/080 | செயலாளர் |
| எஸ்.பீ.ரணவீர | 2016/CS/117 | பதிப்பாசிரியர் |
| பி.எச்.எச். த சில்வா | 2016/IS/014 | கனிஷ்ட பொருளாளர் |
| பீ.பானுஷன் | 2016/CS/015 | குழு உறுப்பினர் |
| ஏ.ஆர்.ஆர்.எம்.மதாஹி | 2016/CS/077 | குழு உறுப்பினர் |
| எம்.எச். ஜவாஹீர் | 2016/IS/036 | குழு உறுப்பினர் |
| எம்.ஆர். முதுமல | 2016/IS/059 | குழு உறுப்பினர் |
| எம்.எப்.எப்.கமால்டீன் | 2017/IS/040 | குழு உறுப்பினர் |
| என்.ரீ.பீ.ஆர்.என்.நாணாயக்கார | 2017/CS/112 | குழு உறுப்பினர் |
| பி.எம்.எஸ்.பி.நவரத்ன | 2017/CS/115 | குழு உறுப்பினர் |
| டி.எம்.பி.பீ.ஆரியரத்ன | 2017/IC/012 | குழு உறுப்பினர் |

பல்வேறுமாணவர் கழகங்களும் சமூகங்களும் உள்ள போதிலும்,மாணவர்களின் பல செயற்பாடுகள் மாணவர் சங்கத்தினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகளின் சிலவற்றிக்காக வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு ஒன்று இருந்ததுடன் மாணவர்கள் அவற்றை பயன்படுத்தியிருந்தனர். பழைய உறுப்பினர்கள், தொழிற்றுறை மற்றும் ஏனைய அனுசரணையாளர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்பட்டதுடன் நிதியங்களை தோற்றுவிப்பதற்காக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.மீண்டுவரும் செலவின ஒதுக்கீட்டினை பொறுத்து UCSC, அரச மானியம் மற்றும் முதுமாணி, வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ஆகிய இரண்டினையும் பயன்படுத்தி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் இந்த முக்கிய செயற்பாடுகள் அனைத்திற்கும் பகுதியளவில் அனுசரணை வழங்கியது.

## 2.1.7 மாணவர் செயற்பாடுகள்

கலாசார மற்றும் களியாட்ட செயற்பாடுகளை பிரதானமாக மேம்படுத்துவதற்கு UCSCமாணவர் சங்கத்தினூடாக மாணவர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உரிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை ***2.1.7.: அ:*** மாணவர் முக்கிய செயற்பாடுகளின் காலவரம்பு– ***2018***

| நிகழ்வு | திகதி |
|---|---|
| கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைப் பிரிவின் 2016/2017தொகுதியினர் பொருட்டான ஆரம்ப வைபவம்புதிய கலையரங்கில் நடைபெற்றது | சனவரி 17 |
| ‘றீட் ஹந்தாவ’ வீ.கே.சமரநாயக்க கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. | பெப்ரவரி 15 |
| Cloud Study Jam மற்றும் GCPஅமர்வுUCSC இன் IEEE CS SB உயர்பீடத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது | பெப்ரவரி 24 |
| SDLCமீது கவனஞ்செலுத்தி Techlinked எனும் செயலமர்வுகள் தொடர் UCSC இன் IEEE CS SB உயர்பீடத்தினால்ஒழுங்குசெய்யப்பட்டது. | மார்ச் 12 - மே 14 |
| 1ம் வருட மாணவர்கள் பொருட்டு சிரேஷ்ட மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட தர்ம தேஷனா நிகழ்வு | மே 7 |
| UCSC ISACA மாணவர் குழுவினரால் ஒழுங்குசெய்யப்பட்ட iFest 2k18 - கணினிவழி பாதுகாப்பு மாநாடு | மே 13 |
| UCSC இன் எக்ஸ்புளோரேஷன் கழகத்துடன் ஒன்றிணைந்து மாணவர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட “நந்தன” இசைக் கச்சேரி மஹரகம | மே 18 |

| | |
|---|---|
| இளைஞர் மன்றத்தில் நடைபெற்றது. | |
| வெசாக் கொண்டாட்டம் | மே 29 |
| தமிழ், சிங்கள புத்தாண்டு விழா, “UCSC සූර්යඋදානය 2018” | ஆகஸ்ட் 10 |
| UCSC மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட UCSC பெதுர 2018 | ஆகஸ்ட் 31 |
| 4ம் வருட மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட தொழில் சந்தை 2018 | ஒக்டோபர் 1 |
| UCSC ISACA மாணவர் குழுவினரால் ஒழுங்குசெய்யப்பட்டiHack 4.0 – பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான24 மணி ஹக்கோதொன் | ஒக்டோபர் 6-7 |
| UCSC இன் IEEEமாணவர்கிளையினால் ஒழுங்குசெய்யப்பட்ட IEEE தினம் 2018 புதிய கலையரங்கில் வெற்றிகரமாக நடைபெற்றது. | ஒக்டோபர் 10 |
| UCSC ISACA மாணவர் குழுவினரால் ஒழுங்குசெய்யப்பட்ட புலமைச்சொத்து மற்றும் மென்பொருள் ஆக்கவுரிமை அமர்வுக்கான அறிமுகம் | ஒக்டோபர் 18 |
| IEEEXtreme 12.0, 24 மணி உலகளாவிய செய்நிரலாக்கம்போட்டி வெற்றிகரமாக நடைபெற்றது. | ஒக்டோபர் 20 |
| கலாசார நிகழ்வுகள் (Vaani Vizha 2018) | நவம்பர் 1 |
| இரண்டாம் வருட மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட ‘ஏரந்தில் 18’ | நவம்பர் 11 |
| UCSC உள்வாரி இளமாணி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுத் தினம் | திசம்பர் 29 |
| 1ம் வருட மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட வருடாந்த பிறித் வைபவமும் அன்னதானமும் | 2019 சனவரி 18 |

இந்த நிகழ்வுகளின் விபரங்கள் http://ucsc.cmb.ac.lk/events/இல் கிடைக்கப்பெறுவடன் அவைhttp://ucsc.cmb.ac.lk/ucsc-calendar/. இல் உள்ள UCSC இன் பொது நாட்காட்டியைப் பயன்படுத்தி அறிவிக்கப்பட்டன.

### 2.1.8 மாணவர் சாதனைகள்

#### 2.1.8.1 பாடத்திட்டத்துக்கு வெளியிலான செயற்பாடுகள்

மாணவர்கள் அவர்களது அறிவு, தேர்ச்சி, மனப்பாங்கு மற்றும் மனநிலையை மேம்படுத்துவதற்காக பாடத்திட்டத்துக்கு வெளியிலான செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்குஊக்குவிக்கப்பட்டனர். அதே நேரம், அத்தகைய பங்குபற்றுதலானது UCSC மற்றும் அதன் மாணவர்கள் பொருட்டு நல்லதொரு வெளிபுகழை வழங்குகிறது. 2018இல் சாதனை விபரங்களை பின்வரும் பட்டியல் வழங்குகிறது.

| இல. | போட்டி | சாதனை |
|---|---|---|
| 1 | **Codefest**<br>SLIIT இனால் ஒழுங்குசெய்யப்பட்ட ஓரிரவு ஹக்கதொன். | 1ம் இடம் |
| 2 | **SHECODERess V2.0**<br>ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் WIE இனால் ஒழுங்குசெய்யப்பட்ட குறியிடல் போட்டி | 1ம் இடம், 1ம் வீரமுதல்வர்&<br>2ம் வீரமுதல்வர் |

| | | |
|---|---|---|
| 3 | **IEEE Xtreme** | இலங்கையில் 9ம் இடம் முதல்தர 40 (இலங்கை) |
| 4 | **#IAMHER** லங்கன் ஏஞ்சல் நெட்வர்க் அன்ட் டயலொக் ஐடியாமாட் இனால் ஒழுங்குசெய்யப்பட்ட ஸ்டாட்அப் ஸ்பொட்லயிட் | 1ம் இடம் 2ம் வீரமுதல்வர் |
| 5 | **Woman up** இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 'வுமன் அப்' வீடியோ போட்டி | 3ம் இடம் |
| 6 | **Dream Venture** சிறந்த கருத்து போட்டி | 1ம் இடம் |
| 7 | **பல்கலைக்கழகங்களுக்கிடையிலான வினாவிடைப் போட்டி** கொ.பா.ப. IEEEமாணவர் கியைினால் ஒழுங்குசெய்யப்பட்டது. | 2ம் வீரமுதல்வர் |
| 8 | **Realhack -2018** | 1ம் இடம் |
| 9 | **Let me hack v1.0** | வெற்றியாளர் |
| 10 | **Google Summer of code** UCSC 7 இளமாணி மாணவர்கள் சமர் கோட் 2018 ஐ வெற்றிகரமாக நிறைவுசெய்தனர். | 7 மாணவர்கள் நிறைவு |
| 11 | **Shruthi' 18** தழுவு பாடல் போட்டி | வெற்றியாளர் |
| 12 | **சிறந்த தேசிய தர த.தொ.தொ.விருதுகள் (NBQSA) 2018** | வெள்ளி விருது |
| 13 | **SLIIT-CODEFEST "Net Com" Padcet Tracer போட்டி 2017** | வெண்கல விருது |
| 14 | **IEEESLSYWC'17 சிறந்த மாணவர் செயற்பாடு** | வெற்றியாளர் |
| 15 | **தகவல் பாதுகாப்பு வினாவிடைப் போட்டி2018** இலங்கை CERT, ICTA &தொலைதொடர்பு அமைச்சு ஆகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்டது. | 2ம் வீரமுதல்வர் |

### 2.1.8.2 மாணவர் சாதனைகள் - விளையாட்டுக்கள்

உடற்கல்வித் துறையினால் ஒழுங்குசெய்யப்பட்ட விளையாட்டு செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு UCSC மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். 2018இன் முக்கிய செயற்பாடுகள் மற்றும் சாதனைகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| பீ.டி.என்.சி.பதிராஜ | 2018- பீடங்களுக்கிடையில்-800m 2ம் இடம்<br>2018- பீடங்களுக்கிடையில்- 400m 3ம் இடம் |
| டி.எம்.சி.பொன்னம்பெரும | கொ.ப. வர்ணம், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018- கால் இறுதி |

| | |
|---|---|
| டப்.ஏ.எஸ்.ஜே.வீரசிங்க | 2018 புதியவர் 3000m சம்பியன்ஷிப்<br>2018 பீடங்களுக்கிடையிலான 3000m துணைவீரமுதல்வர்<br>2018 புதியவர் ஹொக்கி 2ம் துணைவீரமுதல்வர்<br>2018 பீடங்களுக்கிடையிலான ஹொக்கி வீரமுதல்வர் |
| எஸ்.என்.கால்லகே | 2018 புதியவர் சதுரங்கம் பெண்கள் 1ம் துணைவீரமுதல்வர் |
| ஐ.லோகேஸ்வரன் | சதுரங்கம்1ம் துணைவீரமுதல்வர் |
| எம்.எம்.வய்.எஸ்.வய்.திலகசிறி | வர்ணம் பெற்றவர் 2018<br>பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 - கால் இறுதி<br>பீடங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணைவீரமுதல்வர் |
| டி.ரீ.ஏ.எஸ்.ரீ.செனவிரத்ன | FISU உலக பல்கலைக்கழக பூப்பந்தாட்டம் சம்பியன்ஷிப்(மலேசியா) 2018- பங்கேற்பு<br>பூப்பந்தாட்டம் பொருட்டு கொ.ப. வர்ணம் -2018<br>சிறந்த வீரர் விசேட விருது- பூப்பந்தாட்டம்-2018<br>பூப்பந்தாட்டத்தில் SLUSA சருவதேச பங்பேற்புக்கான விசேட விருது -2018<br>பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பூப்பந்தாட்டம் சம்பியன்ஷிப் 2018 - கால் இறுதி<br>பீடங்களுக்கிடையிலான பூப்பந்தாட்டம் சம்பியன்ஷிப் 2018 -4ம் இடம்<br>பீடங்களுக்கிடையிலான மேசைப்பந்து சம்பியன்ஷிப் 2018 -3ம் இடம்<br>புதியவர் பூப்பந்தாட்டம் சம்பியன்ஷிப் 2018 - துணைவீரமுதல்வர்<br>புதியவர் டென்னிஸ் சம்பியன்ஷிப் 2018- 3ம் இடம்<br>புதியவர் மேசைப்பந்து சம்பியன்ஷிப் 2018- பங்கேற்பு<br>புதியவர் படகோட்டல் 2018- பங்கேற்பு |
| பீ.சி.விஜேசேன | புதியவர் படகோட்டல் 1ம் இடம்,<br>புதியவர் றக்பி2ம் இடம்,<br>புதியவர் ஹொக்கி 3ம் இடம்,<br>புதியவர் பவர்லிப்டிங் 2ம் இடம்,<br>புதியவர் மல்யுத்தம் 4ம் இடம்,<br>புதியவர் நீச்சல் பங்கேற்பு |
| எல்.எம்.மொஹோட்டி | புதியவர் நீச்சல் போட்டி 2018<br>25m ப்ரீஸ்டைல் - 3ம் இடம்<br>25m பாக்ஸ்ரோக் - 3ம் இடம்<br>25*4 ப்ரீஸ்டைல் ரிலே- 2ம் இடம் |
| பீ.சி.நாணயக்கார | புதியவர்- ஹொக்கி 3ம் இடம்<br>புதியவர் - கராத்தே 3ம் இடம்<br>பீடங்களுக்கிடையிலான ஹொக்கி 2ம் இடம் |
| ஆர்.டப்.ரவிந்து | புதியவர் 2018 கரம் 1ம் துணை வீரமுதல்வர்<br>எல்லே 2ம் வீரமுதல்வர் |
| கே.டப்.ஆர்.உதயங்க | புதியவர் 2018 ப்ரீஸ்டைல் மல்யுத்தம் 3ம் இடம்<br>புதியவர் 2018 தடை தாண்டம் 3ம் இடம் |
| டி.எம்.யு.தில்ருக்ஷி | புதியவர் 2ம் துணை வீரமுதல்வர் |
| ஏ.எம்.ரீ.என்.அமரசிங்க | புதியவர் 3ம் இடம் டென்னிஸ் |
| டப்.கே.யு.மதுமல்கா | புதியவர் பூப்பந்தாட்டம் துணை வீரமுதல்வர் 2018 |
| ஐ.ஏ.ரீ.ஆர்.பர்னாந்து | புதியவர் கரம் 3ம் இடம் 2018 |
| ஜே.பீ.ஈ.தில்ஷானி | புதியவர் கரம் பெண்கள் 2ம் துணை வீரமுதல்வர் |

| | |
|---|---|
| எச்.பி.பீ.ஹத்துருசிங்க | புதியவர் கிரிக்கற் 2ம் துணை வீரமுதல்வர் |
| ஜி.ஏ.பீ.மதுரங்க | புதியவர் எல்லே 2ம் துணை வீரமுதல்வர் |
| பீ.ஐ.ஏ.குணவர்தன | புதியவர் ஹொக்கி 3ம் இடம் |
| ஆர்.பீ.ரீ.அமந்தா | புதியவர் ஹொக்கி 3ம் இடம் |
| எஸ்.டப்.ஏ.ரீ.கருணாரத்ன | புதியவர் ஈட்டி எறிதல் 2ம் இடம் |
| சி.குலதுங்க | புதியவர் போட்டி ஹொக்கி 2018-2ம் துணை வீரமுதல்வர்<br>பீடங்களுக்கிடையிலான ஹொக்கி 2018 – துணை வீரமுதல்வர் |
| பீ.டி.சி.ஜி.விஜேசேகர | புதியவர் போட்டி 2018<br>கரம் 3ம் இடம் |
| எம்.டப்.ஜி.ஆர்.சி.நவரத்ன | புதியவர்போட்டிகரம்3ம் இடம் |
| பீ.பீ.சந்தறுவன் | புதியவர் படகோட்டல் ஜாம்பவான்கள் 2018<br>புதியவர் பூப்பந்தாட்டம் துணை வீரமுதல்வர் 2018 |
| எஸ்.எச்.எம்.அமரசூரிய | புதியவர் றக்பி வீரமுதல்வர், புதியவர் பாரம் தூக்குதல் 3ம் இடம் |
| வீ.என்.அமரவீர | புதியவா டென்னிஸ்2018- 2ம் துணைவீரமுதல்வர்<br>புதியவர் சதுரங்கம் 2018 - 1ம் துணைவீரமுதல்வர் |
| டப்.ஜி.எம்.எஸ்.ஆர்.பெரேரா | புதியவர் சுற்றுப்போட்டி- றக்பி, பூப்பந்தாட்டம் மற்றும் ஹொக்கி இல் துணைவீரமுதல்வர்<br>மல்யுத்தம் - ஜாம்பவான் |
| ஜே.எம்.ஏ.ஐ.யு. ஜயமான்ன | புதியவர் சதுரங்கம் - ஜாம்பவான்கள் |
| பி.ஏ.எஸ்.மதுஷிகா | பீடங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 – துணை வீரமுதல்வர்<br>பீடங்களுக்கிடையிலானபுதியவர் ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணை வீரமுதல்வர் |
| எஸ்.எஸ்.ஜயலத் | பீடங்களுக்கிடையிலானகூடைப்பந்தாட்டம் சம்பியன்ஷிப் 2018 – துணை வீரமுதல்வர் |
| கே.எம்.ரீ.எச்.பி.அயகம | பீடங்களுக்கிடையிலான கரம்1ம் இடம் |
| எம்.ஜீ.பீ.ஜயசங்க | பீடங்களுக்கிடையிலான எல்லே2ம் துணை வீரமுதல்வர் |
| பி.எம்.ரீ.பீ.டி.பஸ்நாயக்க | பீடங்களுக்கிடையிலான புதியவர் கிரிக்கற் 3ம் இடம் |
| பி.எம்.எஸ்.பி.நவரத்ன | பீடங்களுக்கிடையிலான புதியவர் போட்டி - கூடைப்பந்தாட்டம் - வீரமுதல்வர் |
| சி.குலதுங்க | பீடங்களுக்கிடையிலான ஹொக்கி 2018 துணை வீரமுதல்வர் |
| சி.பீ.சாகர ரத்னசேகர | பீடங்களுக்கிடையிலான ஹொக்கி 3ம் இடம். |
| ரீ.எம்.செனவிரத்ன | பீடங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் - துணை வீரமுதல்வர்- 2018 |
| டி.எம.பீ.பீ.பி.கருணாதிலக | பீடங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணை வீரமுதல்வர்<br>புதியவர் சுற்றுப்போட்டி ஹொக்கி 2018 – துணை வீரமுதல்வர் |
| எஸ்.ரீ.எஸ.முத்துமால | பீடங்களுக்கிடையிலான கராத்தே 2ம் துணை வீரமுதல்வர்<br>புதியவர் கராத்தே 2ம் துணை வீரமுதல்வர்<br>புதியவர் எல்லே 2ம் துணை வீரமுதல்வர்<br>புதியவர் கிரிக்கற் 2ம் துணை வீரமுதல்வர் |
| கே.எல்.பீ.எம்.செனரத் | பீடங்களுக்கிடையிலான றக்பி- 2ம் துணைவீரமுதல்வர் |
| எம்.ஏ.சி.சில்வா | பீடங்களுக்கிடையிலான ஸ்கிரபிள் சம்பியன்ஷிப் 2018 - 1ம் |

| | |
|---|---|
| | துணைவீரமுதல்வர் |
| எஸ்.என்.காரியவசம் | பீடங்களுக்கிடையிலான ஸ்கிரபிள் சுற்றுப்போட்டி2018: பெண்கள் பிரிவு- 2ம் இடம் |
| எச்.பீ.சமரவீர | பீடங்களுக்கிடையிலான ஸ்கிரபிள் சுற்றுப் போட்டி2018(பெண்கள் பிரிவு) : 1ம் துணைவீரமுதல்வர் |
| பி.ஏ.மெதவத்த | பீடங்களுக்கிடையிலான நீச்சல் போட்டி 2018 - ஜாம்பவான்கள்<br>புதியவர் நீச்சல்போட்டி 2018 - ஜாம்பவான்கள்<br>புதியவர் டென்னிஸ் 2018 - 2ம் துணைவீரமுதல்வர்<br>புதியவர் மேசைப்பந்து- 2ம் துணைவீரமுதல்வர் |
| ஏ.டப்.பி.எம்.விஜேதுங்க | பீடங்களுக்கிடையிலான தயிக்வொண்டோ 3 ம் இடம் 2018 |
| ஓ.கே.சேனாநாயக்க | பீடங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம் சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணைவீரமுதல்வர் |
| எஸ்.டி.எம்.எச்.எஸ்.பண்டார | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான100*4 ஆண்கள் அஞ்சலோட்டம் 2018- 1ம் இடம் |
| டி.சீ.எச்.முத்துகுமாரகே | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டம் சம்பியன்ஷிப் - 3ம் துணைவீரமுதல்வர் |
| எம்.எல்.ஏ.எஸ்.யாப்பா | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கரம் சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணைவீரமுதல்வர்<br>கொ.ப. வர்ணம் 2018 –கரம் |
| டப்.பி.நிபுண சரத்சந்திர | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான சதுரங்க சம்பியன்ஷிப் 2018-துணை வீரமுதல்வர் |
| எல்.சீ.எஸ்.த சில்வா | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான சதுரங்கம் சம்பியன்ஷிப் 2018 - ஜாம்பவான்<br>பல்கலைக்கழகங்களுக்கிடையிலான டென்னிஸ˙ சம்பியன்ஷிப் 2018 - ஜாம்பவான்<br>கொ.ப. வர்ணம் சதுரங்கம் மற்றும் டென்னிஸ் இரண்டிலும் |
| எம்.எச். ஜவாஹீர் | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்டம் சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணை வீரமுதல்வர்<br>2018 பொருட்டு வர்ண விருது- உதைப்பந்தாட்டம் |
| சி.பீ.எஸ். ரத்னசேகர | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி 3rd. |
| கே.இஷாரா மதுஷானி | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018-2ம் துணை வீரமுதல்வர் |
| எம்.டி. ஹசினி ரங்கல டயஸ் | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 – துணை வீரமுதல்வர்<br>புதியவர் நீச்சல் சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணை வீரமுதல்வர்- ப்ரீஸ்டைல் ரிலே |
| எஸ்.ஐ.என்.பர்னாந்து | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஆண்கள் றக்பி2018 - 2ம் துணை வீரமுதல்வர்<br>றக்பி பொருட்டு கொ.ப. வர்ணம் |
| எஸ்.இசெட்.மொகஹட் | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஸ்கிரபிள் சம்பியன்ஷிப் (பெண்கள்) - 2018<br>பீடங்களுக்கிடையிலான ஸ்கிரபிள் துணைவீரமுதல்வர்(பெண்கள்) - 2018<br>கொ.ப. திறமை - ஸ்கிரபிள் 2018 |
| டி.என்.விக்ரமரத்ன | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஸ்கிரபிள்சம்பியன்ஷிப் - வெற்றியாளர்<br>பீடங்களுக்கிடையிலான ஸ்கிரபிள் சுற்றுப்போட்டி- வீரமுதல்வர் |
| சி.எல். பியன்வில | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான நீச்சல் சம்பியன்ஷிப் 2018 - வீரமுதல்வர் |

| | |
|---|---|
| | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான படகோட்டம் சம்பியன்ஷிப் 2018 - வீரமுதல்வர் |
| ஏ.டப்.பி.எம்.விஜேதுங்க | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தயிக்வொண்டோ ஒதுக்கு வீரர்.<br>பீடங்களுக்கிடையிலான தயிக்வொண்டோ 3ம் இடம் |
| பீ.கே.சிறிசேன | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மல்யுத்தம் சம்பியன்ஷிப் 2018 - 3ம் துணை வீரமுதல்வர் |
| டப்.எம்.டி.சசிமினா | பீடங்களுக்கிடையிலான எல்லே 2ம் துணை வீரமுதல்வர் |
| பி.ஏ.எஸ்.மதுஷிகா | பீடங்களுக்கிடையிலான ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 – துணை வீரமுதல்வர்<br>பீடங்களுக்கிடையிலான புதியவர் ஹொக்கி சம்பியன்ஷிப் 2018 - 2ம் துணை வீரமுதல்வர் |
| ரீ.கே.ஜயசேகர | அழைப்பு பல்கலைக்கழகங்களுக்கிடையிலானஸ்கிரபிள் போட்டி2018 -களனிபல்கலைக்கழகம்- ஜாம்பவான்கள்,<br>பீடங்களுக்கிடையிலான ஸ்கிரபிள் 2018 – துணை வீரமுதல்வர் |
| எம்.எப்.எப்.கமால்டீன் | தயிக்வொண்டோ புதியவர் துணை வீரமுதல்வர்<br>கூடைப்பந்தாட்டம் ஆண் புதியவர் துணை வீரமுதல்வர் |
| வய்.எம்.எஸ்.வீ.பண்டார | சிறந்த மென்பொருள் உற்பத்தி 2018 –வெள்ளி விருது |
| டி.சி.எச்.முத்துகுமாரகே | கொ.ப. வர்ணம்2018 - கூடைப்பந்தாட்டம்<br>பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் 2018 - 3ம் துணைவீரமுதல்வர்<br>புதியவர் தட, கள சம்பியன்ஷிப்2018 5000m - 1ம் இடம்<br>புதியவர் கூடைப்பந்தாட்ட சம்பியன்ஷிப்2018 - 1ம் துணை வீரமுதல்வர்<br>புதியவர் தட, கள சம்பியன்ஷிப்2018 1500m - 2ம் துணைவீரமுதல்வர்<br>புதியவர் தட, கள சம்பியன்ஷிப் 2018 400m தடைதாண்டல்- 2ம் துணை வீரமுதல்வர் |

## 2.1.9 பட்டமளிப்பு - 2018

கணினி விஞ்ஞானம், தகவல் முறைமை மற்றும் மென்பொருள் பொறியியல் பிரிவுகள் ஆகிய 5 பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து 244 மாணவர்கள் பொருட்டு பட்டமளிப்பு விழா 2018 யூலை 25 ஆம் திகதி நடைபெற்றது. தகவல் முறைமையில் விஞ்ஞானமாணி மற்றும் தகவல் முறைமையில் கௌரவ விஞ்ஞானமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மாணவர்கள் அவர்களது உயர் தர பிரிவுக்கமைய பகுப்பாய்வுசெய்யப்படுகின்றன.(அட்டவணைகள் 2.2.10 ஆ and 2.2.10 இ)

**அட்டவணை *2.1.9.* – அ: *UCSC* பட்டதாரிகளின் இறுதி கல்வி செயலாற்றுகை – *2018***

| கற்கை நிகழ்ச்சித்திட்டம் | பிரதான/ திரும்ப | இறுதிப் பரீட்சை பொருட்டு தோற்றிய மாணவர்களின் எண். | | பட்டம்பெற்ற மாணவர்களின் மொத்த எண். | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | முதலாம் வகுப்பு | | இரண்டாம் மேல் | | இரண்டாம் கீழ் | | சித்தி | | மொத்தம் | | சித்திவீதம் % | |
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்.மாணி | பிரதான | 76 | 38 | | | 3 | 3 | 12 | 6 | 54 | 29 | 69 | 38 | 90 | 100 |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (க/ஆ 2013/2014) | | | | | | | | | | | | | | | |
| தகவல் முறைமையில் விஞ்.மாணி (க/ஆ 2013/2014) | பிரதான | 35 | 32 | 2 | | 5 | 12 | 8 | 5 | 18 | 15 | 33 | 32 | 91 | 100 |
| கணினி விஞ்ஞானத்தில் (கௌரவ) விஞ்.மாணி (க/ஆ 2012/2013) | பிரதான | 9 | 11 | 3 | 6 | 2 | 2 | 4 | 3 | | | 9 | 11 | 100 | 100 |
| தகவல் முறைமையில் (கௌரவ) விஞ்.மாணி (க/ஆ 2012/2013) | பிரதான | 5 | 15 | 3 | 10 | 1 | 5 | 1 | | | | 5 | 15 | 100 | 100 |
| மென்பொருள் பொறியியலில் (கௌரவ) விஞ்.மாணி (க/ஆ 2012/2013) | பிரதான | 14 | 6 | 4 | 3 | 3 | 1 | 4 | 1 | 3 | 1 | 14 | 6 | 100 | 100 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்.மாணி (க/ஆ2010/2011) | திரும்ப | 2 | 1 | | | | | | | 2 | 1 | 2 | 1 | 100 | 100 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்.மாணி (க/ஆ2012/2013) | திரும்ப | 14 | 1 | | | | | | | 6 | 1 | 6 | 1 | 43 | 100 |
| தகவல் முறைமையில் விஞ்.மாணி (க/ஆ2011/2012) | திரும்ப | 2 | 3 | | | | | | | | 1 | | 1 | 0 | 33 |
| தகவல் முறைமையில் (கௌரவ) விஞ்.மாணி (க/ஆ2011/2012) | திரும்ப | 1 | | | | | | 1 | | | | 1 | | 100 | |

**அட்டவணை *2.1.9.* – ஆ: உ/த கல்விப்பிரிவுடன் *த.மு.மாணி* பட்டதாரிகளின் செயலாற்றுகை**

| வகுப்பு | | முதலாம் | | | இரண்டாம் மேல் | | | இரண்டாம் கீழ் | | | சித்தி | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பால் | | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ | |
| பிரிவு | **M** | 1 | | 1 | 4 | 7 | 11 | 4 | 2 | 6 | 6 | 6 | 12 | 30 |
| | **B** | | | | 1 | 2 | 3 | 4 | 1 | 5 | 1 | 1 | 2 | 10 |
| | **C** | 1 | | 1 | | 3 | 3 | | 2 | 2 | 10 | 8 | 18 | 24 |
| | **A** | | | | | | | | | | 1 | 1 | 2 | 2 |
| மொத்தம் | | **2** | | **2** | **5** | **12** | **17** | **8** | **5** | **13** | **18** | **16** | **34** | **66** |

M – கணிதம், B – உயிரியல், C- வர்த்தகம், A – கலை

**அட்டவணை *2.1.9.–* இ: உ/த கல்விப்பிரிவுடன் *த.மு.மாணி(கௌரவ)* பட்டதாரிகளின் செயலாற்றுகை**

| வகுப்பு | | முதலாம் | | | இரண்டாம் மேல் | | | இரண்டாம் கீழ் | | | சித்தி | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பால் | ஆ | பெ | மொ ா | ஆ | பெ | மொ ா | ஆ | பெ | மொ ா | ஆ | பெ | மொ ா | |
| பிரிவு | **M** | 1 | 6 | 7 | | | | 2 | | 2 | | | | 9 |
| | **B** | 2 | 3 | 5 | | 3 | 3 | | | | | | | 8 |
| | **C** | | 1 | 1 | 1 | 1 | 2 | | | | | | | 3 |
| | **A** | | | | | 1 | 1 | | | | | | | 1 |
| மொத்தம் | | **3** | **10** | **13** | **1** | **5** | **6** | **2** | | **2** | | | | **21** |

M – கணிதம், B – உயிரியல், C- வர்த்தகம், A – கலை

## 2.1.10 இளமாணி பட்ட விருதுகள்

UCSC இல் உள்ள பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் பொருட்டு பல்வேறு பட்டமளிப்பு விருதுகள் பிரகடனப்படுத்தப்படுகின்றன. இந்த விருதுகள் பொருட்டு முன்னரே வரையறுக்கப்பட்ட பிரமாணம் ஒன்று உள்ளதுடன் சகல தெரிவுகளும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படுகின்றன. 2018 யூலை 25ஆம் திகதி ப.ஞா.ச.மா.ம.(BMICH) இல் நடைபெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் வழங்கப்பட்ட விருதுகளை பின்வரும் அட்டவணை விபரிக்கிறது. UCSC இல் சகல கற்கைப் பிரிவுகளுக்கும் பொதுவான பேராசி. வீ.கே.சமரநாயக்க விருது எச்.எஸ்.யு.லியனகே (சுட்டிலக்கம்:13000642)இற்கு வழங்கப்பட்டது. 2018 யூலை மாதத்தில் நடைபெற்ற பட்டமளிப்பின்போதுகணினி விஞ்ஞானம், தகவல் முறைமை மற்றும் மென்பொருள் பொறியியல் ஆகிய பிரிவுகளில் வழங்கப்பட்ட விருதுகளின் விபரங்களை பின்வரும் அட்டவணைகள் தருகின்றன.

**அட்டவணை *2.1.10. –* அ: தகவல் முறைமை பட்ட நிகழ்ச்சித்திட்டம் பொருட்டான பட்டமளிப்பு விருதுகள்*– 2018***

| விருதின் பெயர் | விருது பெற்றவரின் பெயர் |
|---|---|
| மூன்றுவருட பட்டத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான சீப்றா டெக்னொலோஜிஸ் உன்னத விருது – 2017 | கமயடிகே ஜி.டி.பீ.எம். (சுட்டிலக்கம்: 14020221) |
| தொழிற்றுறை பயிற்சிவாய்ப்பில் சிறந்த செயலாற்றுகைக்கான டேவிட் பீரிஸ் குழு தங்கப் பதக்கம் - 2017 | கமயடிகே ஜி.டி.பீ.எம். (சுட்டிலக்கம்: 14020221) |
| தொழிற்றுறை பயிற்சிவாய்ப்பில் சிறந்த செயலாற்றுகைக்கான டேவிட் பீரிஸ் குழு தங்கப் பதக்கம் - 2016 | தேஷபிரிய ஜி.டப்.என்.ரீ. (சுட்டிலக்கம்: 13020102) |
| நான்குவருட பட்டத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான ஜஎப்எஸ் அகடமிக் உன்னத விருது – 2017 | சந்திரசிறி எச்.எம்.எஸ்.பீ.கே.(சுட்டிலக்கம்: 13020056) |
| சிறந்த இறுதி வருட செயற்றிட்டத்துக்கான சம்பத் வங்கி விருது – 2017 | சந்திரசிறி எச்.எம்.எஸ்.பீ.கே. (சுட்டிலக்கம்: 13020056)<br>ஹேரத் எச்.எம்.ஜி.சி. (சுட்டிலக்கம்: 13020196)<br>விக்ரமரத்ன ஜே.என்.டி.டப். (சுட்டிலக்கம்: 13020651)<br>குணதிலக எம்.டி.எச்.ஈ. (சுட்டிலக்கம்: 13020188)<br>ஹிடல்லஆரச்சி டி.டி. (சுட்டிலக்கம்: 13020201)<br>பெரேரா டப்.எம்.ஜ.சி.எஸ். (சுட்டிலக்கம்: 13020366) |

**அட்டவணை *2.1.10.* – ஆ*:* கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சித்திட்டம் பொருட்டான பட்டமளிப்பு விருதுகள் *– 2018***

| விருதின் பெயர் | விருது பெற்றவரின் பெயர் |
|---|---|
| மூன்றுவருட பட்டத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான வேச்சுசா அகடமிக் உன்னத விருது - 2017 | சனில்க கே.டப்.எஸ். (சுட்டிலக்கம்: 14001373) |
| கணினி விஞ்ஞானத்துக்கான பேராசி. மொகான் முணசிங்க விருது – 2017 | லியனகே எச்.எஸ்.யு. (சுட்டிலக்கம்: 13000642) |
| சிறந்த கணினி விஞ்ஞான இறுதி வருட செயற்றிட்டத்துக்கான இக்டா விருது – 2017 | பெரேரா எம்.ஜி.எஸ். (சுட்டிலக்கம்: 13000918) |
| தொழிற்றுறை பயிற்சிவாய்ப்பில் சிறந்த செயலாற்றுகைக்கான டேவிட் பீரிஸ் குழு தங்கப் பதக்கம் - 2016 | மதுரங்க ஜி.ஏ.ஏ.(சுட்டிலக்கம்: 13000683) |

**அட்டவணை *2.1.10.*– இ*:* மென்பொருள் பொறியியல் பட்ட நிகழ்ச்சித்திட்டம் பொருட்டான பட்டமளிப்பு விருதுகள் *– 2018***

| விருதின் பெயர் | விருது பெற்றவரின் பெயர் |
|---|---|
| மென்பொருள் பொறியியல்(கௌரவ)விஞ்ஞானமாணியில் சிறந்த செயலாற்றுகைக்கான ஜஎப்எஸ் விருது – 2017 | இந்திரயாப்பா கே.ஏ.கே. (சுட்டிலக்கம்: 13000454) |
| மென்பொருள் பொறியியல்(கௌரவ)விஞ்ஞானமாணியில் சிறந்த இறுதி வருட செயற்றிட்டத்துக்கான சோமா குணதிலக ஞாபகார்த்த விருது – 2017 | சந்தன பீ.ஏ.டி. (சுட்டிலக்கம்: 13000162)<br>தொடங்கொட டி.ஏ.பி.பீ. (சுட்டிலக்கம்: 13000349)<br>கான்சன ஜி.டி.டி. (சுட்டிலக்கம்: 13000535)<br>லியனகே சி.எம். (சுட்டிலக்கம்: 13000632) |
| மென்பொருள் பொறியியல்(கௌரவ)விஞ்ஞானமாணியில் சிறந்த இறுதி வருட செயலாற்றுகைக்கான விமல ஜயரத்ன ஞாபகார்த்த விருது - 2017 | இந்திரயாப்பா கே.ஏ.கே. (சுட்டிலக்கம்: 13000454) |

**அட்டவணை *2.1.10. – விசேடவிருதுகள்- 2018***

| விருதின் பெயர் | செயற்றிட்ட தலைப்பு | விருது பெற்றவரின் பெயர் |
|---|---|---|
| இ-கற்கை வகுதியில் வெற்றியாளர் விருது-பொது நலவாய மருத்துவ சங்கம் (CMA) மற்றும் இலங்கையின் சுகாதார இன்போமடிக்ஸ் சங்கம் (HSSL), கொழும்பு, இலங்கை | மெய்நிகர் தோற்றத்தைப் பயன்படுத்தி காடியோபுல்மொனரி ரிசஸ்சிடேஷன் பயிற்சி பொருட்டு தாங்கக்கூடிய தீர்வு | எச்.எஸ்.யு.லியனகே, லக்ஸ்மன் ஜயரத்ன, அருண முணசிங்க மற்றும் எம்.ஐ.ஈ.விக்ரமசிங்க |
| திறமை விருது வெற்றியாளர் - இ-சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு வகுதியில் சிறந்த இ-உள்ளடக்க பிரயோகங்கள், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு, இலங்கை | மெய்நிகர் தோற்றத்தைப் பயன்படுத்தி காடியோபுல்மொனரி ரிசஸ்சிடேஷன் பயிற்சி பொருட்டு தாங்கக்கூடிய தீர்வு | எச்.எஸ்.யு.லியனகே, லக்ஸ்மன் ஜயரத்ன, அருண முணசிங்க மற்றும் எம்.ஐ.ஈ.விக்ரமசிங்க |

### 2.1.11 வேலைவாய்ப்புத்திறன்

பெரும்பாலான மாணவர்கள் அவர்களது 3ம் வருட தொழிற்றுறை பயிற்சி வாய்ப்பின்போதுகூட த.தெ. தொழிற்றுறையிலுள்ள கம்பனிகளினால் கவர்ச்சிகரமான ஒப்பந்தங்களின்மேல் ஆட்சேர்க்கப்படுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது. பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத்திறன் விபரங்கள், சிறு வினாக்கொத்தினை பயன்படுத்துவதன்மூலம் பட்டமளிப்பு நேரத்தில் சேகரிக்கப்பட்டன. ஒவ்வொரு கற்கை பிரிவு தொடர்பில் UCSC பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத்திறன் விபரங்களை பின்வரும் அட்டவணை தருகிறது. **UCSC யிலுள்ள அனைத்து கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின்** வேலைவாய்ப்புத்திறன் வீதம் **90% விட மேற்பட்டதாகும்.**

**அட்டவணை *2.1.11. – அ: UCSC* இளமாணி மாணவர்களின் வேலைவாய்ப்புத்திறன் *- 2018***

| நிகழ்ச்சித்திட்டம் | பட்டம்பெற்ற எண்ணிக்கையினர் | பதிலளித்த எண்ணிக்கையினர் | தொழில்பெற்ற | தொழிலுக்காக காத்திருப்பு/ ஆர்வமில்லாதோர் |
|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானமாணி | 157 | 147 | 99% | 1% |
| தகவல் முறைமைமாணி | 87 | 86 | 91% | 9% |
| மொத்தம் | **244** | **233** | **95%** | **5%** |

## 2.2 பட்டப்பின் கற்கைகள்

### 2.2.1 முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம்

UCSCயில் அனைத்து முதுமாணிப் பட்டங்களும் ஒரு 15 தேர்ச்சித்திறனுடனான ஆராய்ச்சித் திட்டத்தினைக் கொண்ட கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி என அழைக்கப்படுகின்ற ஒரு முதுமாணிப் பட்டத்தினைத் தவிர, தற்பொழுது இ.த.க இல் மட்டம் 9 இல் முதுமாணிகளாகப் கற்பிக்கப்படுகின்றன. இந்த பட்டங்களின் விபரங்கள் 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகையுடன் சேர்த்து அடுத்த சில பிரிவுகளில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

#### 2.2.1.1 முதுமாணிப் பட்டங்கள்

2018 ஆம் ஆண்டில்,UCSC ஐந்து முதுமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியது. பொருத்தமான மாணவர்களின் சிறு பட்டியலைத் தயாரிப்பதற்கு தெரிவுப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன் பொருத்தமான மாணவர்கள் இனங்காண்பதற்காக கட்டமைக்கப்பட்ட புள்ளியிடும் திட்டத்தினைப் பயன்படுத்தி நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்றன.

- **கணினி விஞ்ஞான முதுமாணி (க.வி.மு.)**
  கணினி பட்டம் ஒன்றினை அல்லது சமமான தகைமைகளைக் கொண்டவர்கள் இந்தப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றனர். ஏனெனில் கணினி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படைக் கற்கைநெறிகளை கருத்திற்கொண்டு பாடவிதானம் வடிவமைக்கப்பட்டது. 2018இல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உள்ளெடுக்கப்பட்ட எண்ணிக்கை 97 மாணவர்கள் ஆகும். முதல் பட்ட தகைமைகள், தெரிவு சோதனை மற்றும் தெரிவு நேர்முகப்பரீட்சை ஆகியவற்றின் செயலாற்றுகையின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

- **தகவல் தொழில்நுட்ப முதுமாணி (த.தொ.மு)**

கணினியலுக்குத் தமது தொழிற் பாதையை மாற்ற அல்லது கணினியியலில் ஒரு பட்டப்பின் தகைமையைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் உள்ளவர்களுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் வழங்கப்படுகின்றது. கணினி சூழலில் பணியாற்றிய அனுபவம் உள்ள எந்தவொரு பட்டதாரியும், இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்க ஊக்கப்படுத்தப்படுகின்றனர். 2018 ஆம் ஆண்டு பொருட்டு இதற்கு உள்ளெடுக்கப்பட்ட எண்ணிக்கையினர் 94 ஆகும் என்பதுடன் பொருத்தமான மாணவர்களை இதற்கு தெரிவு செய்வதற்காக தெரிவு சோதனை ஒன்றும் நேர்முகப் பரீட்சைகளும் நடைபெற்றன.

- **தகவல் பாதுகாப்பு முதுமாணி (த.பா.மு.)**

தகவல் பாதுகாப்பு முதுமாணி, தகவல் பாதுகாப்புப் பரப்புகளில் ஒரு பட்டப்பின் தகைமையைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற பட்டதாரிகளுக்காக வடிவமைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தகவல் தொழில்நுட்பம், தகவல் முறைமைக் கணக்காய்வு மற்றும் தகவல் பாதுகாப்பு ஆகிய பரப்புகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு நடுத்தரத் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. 2018 ஆம் ஆண்டு பொருட்டு இதற்கு உள்ளெடுக்கப்பட்ட எண்ணிக்கையினர் 30 ஆகும் என்பதுடன் பொருத்தமான மாணவர்களை இதற்கு தெரிவு செய்வதற்காக தெரிவு சோதனை ஒன்றும் நேர்முகப் பரீட்சைகளும் நடைபெற்றன.

- **கணினிவழி பாதுகாப்பு முதுமாணி**

கணினிவழி பாதுகாப்பு முதுமாணி,Asia@connect TEIN கோப்பரேஷன் நிலையம், ஐரோப்பிய கொமிஷன் ஆகியவற்றுடன் ஒத்துழைப்பில் 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட கணினிவழி பாதுகாப்பு தொலை சர்வதேச முதுமாணித் திட்டமொன்று என்பதுடன் அது, வலையமைப்பு பாதுகாப்பு மற்றும் கணினிவழி குற்ற கண்டுபிடிப்பிலுள்ள பரந்த பாடப்பரப்புக்களை உள்ளடக்குகிறது. இந்நிகழ்ச்சித்திட்டம் இணையவழியில் (தொலைக்கல்வி) நிருவகிக்கப்படுவதுடன் பிரயோக அமர்வுகளுக்கும் அரையாண்டு பரீட்சைகள் பொருட்டும் மாணவர்கள் UCSC இற்கு சமுகமளிக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், கம்போடியா, லாவோஸ், மியன்மார், நேபாளம் மற்றும் ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தேசிய ஆராய்ச்சி மற்றும் கல்வி வலையமைப்பில் இருந்தான 16 பங்குபற்றுநர்கள் பொருட்டு இந்நிகழ்ச்சித்திட்டம் குறிப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கணினிவழி பாதுகாப்பு முதுமாணி பட்ட நிகழ்ச்சியானது, 2008 ஆம் அண்டிலிருந்து வெற்றிகரமாக தொடர்ந்துவரும் UCSCஇல் தகவல் பாதுகாப்பில் தற்போதைய முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னுரித்துத்திட்டமாகும்.

- **வியாபார பகுப்பாய்வு முதுமாணி**

வியாபர செயலாற்றுகைக்கும் தரவு அடிப்படையிலான புதிய தந்திரோபாயங்களை விருத்திசெய்தலுக்கும் முதற்தர கவனத்தை செலுத்துவதுடன் நவீன நாள் வியாபார தேவைகளுடன் தரவு விஞ்ஞானத்தை கலக்கின்ற தோன்றும், எதிர்காலத்துக்குரிய துறையொன்றாக வியாபார பகுப்பாய்வினை UCSC இனங்கண்டுள்ளது. அதற்கிணங்க, தரவு விஞ்ஞானத்தின் தோன்றும் போக்குகளுக்கு வழிவகுக்கும் வகையில் வியாபார பகுப்பாய்வு முதுமாணி வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது உள்ளெடுப்பு 2019 இல் இடம்பெறவுள்ளது. 2019ஆம் ஆண்டு பொருட்டு இதன் உள்ளெடுப்பு எண்ணிக்கையினர் 40 ஆக இருக்கும் என்பதுடன் இதற்கான பொருத்தமான மாணவர்களை தெரிவு செய்வதற்கு தெரிவு சோதனையொன்றும் நேர்முகப்பரீட்சைகளும் நடைபெறும்.

அனைத்து முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களும் இரண்டு வருடங்கள் மற்றும் நான்கு கல்வி அரையாண்டுகளைக் கொண்டிருக்கின்றன. அத்துடன், தகவல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான விரிவுரைகள் தவிர, வார இறுதி நாட்களில் மாத்திரம் நடைபெறுகின்றன. சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்கள் தனியார் அல்லது பொதுத் துறை நிறுவனங்களின் முழு நேர ஊழியர்களாக இருந்தபோதிலும், நிகழ்ச்சித் திட்டத்திற்கான வேளைப்பளு மற்றும்

தேர்ச்சித்திறன்களின் எண்ணிக்கை இணங்க, அவர்கள் முழு நேர நிகழ்ச்சித் திட்டங்களுக்குச் சமமானவை ஆகும். இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் வருடாந்தம் தொடங்குகின்றமையினால், வருடத்தின் எந்தக் காலத்திலும் இரண்டு தொகுதி மாணவர்கள் இருக்கின்றனர். ஒரு தொகுதி மாணவர்கள் முதல் வருட கற்கைநெறிகளைத் தொடர மற்றைய தொகுதி இரண்டாம் வருடக் கற்கைகளில் இருப்பர்.

#### 2.2.1.2 மாணவர் சேர்ப்பு

2017/2018 உள்ளெடுப்பிற்கான MIT,MSC,MIS கற்கைநெறிகள் 2018 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர் ஆட்சேர்ப்பு 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான கல்விசார் நேர அட்டவணை கற்கைநெறியின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டதுடன் கலப்பு கற்றல் கலாசாரம் மெய்நிகர் கற்றல் சூழல் ஊடாக http://pgvle.ucsc.cmb.ac.lk நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள அனைத்து கற்கைநெறிகளுக்கும் ஊக்கப்படுத்தப்பட்டது. ஆகவே, நேரடி விரிவுரைகளுக்கு முன்பும் பின்பும் கற்றல் செயல்பாடுகளை ஊக்குவிப்பது, மேலும் அவர்கள் வேலை நாட்களில் UCSC வளாகத்தில் இல்லாதிருந்த போதிலும் மாணவர்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்வது சாத்தியமாக இருந்தது. 2018 ஆம் ஆண்டு முதுமாணிகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர் கைந்நூல் 2018 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டு அதன் இயங்கலை வடிவம் UCSC இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.http://www.ucsc.cmb.ac.lk/pg.

***அட்டவணை 2.2.1.2. – அ: 2018இல் பட்டப்பின் மாணவர் சேர்ப்பு***

| பட்ட நிகழ்ச்சித்திட்டம் | உள்ளெடுப்பு 2017/18 | 1ஆம் வருட மாணவர்கள் | | 2ஆம் வருட மாணவர்கள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | புதிய | திரும்ப | புதிய | திரும்ப | |
| கணினி விஞ்ஞான முதுமாணி | 97 | 97 | 55 | 84 | 15 | **251** |
| தகவல் தொழில்நுட்ப முதுமாணி | 92 | 92 | 34 | 76 | 32 | **234** |
| தகவல் பாதுகாப்பு முதுமாணி | 28 | 28 | 01 | 27 | | **56** |
| **பட்ட நிகழ்ச்சி** | **உள்ளெடுப்பு 2017/18** | **1ஆம் வருட மாணவர்கள்** | | **2ஆம் வருட மாணவர்கள்** | | **மொத்தம்** |
| | | புதிய | திரும்ப | புதிய | திரும்ப | |
| கணினி பாதுகாப்பு முதுமாணி | 15 | 15 | | | | **15** |
| மொத்தம் | **232** | **232** | **90** | **187** | **47** | **556** |

முதுமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களிற்கான மாணவர் பதிவுக் கட்டணம் UCSC யின் தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தின் முக்கிய மூலமாக இருக்கின்றது. ஆகவே, நிகழ்ச்சித்திட்டத்தினை உரிய நேரத்தில் நடாத்துவதற்கு மற்றும் ஒரு தரமான சேவைக்கு கல்விவார் பணியாளர்களின் தீவிர பங்கேற்பு மற்றும் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. பல்வேறு தனியார் நிறுவனங்கள் ஒத்த முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்கியிருக்கின்றன. அந்த நிறுவனங்கள் வளவாளர்களுக்கு விரிவுரைக் கட்டணங்களின் உயர் விகிதங்களை வழங்குவதனால் UCSC யின் பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒரு சவால் உள்ளது. ஆகையால், கல்விசார் பணியாளர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பினை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் UCSC செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொள்வதற்காக, வளவாளர்களுக்கான சந்தை வீதங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஆதரவு, பணியாளர் பயிற்சி மற்றும் நலன்புரி மற்றும் நிறுவன மேம்பாடு ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, அவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டப் பாதீடு மேம்படுத்தப்பட்டு உள்ளது. பல்கலைக்கழக முறைமையின் தற்போதைய பணி நெறிகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்க பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவது கல்விசார் பணியாளர்களுக்கு கட்டாயமானதல்ல என்பது இங்கு முக்கியமானதாக கவனிக்கத்தக்கது.

### 2.2.1.3 பதவியினர் பங்குபற்றுகை

**அட்டவணை *2.2.1.3.* – அ: முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தில் நேரடிபதவியினர் பங்குபற்றுகை**

| பட்ட நிகழ்ச்சித்திட்டம் | கல்விசார் | | | மேற்பார்வை | | நிருவாகம் | கல்வ ிசாரா |
|---|---|---|---|---|---|---|---|
| | UCSC | இடைவருகை (உள்நாடு) | இடைவருகை(வெளிநாடு) | UCSC | இடைவருகை | | |
| **MCS** | 24 | 05 | | 34 | | 02 (பரீட்சை/ பட்டப்பின்) | **05** |
| **MIT** | | | | 18 | | | |
| **MIS** | | 07 | 05 | 07 | 01 | | |
| **MC** | 02 | 03 | 01 | | | | |
| மொத்தம் | **26** | **15** | **06** | **59** | **01** | **02** | **05** |

முதுமாணிபட்டநிகழ்ச்சித்திட்டம் பொருட்டு பதவியினருக்கு நேரடியாக செலுத்தாத போதிலும் பெரும்பாலான பதவியினர் முதுமாணிநிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதிலும் முகாமைசெய்வதிலும் மறைமுகமாக பங்குபற்றினர் என்பதனை குறிப்பிடுதல் மிகவும் முக்கியமானதாகும். ஆகவே வருமானத்தில் 2%, பதவியினர் நலன்புரி மற்றும் நிறுவகத்தின் பொதுவான பயிற்சி நடவடிக்கைகள் பொருட்டு ஒதுக்கப்படுகிறது. 2018 நவம்பர் 12ஆம் 13ஆம் திகதிகளில் நடைபெற்ற பட்டப்பின் பட்டமளிப்பின்போது பல்வேறு பட்டதாரிகள் அவர்களது செயலாற்றுகையின் அடிப்படையில் விசேட விருதுகளைப் பெற்றனர்.

### 2.2.1.4 முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் பட்டமளிப்பு

முதுமாணி பட்டப்பின் பட்டமளிப்பு,நிகழ்ச்சித்திட்டம் 2015/16பொருட்டு பதிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்காக2018 நவம்பர் 12ஆம் 13ஆம் திகதிகளில் ப.ஞா.ச.மா.ம.(BMICH) இல்நடைபெற்றது. மீளதோற்றிய மாணவர்கள் சிலரும் இந்த பட்டமளிப்பில் பட்டம்பெற்றனர் என்பதுடன் வேறு சிலமாணவர்கள் அவர்கள் தகுதிபெறுவதற்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருப்பின் பட்டப்பின்டிப்ளோமாவை வேண்டிநின்றனர். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை *2.2.1.4.* – அ: *2018*இன் பட்டமளிப்பு தரவுகள் பற்றிய பகுப்பாய்வு**

| கற்கைநெறி | சேர்வு 2015/16 | பட்டம்பெற்ற | | | | | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2016 /2017 | 2015/2016 | 2014/2015 | 2013/ 2012 | முந்திய | | |
| கணினி விஞ்ஞான முதுமாணி | 83 | | 23 | 09 | 04 | | 36 | 43% |
| தகவல் தொழில்நுட்ப முதுமாணி | 75 | | 35 | 16 | | 01 | 52 | 69% |
| தகவல் பாதுகாப்பு முதுமாணி | 27 | | 11 | 02 | 02 | | 15 | 56% |
| கணினி விஞ்ஞானத்தில் பபிடி | | 02 | 02 | 01 | 11 | 03 | 19 | -- |
| தகவல் தொழில்நுட்பத்தில் பபிடி | | | 03 | 03 | | 07 | 13 | -- |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல் பாதுகாப்பில் பபிடி | | | | 01 | | 03 | 4 | -- |
| மொத்தம் | **185** | **02** | **74** | **32** | **17** | **14** | **139** | **75%** |

2018 நவம்பர் 12ஆம் 13ஆம் திகதிகளில் நடைபெற்ற பட்டப்பின் பட்டமளிப்பின்போதுபல்வேறு பட்டதாரிகள் அவர்களது செயலாற்றுகையின் அடிப்படையில் விசேட விருதுகளைப் பெற்றனர். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விருது/பதக்கம் பெயர் | பெற்றவரின் பெயர் |
|---|---|
| கணினி விஞ்ஞான முதுமாணிபட்டநிகழ்ச்சித்திட்டம் பொருட்டு சிறந்த மாணவருக்கான கிங்ஸ்லேகா விருது | திருவதிஏக்கநாயக்க ஈ.டப்.எம்.என். |
| தகவல் தொழில்நுட்பமுதுமாணிபொருட்டு சிறந்த மாணவருக்கான ஜயிகா (JICA)விருது | திருபெரேரா கே.டி.என்.சி. |
| தகவல் பாதுகாப்பு விஞ்ஞான முதுமாணிபொருட்டு சிறந்த மாணவருக்கான திரு ரீ.எச்.ஏ.த சொய்சா விருது | திரு ஹேரத்எச்.எம்.கே.கே.பி. |

### 2.2.1.5 முதுமாணி நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்தி

கடந்த சில வருடங்களின் அனுபவங்களையும் முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களினை இலங்கைத் தகைமைகள் உருவரைச்சட்டகத்துடன் (இ.த.உ.) இசைவாக்கும் தேவைகளையும் கருத்தில் கொண்டு அனைத்து முதுமானி நிகழ்ச்சித்திட்டங்களினதும் பாடத்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் மீளதிருத்தப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் கணினியியலில் ஆராய்ச்சி வழி முதுமாணி எனும் புதிய முதுமாணி நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்த முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைத்து துணை- விதிகளை விருத்திசெய்வதற்காக நெறிப்படுத்தும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### 2.2.1.6 ஆராய்ச்சிப் பட்டங்கள் - தத்துவ முதுமாணி மற்றும் கலாநிதி நிகழ்ச்சித்திட்டங்கள்

UCSC இரண்டு ஆராய்ச்சி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை குறிப்பாக, கணினியலில் தத்துவ முதுமாணி மற்றும் கலாநிதி ஆராய்ச்சிப் பட்டங்களை வழங்குகின்றது. பதிவுகள் வருடம் பூராகவும் இடம்பெறுவதுடன் சாத்தியமான விண்ணப்பதாரிகள் அவர்களுடைய ஆராய்ச்சி ஆர்வத்திற்குப் பொருத்தமான ஆராய்ச்சிப் பரப்புக்கள்/ குழுக்கள்/ ஆர்வங்களுடன் உள்ள பொருத்தமான UCSC யின் சிரேஷ்ட கல்விசார் பணியாளரை இனங்காணுமாறு ஊக்கப்படுத்தப்படுகின்றனர். UCSC 30 சிரேஷ்ட விரிவுரையாளர் கல்விசார் பணியாளர்களைக் கொண்டிருப்பதுடன் அவர்களில் 25 பேர் கணினியியலில் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுள்ளனர். ஆராய்ச்சி பட்ட பதிவு மற்றும் ஆராய்ச்சிப் பட்டங்களின் பட்டமளிப்பு பற்றிய விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்படுகின்றன.

**அட்டவணை*2.2.1.6.* – அ: ஆராய்ச்சி பட்ட பதிவும் நிறைவும்**

| ஆராய்ச்சிப்பட்டம் | ஆண்டு 1 (பதிவு 2018) | ஆண்டு 2 (பதிவு 2017) | ஆண்டு 3 (பதிவு 2016) | நீடிப்பு(2015 க்கு முன் பதிவுசெய்யப்பட்டது) | மொத்தம் | 2018இல் பட்டம்பெற்ற எண். |
|---|---|---|---|---|---|---|
| **கலாநிதி** | | | | | | 01 |
| முழுநேர | | 01 | 02 | 01 | 04 | |
| பகுதிநேர | | 01 | | | 01 | |
| **கலாநிதி –** மொத்தம் | | **02** | **02** | **01** | **05** | |
| **தத்துவ முதுமாணி** | | | | | | 00 |
| முழுநேர | | 05 | 02 | 01 | 08 | |
| பகுதிநேர | 04 | 05 | 03 | 03 | 15 | |
| **தத்துவ முதுமாணி** – மொத்தம் | **04** | **10** | **05** | **04** | **23** | |
| மொத்த ஆராய்ச்சி பட்டங்கள் | **04** | **12** | **07** | **05** | **28** | **01** |

## 2.3 வெளிவாரி பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறிகள்

### 2.3.1 தகவல் தொழில்நுட்பமாணி(வெளிவாரி) பட்ட நிகழ்ச்சித்திட்டம்

கடந்த காலங்களில் தகவல் தொழில்நுட்பமாணி (BIT) நிகழ்ச்சித்திட்டம் தனியாக 39,000 விட அதிகமான மாணவர்களை ஈர்த்ததுடன் 2273 பட்டதாரிகளையும், 3615 உயர் டிப்ளோமாதாரிகளையும் 7692 டிப்ளோமாதாரிகளையும் 2018 இறுதி வரைக்கும் உருவாக்கியுள்ளது. 2018 இல் (18வது தொகுதியினர்) 1,461 புதிய உள்ளெடுப்பில் இருந்ததுடன் புதிய உள்ளெடுப்புக்கான செயன்முறை, 2017இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 உயர் தர மாணவர்களுக்கு வசதியளிக்கும் முகமாக 2018 மார்ச் மாதம் வரை திறந்து வைக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டுக்கான மாணவர் பதிவுகளின் விபரங்களை பின்வரும் அட்டவணை தருகிறது.

**அட்டவணை *2.3.1.* – அ: தகவல் தொழில்நுட்பமாணி மாணவர் பதிவு - *2018***

| கற்கைநெறி | மொத்த விண்ணப்பதாரிகள் | புதிய பதிவு | மீள் பதிவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| முதலாம் வருட பதிவு | 2313 | 1461 | 514 | 1975 |
| இரண்டாம் வருட பதிவு | | 463 | 777 | 1240 |
| மூன்றாம் வருட பதிவு | | 187 | 1043 | 1230 |
| மொத்தம் | **2313** | **2111** | **2334** | **4445** |

#### 2.3.1.1 மாணவர் செயலாற்றுகை – 2018

கீழேயுள்ள அட்டவணை இலக்குகளுடன் கடந்த நான்கு வருடங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பட்டம்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை இனங்கண்டு த.தொ.மா. மாணவர்களின் செயலாற்றினைச் சிறப்பித்துக் காட்டுகின்றது.

.

***அட்டவணை 2.3.1.1. – ஆ: கடந்த மூன்று வருடங்களில் வெளிவாரிப் பட்ட செயலாற்றல்***

| வெளிவாரி இளமாணி மாணவர்கள் | KPI | 2014/15 | 2016 | 2017 |
|---|---|---|---|---|
| DIT–புதிய உள்ளெடுப்பு | **1500** | 2379 | 1890 | 1602 |
| DIT – பதியப்பட்ட | 2000 | 4535 | 4075 | 2188 |
| DIT – டிப்ளோமா | **400** | 515 | 379 | 403 |
| [DIT/பதியப்பட்ட]% | **26%** | **11%** | **9%** | **18%** |
| HDIT –உயர் டிப்ளோமாஉள்ளெடுப்பு | **600** | 721 | 690 | 490 |
| HDIT - உயர்டிப்ளோமாபதியப்பட்ட | 1200 | 2583 | 2509 | 756 |
| HDIT - உயர்டிப்ளோமா | **300** | 339 | 227 | 151 |
| [HDIT/பதியப்பட்ட]% | **25%** | **13%** | **9%** | **20%** |
| BIT –பட்ட உள்ளெடுப்பு | **300** | 347 | 346 | 242 |
| BIT - பட்டபதியப்பட்ட | 1500 | 1537 | 1651 | 1177 |
| BIT – பட்டதாரிகள் | **200** | 225 | 262 | 217 |
| [BIT/பதியப்பட்ட]% | **15%** | **15%** | **16%** | **18%** |

### 2.3.1.2 த.தொ.மா. போதிக்கும் நிறுவகங்கள்

UCSC நேரடியாக கற்பித்தல் செயன்முறையில் சம்பந்தப்படாது இருக்கின்றமையினால் த.தொ.மா பொதுத் தனியார்துறை பங்குடமை முறையில் நடாத்தப்படுகின்றது. ஆகையால், 2018 ஆம் ஆண்டிற்கான கல்வி திட்டத்தினைச் சுருக்கமாகக் கூறுதல், பரீட்சைகள் நடாத்துவதற்கான மாற்றங்கள் மற்றும் நிறுவனங்களின் பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 2017 பெப்ரவரி 22 ஆம் மற்றும் 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதிகளில் த.தொ.மா. போதனை நிறுவனங்களுடன் கூட்டங்கள் நடைபெற்றன. பல் பயிற்சி நிறுவனங்கள் 2017 ஆம் ஆண்டிலும் கூட த.தொ.மா விண்ணப்பதாரிகளுக்காக நேரடியான வகுப்புக்கள் மற்றும் கற்றல் உதவிகளை வழங்கியிருந்தன. UCSCஇந்த நிறுவனங்கள் எதற்கும் சான்றளிப்பதில்லை, எனினும் நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்கான அவர்களின் பங்களிப்பினை அங்கீகரிக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும்,UCSC ஒவ்வொருநிறுவனத்தினதும் பரீட்சை பெறுபேறுகளின் கருத்தினை பரீட்சார்த்திகள் கிடைக்கின்ற நிறுவனங்களினை இனங்கண்டு அவர்களுடைய கற்றல் முறையைத் திட்டமிடுவதற்காக வெளியிடுகின்றது. பாதிக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள், மெய்நிகர் கற்றல் சூழல் மற்றும் இயங்கலை / சிபார்சு செய்யப்பட்ட திரவியங்களின் உதவியுடன், தாமாகவே கற்கின்றனர் (சுயமாக கற்றல்). 2018ஆம் ஆண்டில், 14 மாவட்டங்களில் இருந்து 50 நிறுவனங்கள், ஐந்து அல்லது அதிகமான பரீட்சார்த்திகளுக்காக பயிற்சிகளை நடாத்தி இருந்தது. அவற்றுள் 14 நிறுவனங்கள் அனைத்து மூன்று வருடங்களிலும் சம்பந்தப்பட்டு இருந்ததுடன் விபரங்கள் த.தொ.மா இணையத்தளத்தில் (www.bit.lk) கிடைக்கின்றன. த.தொ.மா பரீட்சைகள் கொழும்பு, கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் நடைபெற்றன.

### 2.3.1.3 த.தொ.மா. வெளிவாரிப் பட்ட பட்டமளிப்பு மற்றும் டிப்ளோமா விருதுகள்

த.தொ.மா வெளிவாரி பட்ட பட்டமளிப்பு 2018 டிசம்பர் 10 ஆம் திகதியன்று UCSC கேட்போர்கூடத்தில் 2017 ஆம் ஆண்டின் பட்டதாரிகளுக்காக நடைபெற்றதுடன் டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா விருது வழங்கும் வைபவம் 2018 செத்தெம்பர் 05ம் திகதியன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புதிய கலையரங்கில் 2017 ஆம் ஆண்டில் பொருத்தமான நிபந்தனைகளைத் திருப்தி செய்தவர்களுக்காக நடைபெற்றது. விபரமான புள்ளிவிபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இந்த பட்டமளிப்பில் 133 பட்டதாரிகளுக்குப் பட்டமளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பெற்றோர்கள் மற்றும் த.தொ.மா நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றி இருந்தனர்.

***அட்டவணை 2.3.1.3 – அ: வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் - 2018***

| கற்கைநெறி | புதிய பதிவு | திரும்பத் தோற்றியோர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் |
|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா | 1631 | 478 | 2,109 | 337 |
| த.தொ.இல் உயர் டிப்ளோமா | 511 | 748 | 1,259 | 110 |
| தகவல் தொழில்நுட்பமாணி | 233 | 1049 | 1282 | 133 |
| அனைத்தும் | **2375** | **2275** | **4650** | **580** |

***அட்டவணை2.3.1.3. – ஆ: 2018இல் நடைபெற்ற பட்டமளிப்பில் பங்குபற்றிய த.தொ.மா. பட்டதாரிகளின் பெறுபேறுகளின் பகுப்பாய்வு***

| உள்ளெடுப்பு | முதலாம் | மேல் | கீழ் | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **BIT** | **02** | **03** | **05** | **123** | **133** |

#### பட்டமளிப்பு விருதுகள்

தகவல் தொழில்நுட்பமாணி (வெளிவாரி) சிறந்த செயலாற்றுநருக்கான பேரா.வி.கே.சமரநாயக்க பதக்கம் திரு.ஆர்.பீ.எல்.பர்னாந்து இற்கு வழங்கப்பட்டது. சிறந்த மென்பொருள் அபிவிருத்தி செயற்றிட்டம் திரு.ரீ.எம்.எஸ்.வய்.தென்னகோன் இற்கு வழங்கப்பட்டது. திரு.எம்.ஜே.பி.யு.சமன்திலக ஞாபகார்த்த விருது திரு.எம்.ஏ.பிரசாந் இற்கு வழங்கப்பட்டது. சிறந்த இ-கற்போருக்கான 1ஆம் அரையாண்டுக்கான விருது திரு.ஈ.எச்.டி.பம்பசர இற்கும், 3ஆம் 4ஆம் அரையாண்டுகளுக்கான விருது திரு.டப்.ஆர்.எச்.சீ.விஜயதுங்க இற்கும் வழங்கப்பட்டது.

### 2.3.2 விரிவாக்கற் கற்கைநெறிகள்

இந்த கணித்தல் சேவை நிலையம் (க.சே.நி.) குறித்த சிறப்புப் பரப்புக்களில் விரிவாக்கற் கற்கைநெறிகளை ஒருங்கிணைத்து நிர்வகிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டில்,UCSC ஏழு விரிவாக்கல் சான்றிதழ் நிகழ்ச்சிகளை வழங்கி 300 அதிக மாணவர்களை கவர்ந்தது. கீழேயுள்ள அட்டவணை சாதாரணமாக வார இறுதி நாட்களில் நடாத்தப்படுகின்ற அந்த கற்கைநெறிகள் பற்றிய விபரங்களைக் காட்டுகின்றன (D – காலப்பகுதிநாட்களில்; B – தொகுதி இல.; P – மொத்த பங்குபற்றுநர்கள்.). கற்கைநெறிகளில் முனைப்பான பங்குபற்றலின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றை http://www.ucsc.lk/verifyஇல் சோதித்துபார்க்க முடியும்.

**அட்டவணை *2.3.2.* அ: *CSC* பயிற்சித்திட்டங்கள் - *2018***

| கற்கைநெறி | பகுதி | காலப்பகுதி | தொகுதி இல. | பங்குபற்றுநர்கள் |
|---|---|---|---|---|
| JavaSE பயன்படுத்தி ஜாவா பிரயோக அபிவிருத்தி | CSC | 8 | 7 | 161 |
| தொழில் அபிவிருத்திற்கான கணினி | CSC | 8 | 1 | 28 |
| சோதனை தன்னியக்க உருவரைச்சட்டகத்தை பயன்படுத்தி மென்பொருள் தர உத்தரவாதம் | CSC | 8 | 4 | 105 |
| தொடங்குபவருக்கான த.தொ. அடிப்படைகள் | CSC | 10 | 1 | 23 |
| | | மொத்தம் | **13** | **317** |

**சான்றிதழ் வழங்கும் வைபவம் URL**

http://ucsc.cmb.ac.lk/events/completion-short-course-graphics-design-creative-development/

**அட்டவணை *2.3.2.* ஆ: *CSC* ஆலோசனை செயற்றிட்டங்கள்- *2018***

| அறிக்கையிடும் அதிகாரி | செயற்றிட்டத்தின் பெயர் |
|---|---|
| ஆட்பதிவுத் திணைக்களம் | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைசெயற்றிட்டம் |
| தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை | முன்னோடி கட்டுப்பாட்டு அதிகார செயற்றிட்டம் |
| வடமேல் மாகாண சபை(NWPC) | 1. செயற்றிட்டமதிப்பீடு மற்றும் முகாமைத்துவ மென்பொருள் பொருட்டான பிரேரணை கோரிக்கை தயாரிப்பதற்கான ஆலோசனை<br>2. தனியார் கொண்டுசெல்லல் முகாமைத்துவம் பொருட்டான போக்குவரத்து அதிகாரசபையினதும் போக்குவரத்து அமைச்சினதும் ஒட்டுமொத்த முறைமை ஆய்வு,பாதைகளில் பஸ் ஓடும் நேரத்தை கண்டுபிடிப்பதற்கான தேடும் முறைமை,பஸ்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பாடசாலை வான்களுக்கு வாகன ஓட்ட அட்டைகளையும் வருடாந்த அனுமதிப்பத்திரங்களையும் வழங்கல் தொடர்பான செயற்றிட்டம் |

## 2.3.3 இயங்கலை விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

UCSC இன் இ-கற்கை நிலையமானது, தற்போதிருக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் பொருட்டான இயங்கலை கற்றலை மேம்படுத்தும் பொருட்டும் அதேபோன்று தேசிய தேவைப்பாட்டின் அடிப்படையில் இயங்கலைநிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்கும் பொருட்டும் தாபிக்கப்பட்டது. கணினி தொழில்நுட்பவியலின் அடிப்படை(FIT), http://fit.bit.lk,த.தொ.தொ. பொருட்டான இயங்கலை அடிப்படை நிகழ்ச்சித்திட்டமொன்றாகவும் அதேநேரம் மாணவரொருவர் உயர் தரத்தில் போதிய புள்ளிகளை கொண்டிராவிடின் BIT பட்ட நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு பதியப்படுவதற்கான மாற்று சான்றிதழ் வழியொன்றாகவும் உருவாக்கப்பட்டது. பின்வரும் அட்டவணை 2018 இல் FITநிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்களை வழங்குகிறது.

**அட்டவணை *2.3.3.* அ: கணினி தொழில்நுட்பவியலின் அடிப்படை நிகழ்ச்சித்திட்டத்தின் புள்ளிவிபரங்கள்**

| நிகழ்ச்சித்திட்டம் | பதிவு | * e-சோதனைக்கான விண்ணப்பம் | e- சோதனை சித்தியடைந்தவர்கள் | பிரயோக சோதனை சித்தியடைந்தவர்கள் |
|---|---|---|---|---|
| FIT | 603 | 853 | 243 | 12 |

## 2.4 வெளிநாட்டு மாணவர்கள்

பிராந்தியத்தில் உன்னதத்தின் மையமொன்றாக UCSC இல் உள்ள நிகழ்ச்சித்திட்டங்களை பின்பற்றுவதற்கு வெளிநாட்டு மாணவர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்குவது முக்கியதானதாகும் என UCSC நம்புகிறது. உள்ளெடுப்புக்கான வெளிநாட்டு மாணவர்களின் வகுதி (2%) இருந்த போதிலும் சிறிது காலமாக அத்தகைய மாணவர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க கேள்வி இருக்கவில்லை. 2018 இல், ஆப்கானிஸ்தான், நேபாளம், இந்தியா, பங்களாதேஷ், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து 14 வெளிநாட்டு மாணவர்கள், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட முதுமாணி நிகழ்ச்சித்திட்டமான கணினிவழி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு இருந்தனர் என்பதுடன் தகவல் தொழில்நுட்ப முதுமாணி நிகழ்ச்சித்திட்டத்தை 2017ஆம் ஆண்டிலிருந்து பயிலும் தர்க்மேனிஸ்தான் மாணவர் ஒருவரும் இருந்தார்.

# 3. ஆராய்ச்சி

# 3.ஆராய்ச்சி

## *3.1* ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள்

ஆராய்ச்சி கலாசாரம் UCSC இன் சாதனைகளைக் காண்பிப்பதற்கான மிகவும் முக்கியமானதும் சிறப்புத்தன்மையுடையதுமான விடயப்பரப்பாக உள்ளது. 2018இல் பல செயற்பாடுகள் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை UCSCஇல் அதிகரிப்பதற்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. சில ஆராய்ச்சிச் செயற்பாடுகள் ஆராய்ச்சிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவை UCSC இல் உள்ள ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களுக்கு நேரடியாக நிதியளித்திருக்கின்ற வெளியக அமைப்புக்களுடனும் தொடர்புபட்டுள்ளன. ஒத்துழைப்பு ஆராய்ச்சியின் முக்கியத்துவம் UCSC இல் ஆராய்ச்சிக் குழுக்களினை உருவாக்குவதற்கு கல்விசார் பதவியினரை அனுமதிப்பதன் மூலம் ஆராய்ச்சிச் செயற்பாடுகளினை விரிவுபடுத்துவதற்கு அவர்களிடையே ஊக்குவிக்கப்பட்டுள்ளது. வெளிவாரி நிதியளித்தல் போட்டித்தன்மை காரணமாக வேறுபடுவதனால் உள்வாரி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஒதுக்கீடு ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்குவதற்கு பேணப்பட்டுள்ளது. முதுமாணிகள் மற்றும் வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கணிசமான சதவீதம் இந்த ஒதுக்கீட்டுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. 2018 இன் ஆரம்பத்தில் கொள்கை ஆவணம் ஒன்று பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு முன்னைய ஆண்டு அனுபவ அடிப்படையில் நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளையில், ப.மா.ஆ. மூலதன மானிய கட்டமைப்பு அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட்டதனால் 2018 இல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக நிதிகளினை ஒதுக்கவில்லை.

### 3.1.1 இளமாணி மட்ட ஆராய்ச்சி செயற்றிட்டங்கள்

சிறப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து மாணவர்களும் அவர்களின் இறுதி ஆண்டில் ஆராய்ச்சிப் பகுதியுடன் ஒரு செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்கு வேண்டப்படுகின்றனர். செயற்றிட்டத்தின் காலவரையறை ஓர் ஆண்டு என்பதுடன் இது UCSC இன் சிரேட்ட கல்விசார் பதவியினரின் ஒருவர் அல்லது பலரினால் வழமையாக மேற்பார்வை செய்யப்படுகின்றது. கணனி விஞ்ஞானப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் இறுதி ஆண்டு செயற்றிட்டம் ஒரு தனிப்பட்ட செயற்றிட்டமாகும். ஆனால் ஏனைய இரண்டு பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் (தகவல் முறைமை மற்றும் மென்பொருள் பொறியியல்) குழுச் செயற்றிட்டமாக இருந்தது. இந்தச் செயற்றிட்டத்தின் மேற்பார்வையில் தொடர்புபட்ட பதவியினரின் உறுப்பினர்களினால் முன்னளிக்கை மற்றும் வாய்மொழியினைக் கொண்டமைந்த மூன்று மைல்கற்களான முன்மொழிவு பாதுகாப்பு, இடைக்கால மதிப்பீடு மற்றும் இறுதி மதிப்பீடு என்பவற்றினை சுயாதீனமாகக் கருத்திற்கொண்டு மதிப்பிடப்படுகின்றன. அவை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மூன்று கல்வி கூட்டிணைப்புக்களினைக் கொண்டிருப்பதுடன் செயல் ஒழுங்கு முறையினை முகாமை செய்வதற்குரிய வழிகாட்டிகளினையும் கொண்டுள்ளன.

**அட்டவணை 3.1.1.அ: 2018 இல் நடாத்தப்பட்ட இளங்கலை மட்ட ஆராய்ச்சி செயற்றிட்டங்கள்**

| பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | செயற்றிட்ட இணைப்பாளர் | மாணவர்களின் எண்ணிக்கை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கை | பரீட்சகர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி | டாக்டர். எச்.ஈ.எம்.எச்.பி. ஏக்கநாயக்க | 30 | 30 | 18 | 26 |
| தகவல் முறைமைகளில் சிறப்பு விஞ்ஞானமாணி | டாக்டர். வி.ஏ.வீரசிங்க | 19 | 08 | 16 | 16 |
| மென்பொருள் பொறியியலில்சிறப்பு விஞ்ஞானமாணி | டாக்டர். எம்.ஐ.ஈ விக்கிரமசிங்க | 10 | 03 | 03 | 05 |

.

## 3.1.2 முதுமாணி மட்ட செயற்றிட்டங்கள்

அனைத்து முதுமாணி செயற்றிட்டங்களிலும் மாணவர்கள் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்வதற்கு ஆரம்ப தேவைப்பாடாக தனிப்பட்ட செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்கு வேண்டப்படுகின்றனர். இது இரண்டு அரையாண்டுகள் (ஒரு பஞ்சாங்க ஆண்டு) கற்கைநெறியினைக் கொண்டதுடன் வழமையாக UCSCஇன் சிரேட்ட கல்விப் பதவியினரின் உறுப்பினர் மேற்பார்வையாளராக உள்ளனர். செயற்றிட்ட இணைப்பாளர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை முகாமை செய்வதற்கு கல்வியாண்டின் ஆரம்பத்தில் நியமிக்கப்படுகின்றனர். க.வி.மு.மா(MCS) நிகழ்ச்சித் திட்டத்தில், சில செயற்றிட்டங்கள் ஆராய்ச்சி வகைகளாகவும், ஏனையவைகள் நடைமுறைப்படுத்தல் வகையாகவும் உள்ளன. மற்றைய அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களிலும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தும் வகைகளாக உள்ளன. ஆனால் சில செயற்றிட்டங்களும், ஆராய்ச்சிக் கூறினைக் கொண்டுள்ளன. 2018 இல் முதுமாணிகள் செயற்றிட்டங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

***அட்டவணை 3.1.2. அ: முதுமாணி மட்ட செயற்றிட்டங்களின் மதிப்பீடுகள்***

| பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் | கல்வி ஆண்டு | பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் (முதல் தடவை மீள்பரீட்சை எடுப்பவர்கள்) | | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்கள் | சித்தியடைந்த வீதம் |
|---|---|---|---|---|---|
| | | 2015.`.2016 | மீள்பரீட்சை எடுப்பவர்கள | | |
| மு.க.வி.மா | 2017/2018 | 30 | 17 | 36 | **76.60** |
| மு.த.தொ.மா | | 75 | 30 | 33 | **31.43** |
| மு.த.மு.மா | | 23 | 7 | 15 | **50.00** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.த.தொஇமா (இ-கற்றல்)ரு | | 0 | 3 | 1 | **33.33** |
| மு.த.தொ.மா(பல்லூடகம்) | | 0 | 1 | 1 | **100** |

## 3.1.3 ஆராய்ச்சி பட்டங்களின் செயற்றிட்டங்கள்

முதுமாணி மற்றும் கலாநிதி நிகழ்ச்சித்திட்டத்தில் ஆராய்ச்சி செயற்றிட்டமானது பிரதான கூறாக இருப்பதுடன் மாணவர்கள் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களினைப் பொறுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பரீட்சகர்களைக் கொண்டமைந்த ஒரு சுயாதீன பரீட்சைக் குழாம் ஒன்றிற்கு அவர்களைப் பாதுகாப்பதற்கும் வேண்டப்படுகின்றனர். 2018 இல் ஆராய்ச்சிப்பட்ட செயற்றிட்டங்களுக்கான பல மதிப்பீடுகள் இடம்பெற்றன. என்பதுடன் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

***அட்டவணை 3.1.3. அ: ஆராய்ச்சிப் பட்டப்படிப்புகளின் செயற்றிட்டங்கள்***

| பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் | விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | பதிவுசெய்யப்பட்டவை | வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்ட முன்மொழிவு பாதுகாப்பு |
|---|---|---|---|
| முதுதத்துவமாணி | 05 | 04 | 01 |
| கலாநிதி | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **05** | **04** | **01** |

## 3.1.4 நிதியீட்டப்பட்ட ஆராய்ச்சி செயற்றிட்டங்கள்

### 3.1.4 .1உள்வாரி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

2018 இல் ப.மா.ஆ.கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக நிதிகளை ஒதுக்கவில்லை என்பதுடன் மூலதன மானியம் ருஊளுஊ இன் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கு போதுமானதாகவும் இருக்கவில்லை. எனவே ஆராய்ச்சி செயற்றிட்டங்களை மேற்கொள்ளும் சிரேட்ட கல்விப் பதவியினருக்கு நிதியளிப்பதற்கு பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் ஆராய்ச்சி ஒதுக்கீட்டினை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பதவியினர் உறுப்பினர்கள் அனைவரும் 2018 இன்பொழுது அவர்கள் திட்டமிட்ட ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் அடிப்படையில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு அழைக்கப்பட்டனர். 7 முன்மொழிவுகள் அவர்களுக்கு நிதியிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்டன. பின்வரும் அட்டவணை அந்தச் செயற்றிட்டங்கள், அவற்றின் பயன்பாடு மற்றும் வெளியீடு தொடர்பிலான பலாபலனைக் காண்பிக்கின்றது.

***அட்டவணை 3.1.4.1. – அ: வளநிதியளிக்கப்பட்ட ஆராய்ச்சியின் ஒதுக்கீடு, பயன்பாடு மற்றும் பலாபலன்***

ஆராய்ச்சிகள்

| ஆராய்ச்சி செயற்றிட்டம் / செயற்பாடு | முதன்மையான நுண்ணாய்வு/ஆராய்ச்சிகள் | ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு ரூபா. | வெளயீடுகளின் எண்ணிக்கை (மாநாடுகள் அல்லது இதழ்கள்) |
|---|---|---|---|
| புற்றுநோயினை உருவாக்கும்அறிகுறிகளின் அகல்விரிவான ஆய்வு | டாக்டர். ஏ.ஆர். வீரசிங்க | 480,000.00 | 03 |
| முற்கூட்டிய ஆண்மைச் சுரப்பி புற்றுநோயின் நோய் உருவாக்கல்களில் விலகலை வரையறுப்பதற்கு நோய்க் கட்டிகளின் மரபியல் அடையாளங்களினை பகுப்பாய்வுசெய்தல் | திருவதி. சி.ஆர். விஜேசிங்க | 480,000.00 | - |
| 2002-2016 வரையிலான காலப்பகுதியில் UCSC இன் கணனிவிஞ்ஞானத்தின் போக்குகளினைப் பகுப்பாய்வு செய்தல் | டாக்டர். எம்.ஜ.இ. விக்கிரமசிங்க | 155,000.00 | 02 (1 மீளாய்வு 1 வரைவு) |
| பொருத்தமான பௌதிகம் மற்றும் நடத்தைசார் யதார்த்தத்துடன் ஆளில்லா விமான பயிற்சி ஒத்திகைகளினைத் துாண்டுவதற்கு இணைய யதார்த்த சூழல் | பேராசிரியர். ஏன்.டீ. கொடிகார | 240,000.00 | - |
| இணைய யதார்த்தத்தினை உபயோகித்து இதய இயக்க மீட்பு பயிற்சிக்காக கட்டுப்படியான தீர்வு | டாக்டர். கே.எல். ஜயரட்ன | 240,000.00 | - |
| விடய ஆய்வாக பெரிய தரவு கட்புலனாக்கல், நேய்க்காவி மூலமான நோய் தரவுத்தொகுதிக்காக சைகை அடிப்படையிலான நேரடி கையாளல் 3 டி உபயோகிப்பவர்இடைமுகம் உருவகப்படுத்தல் | டாக்டர். ஜி.டி. எஸ்.பீ. விமலரட்ன | 100.000.00 | - |

சிரேட்ட மற்றும் கனிட்ட பதவியினரைக் கொண்டமைந்த UCSC இன் நிரந்தர கல்விப் பதவியினர் பட்டப் பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பிறப்பிக்கப்பட்ட வருமானத்தினை உபயோகித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாநாடுகள்/ஆராய்ச்சி மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறைகளுக்கு சமுகமளிப்பதற்கு ஆதரவளிக்கப்பட்டனர். பங்குபற்றியவர்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

***அட்டவணை 3.1.4.1. ஆ:மாநாடுகள்/ ஆய்வு மாநாடு மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியோர்***

| பதவியினர் மட்டம் மற்றும் மாநாட்டின் வகை | பங்குபற்றிய வர்கள் மாத்திரம் | வெளியிடப்பட்ட வை முன்னளிக்கை செய்யப்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|
| சிரேட்ட கல்விநிலையினர்- இலங்கையில் இடம்பெற்ற மாநாடுகள் | 1 | 33 | 34 |
| சிரேட்ட கல்வி நிலையினர்- இலங்கைக்கு வெளியே இடம்பெற்ற மாநாடுகள் | 4 | 29 | 33 |
| கனிட்ட கல்விநிலையினர்- இலங்கையில் இடம்பெற்ற மாநாடுகள் | - | 8 | 8 |
| கனிட்ட கல்விநிலையினர் கனிட்ட கல்விநிலையினர்– இலங்கைக்கு வெளியே இடம்பெற்ற மாநாடுகள் | - | 5 | 5 |
| **மொத்தம்** | **5** | **75** | **80** |

## 3.1.4.2 வெளிவாரி தரப்பினர்களினால் நிதியீட்டப்பட்ட ஆராய்ச்சி செயற்றிட்டங்கள்

UCSC பதவியினர் UCSC இன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிகாரிகளுக்கு நேரடியாக முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர். பின்வரும் அட்டவணை 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களை அவற்றின் பலாபலனுடன் சேர்த்து காண்பிக்கின்றது.

***அட்டவணை 3.1.4.2.- அ: வெளிதரப்பினர்களினால் நிதியளிக்கப்பட்ட ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களின் பயன்பாடு மற்றும் பலாபலன்***

| செயற்றிட்டத்தின் பெயர் | பிரதான ஆய்வாளர் | நன்கொடையாளர் முகவராண்மை அல்லது அனுசரனையளிக்கும் அமைப்பு | மானியத்தின் வகை(உள்நாடு அல்லது வெளிநாடு | 31.12.2018 யன்று அளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| தடங்கண்காணித்தலுக்காக பொருந்தக்கூடிய உணர்கருவிஇயக்கும் முறை | டாக்டர். கசுன் டீ சொய்சா | அசெற்- உப்பசல பல்கலைக்கழக ஆராய்ச்சி கூட்டுஒத்துழைப்பு | வெளிநாடு | 100,000.00 |
| வெவ்வேறான கற்றல் சமூகங்களில ் எம்-கற்றல் ஊடாக ஆங்கில மொழி கற்றலினை அதிகரித்தல்- - தே.வி.ம (TG.:.2013/Tech-D/02) | பேரா. கே.பீ.ஹேவாக மகே | தேசிய விஞ்ஞான மன்றம் | உள்நாடு | 50,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| மொழி தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆய்வுகூடம்.(சிங்கள கலைக்களஞ்சிய செயற்றிட்டம் & TTS &ASR செயற்றிட்டம்) | கலாநிதி. ஏ.ஆர்.வீரசிங்க | எல்ரிஆர்எல் | உள்நாடு | 1,843,365.41 |
| ஆரம்ப எண்கணித கல்விக்காக மனமகிழ்க் கல்வி அடிப்படையிலான டப்லற்கான இடைவினையாற்றல் வடிவமைப்பு - UGC/DRIC/QUT2015/CMB/02 | திரு.எச்.கேரி.சி. ஹலோலுவ | ஒருவுபுலமைப்பரிசில்கள் 2015- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | வெளிநாடு | 1,128,667.00 |
| மீன்பிடி முகாமைத்துவ ஆதரவுக்கான இலத்திரனியல் சம்பவத் திரட்டுப் பதிவுப் புத்தகம்(Log book) மற்றும் இலத்திரனியல் தரவு சரிபார்த்தல் மொடியுலின் ஒரேவகையினை வடிவமைப்பு மற்றும் விருத்திசெய்தல் | பேரா.என்.டி. கொடிகார | மீ.நீ.வ.தி- மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | உள்நாடு | 24,000.00 |
| 3-டி இணைய உலகங்கள் ஊடாக மாணவர் இடைவினையாற்றலினை துருவி ஆராய்தல்UGC/VC/DRIC/PG2015(III) / UCSC/ 01 | திருவதி. ஆர். எம்.பீ.என் சோமரட்ன | உயர்கல்விகள் 2015- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | உள்நாடு | 1,270,261.90 |
| இலங்கையில் மோட்டர் இயலாமையுடைய சிறுவர்களுக்கான விளையாட்டுக்கு புறம்பான நடவடிக்கைகளில் இணைத்தல் மற்றும் நீண்டகால சுகாதாரநலன் கண்காணித்தல் UGC/VC/DRIC/PG2016(I)/UCSC/01 | திருவதி கே.பீ.யு ஜயசிங்க | உயர்கல்விகள் 2016- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | உள்நாடு | 1,389,582.56 |
| இலத்திரணியல் தேசிய அடையாள அட்டை செயற்றிட்டம் | டாக்டர். லக்ஸ்மன்ஜயரட்ன | இதேஅஅ- ஆட்களினைப் பதிவுசெய்யும் திணைக்களம்(ஆ.ப.தி) | உள்நாடு | 1,126,273.64 |
| பல்லூடக தரவுத்தளங்களில் உரிமையாண்மை தீர்வு | திரு. எஸ்.சி. பிரேமரத்ன, டாக்டர். கே.எல். ஜயரட்ன | தே.வி.ம- தேசிய விஞ்ஞான மன்றம் | உள்நாடு | 23,612.38 |
| குறிமுறை செயற்றிட்டத்தின் கூகுள் சமர் | டாக்டர் கசுன் டீ சொய்சா | கூகுள் எல்எல்சி | வெளிநாடு | 1,518,652.93 |
| தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முன்கூட்டிய கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கான தவவுத்தள முறைமை ஒன்றினை விருத்திசெய்தல் | டாக்டர். எம்.ஐ.இ.விக்கிரமசிங்க | தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை | உள்நாடு | 230,975.00 |
| சைபர் பாதுகாப்பு மாஸ்டர்’ | டாக்டர் கசுன் டீ சொய்சா | யுளளைூஊழழெநைஉவ ரி.இ.ஐ.என் கூட்டுத்தாபன நிலையம், ஐரோப்பிய ஆணைக்குழு | வெளிநாடு | 989,470.88 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எஹெட் செயற்றிட்ட ஆராய்ச்சி ரூ பொய்த்தோற்ற தீர்வுகள் புத்தாக்க வர்த்தகமயமாக்கல் (ஆர்ஜசி)மானியத் திட்டம். | டாக்டர் கசுன் டீ சொய்சா (இணை கூட்டிணைப்பாளர்) | | உலக வங்கி | வெளிநாடு | 35 மில்லியன்(மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு) |
| | செயற்றிட்டம் 1: உள்நாட்டு மொழிகளுக்கான உரையாடல் இடைமுகங்கள் | கலாநிதி. ஏ.ஆர். வீரசிங்க | | | |
| | செயற்றிட்டம் 2: ஜினோமிக்ஸ் ஆய்வுகூடம் | திருவதி.சி.ஆர் .விஜேசிங்க.˙. டாக்டர்.ஏ.ஆர். வீரசிங்க | | | |
| | உப செயற்றிட்டம் 3: செலவு பயன்மிக்க மொடலிங் மற்றும் ஒப்புருவாக்க தீர்வுகள் | பேரா. என்.டி. கொடிகார | | | |
| | செயற்றிட்டம் 4: “முறைமை” யாக தேயிலை பெருந்தோட்டம் | பேரா. டீ.என். ரணசிங்க | | | |
| | செயற்றிட்டம் 5 கட்டுப்படியான இதய இயக்க மீட்பு பயிற்சி | கலாநிதி. கே.எல் ஜயரட்ன | | | |
| | உப செயற்றிட்டம் 6: புளக்செயின் மற்றும் டிசெயலி | கலாநிதி.ரி.என். கே.டீ சொய்சா | | | |

## 3.1.5. பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பயன்பாடு ஊடாக ஆராய்ச்சிக்கான ஒதுக்கீடு

UCSC இல் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினைப் பேணும் முகமாக, UCSC இல் முதுமாணிகள் மற்றும் ஆராய்ச்சிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் நிலைபேறானதாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பேணுவதற்கு மிகவும் முக்கியமானதாகும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான அரசாங்க ஒதுக்கீடு மிகவும் முன்னரே ஊகிக்கமுடியாதது என்பதுடன் சில ஆண்டுகளில், உதாரணமாக 2018 இல் இந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக பூச்சிய ஒதுக்கீடு இருந்தது. எனவே முதுமாணி பட்டப்படிப்பு மற்றும் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் வருமானத்தின் ஒரு பகுதி UCSC இல் ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் நிலைபேற்றினைத் தயாரிப்பதற்கு கடந்த 15 வருடங்களின் பொழுது

ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கீடு பதவியினர் உறுப்பினர்களின் சிரேட்ட நிலையினை அடிப்படையாகக் கொண்டு பங்கீட்டு முறைமையினை உபயோகித்து ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் இதழ்கள் மற்றும் மாநாடுகளில் வெளியீடு செய்வதற்கும் ஆதரவளிப்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட பங்கீட்டுக்கு (IQ) மற்றும் திறந்த பங்கீடு (OQ) ஆக அறியப்பட்டு இரண்டு ஒதுக்கீட்டு வகைகள் உள்ளன. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நிரந்தர கல்விப் பதவியினர் அனைவருக்கும் சர்வதேச மாநாடுகள், இதழ்கள் மற்றும் புத்தக அத்தியாயங்களில் பிரசுரிப்பதனை ஊக்குவிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு ஒன்று கொடுக்கப்பட்டது. அதே நேரத்தில் ஒவ்வொரு பதவியினர் உறுப்பினரின் ஒதுக்கப்பட்ட எல்லையினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாநாடுகளுக்கு சமுகமளிப்பதற்கு ஆதரவளிக்கப்பட்டனர். பதவியினர் உறுப்பினர்கள் அவர்களுடைய ஆராய்ச்சி வேலையுடன் நேரடியாக தொடர்புபட்ட இணையத்திற்கு அணுகுவதை தொழில்சார் அமைப்புக்களின் சந்தா மற்றும் வெளிவாரி ரீதியாக நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான பகுதியளவிலான ஆதரவு அடங்கலாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற அவர்களின் ஆராய்ச்சிச் செலவுகளை உள்ளடக்குவதற்கு நிதியினைப் பயன்படுத்துவதற்கும் ஆதரவளிக்கப்பட்டனர். பின்வரும் அட்டவணை 2018 இன் பொழுது ஆராய்ச்சி ஒதுக்கீட்டின் பயன்பாட்டினைக் காண்பிக்கின்றது. குறிகாட்டப்பட்ட இதழ்களின் வெளியீடுகளுக்கு ஒதுக்கீட்டின் ஊடாக ஆதரவளிக்கப்பட்டன.

***அட்டவணை 3.1.5.அ :2018 இன் பொழுது ஆராய்ச்சி ஒதுக்கீடு***

| பதவியினர் உறுப்பினர் | பயன்பாடு | சராசரி பயன்பாடு |
|---|---|---|
| **சிரேட்ட பதவியினர் (22)** | ரூபா. 5,071,424.53 | ரூபா. 230,519.29 |
| **கனிட்ட பதவியினர் (03)** | ரூபா. 282,011.80 | ரூபா. 94,003.93 |
| **மொத்தப் பதவியினர் – (25)** | ரூபா. 5,353,436.33 | ரூபா. 214,137.45 |

UCSC ஆராய்ச்சிக்கு ஒதுக்கீடு கடந்த 15 ஆண்டுகளின் பொழுது பிறப்பிக்கப்பட்ட வருமானம் மற்றும் வெளிவாரி தரப்பினரின் நன்கொடையினை உபயோகித்துக் கட்டப்பட்டுள்ளது. நிதியிடல் மற்றும் பணிச்சுமைக்கு எந்த அரசாங்கமாயினும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் தொடர்ச்சிUCSC இன் நிலைபேற்றிற்கு மிகவும் முக்கிய தேவைப்பாடாக உள்ளது.

## 3.1.6 UCSC இலுள்ள ஆராய்ச்சிக் குழுக்கள்

கூட்டு ஒத்துழைப்பு ஆராய்ச்சிப் பண்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக UCSC பதவியினர் சிரேட்ட பதவியினர் உறுப்பினர், கனிட்ட பதவியினர் உறுப்பினர்கள், முழுமையான அல்லது பகுதி நேர ஆராய்ச்சி உதவியாளர்கள் மற்றும் மாணவர்களில் ஒருவர் அல்லது பலரினைக் கொண்டமைந்த ஒரு சிறு அணிகளாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை

மேற்கொள்வதற்கு அழைக்கப்படுகின்றனர். சில குழுக்களும் அந்தந்த விடயப்பரப்பில் அவர்களுடைய முழுமையாக அல்லது பகுதியினை நிதியளிப்பதன் மூலம் ஆராய்ச்சிக் குழுக்களின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு வெளிவாரி தரப்பினர்களை அழைக்கின்றன. பின்வரும் அட்டவணை 2018 இல் முனைப்பாக ஆராய்ச்சிக் குழுக்களின் விபரங்களை முன்னளிப்புச் செய்கின்றது.

***அட்டவணை 3.1.6.அ: 2018 இல் ஆராய்ச்சிக் குழுக்கள்***

| குழுவின் பெயர் | ஆராய்ச்சிக் குழுவின் இலக்கு | ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள் | ஆராய்ச்சிக் குழுவின் யுஆர்எல் |
|---|---|---|---|
| சமூக வாழ்க்கை வலையமைப் புக்கள்(எஸ். எல்.என்) | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மக்களின் தேவைகளினை நிறைவு செய்வதற்கு இலக்காகன் கொண்ட கையடக்கத் தொலைபேசியினை உபயோகித்து வழங்கப்படும் வாழ்வாதாரத்துடன் தொடர்பு பட்ட செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கு உண்மை-நேரத் தகவல்களினை வழங்குதல் | பேரா. ஜிகன் விக்கிரமநாயக்க, டாக்டர். ஜீவனி குணதிலக்க, திருவதி. லசந்தி டீ சில்வா, திருவதி. அனுசாவலிசதீர, பேரா. அத்துலஜிங்க / மேற்கு சிட்னிப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா, பேரா. ரமேஸ் ஜயின்/ கலிபோர்னியா பல்கலைக்கழகம், இர்வைன் ஐ.அமெ, பேரா. ஜென்னி ரொட்டொரா/ சலிமொ பல்கலைக்கழகம், இத்தாலி, திருமதி.ரமரா ஜிங்க / அவுஸ்திரேலிய கத்தோலிக்க பல்கலைக்கழகம்,வடக்கு சிட்னி, அவுஸ்திரேலியா. | http://ucsc.cmb.ac.lk/social-life-networks/ |
| நிலைபேறான கணிப்பீட்டு ஆராய்ச்சிக் குழு (SCoRe) | நிலைபேற்றுத் தன்மைக்கு இட்டுச் செல்லும் குறைந்த செலவு முறையியல்கள் மற்றும் உபாயங்களினை இனங்கால் ஊடாக கணிப்பீட்டுத் தீர்வினை உருவாக்குதல் | டாக்டர். கசுன் டீ சொய்சா,டாக்டர். சமத்கெப்பிற்றியகம, மஞ்சுசிறிவிக்கிரமசிங்க, கசுன்குணவர்தன, சத்துரசுதுவெல்ல,சரித்எல்விற்றிகல, அசங்கசயாக்கார, நாமல்ஜயசூரிய, பிரிமல் விஜேசேகர | http://ucsc.cmb.ac.lk/research-groups/sustainable-computing-research/ |
| மொடலிங் மற்றும் ஒப்புருவாக்கக் குழு | இலங்கை கடற்படைக்கு கப்பலினைக் கையாளல் ஒப்புருவாக்கி(விதுசாயுர) பற்றிய பணிக்கு | பேரா. என்.டி.கொடிகார, ரியர்அட்மிரல் ரஞ்சித்சேனாதீர (இலங்கை கடற்படை) ,திரு.ஆர்.பீ. அபயக்கோன்(தேசிய மீன்பிடிகள் மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவகம்) பேரா.ரெக்ஸி ரோசா, திரு. குபில டயஸ், டாக்டர். சமத் கெப்பெற்றியகம, திரு. தமித்த சந்தருவன், திரு. ராதிகாஆரியரட்ன, திரு. போஸிதாரவிநாத், | http://ucsc.cmb.ac.lk/research-groups/modelling-simulation-group/ |

| | | | |
|---|---|---|---|
| | | திரு.சந்தனபெரேரா, திரு. காஞ்சனாமனம்பேரி, திரு. புபுதுரணதுங்க, திரு. சதெகஉதுவரகே,திரு. சத்துரகுணசேகர | |
| மொழி தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆய்வுகூடம் (LTRL) | உள்ளூர்மயமாக்கல் மற்றும் மொழி செயல் ஒழுங்குபடுத்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினைச் செய்வதன் மூலம் இலங்கையில் உள்நாட்டு மொழி கணிப்பிடல் தேவையினை அதிகரிக்கும் தீர்வுக்கு | டாக்டர்.ஏ.ஆர்.வீரசிங்க, திரு. விராஜ்வெல்கம,திரு. சமிலாலியனகே, திரு.நாமல் உதலமத்த,திரு. ரந்தில்புஸ்பானந்த, திருமதி. திலினிஎடுன்கொடக,திருமதி. தில்ஹனி சமரநாயக்க, திருவதி. அருன்ஜாசிவபாதசுந்தரம், செல்வி. அமத்ரி பெரேரா, செல்வி.லக்ஸிகாநாணயக்கார, செல்வி. கவிந்திஜிம்ஹனிகாவெதசிங்க | http://ucsc.cmb.ac.lk/research-groups/language-technology-research-laboratory/ |
| இ-சுகாதாரக் குழு | | டாக்டர். சிரோமி அருணதிலக்க | http://ucsc.cmb.ac.lk/research-groups/e-health-group/ |
| | உறுதியான இடைவெளி மற்றும் பெரிய அளவிலான விநியோகிக்கப்பட்ட முறைமைகளின் பகிரப்பட்ட உறுதியான இடைவெளி மற்றும் அவசரமான நடத்தை அடிப்படையில் புதிய இடைப்பொருள் கட்டடக்கலைகள் மற்றும் இணையான படிமுறைத் தீர்வின் விருத்தி | டாக்டர். டி.என்.ரணசிங்க, திரு.கே.பீ.எம்.கே.சில்வா, தீரு. டபிள்யு. ஆர். எம்.யு.கே. விக்கிரமசிங்க, கே. கணேசமூர்த்தி | http://ucsc.cmb.ac.lk/research-groups/distributed-computing-group/ |

| | | | |
|---|---|---|---|
| உயிரியலில் உயிர் தகவல்கள் மற்றும் கணிப்பீடு (BCB) | உயிரியல் அறிவினைக் கண்டுபிடிப்பதற்கு விதமான அங்கீகாரம் மற்றும் வலையமைப்புக்ள் போன்ற கணியரீதியிலான ஆய்வுகளினை தொடர்புபடுத்தி நடாத்துதல் : மற்றும் பல்வேறுவிதமான உயிரியல் தரவுகளினைப் பகுப்பாய்வு செய்வதற்கும் ஊகங்களினை மேற்கொள்வதற்கும் மற்றும் கணிப்பீட்டு ரீதியிலான உத்திகள், நெறிமுறைகள், கருவிகள் மற்றும் புள்ளிவிபர மாதிரிகளினை விருத்திசெய்தல். | டாக்டர்.ருவன் வீரசிங்க,திருவதி.ரூபிகா விஜேசிங்க, டாக்டர். மிந்திக்க பிரேமசந்திர, பேரா.மகேசன் நிரஞ்சன்/ சவுதம்ரொன் பல்கலைக்கழகம், ஐ.இரா. ,வினோட் என்.ராஜபக்ச/ தேசிய சுகாதார நிறுவகம், ஐ.அமெ. டாக்டர். யவ்வானி பூர்ணிமா/ சவுதம்ரொன் பல்கலைக்கழகம், ஐ.இரா., திரு. லூக் நிதிஸ் / அல்பேற்றா பல்கலைக்கழகம்,கனடா, திருவதி.வருணிகாரணவீர.்.சிமொன் பிரேஸர் பல்கலைக்கழகம், கனடா, திரு.சாகன்ஜப்பார் / அல்பேற்றா பல்கலைக்கழகம்,கனடா, திரு. பாக்ய சேனாதீர | http://ucsc.cmb.ac.lk/research-groups/bioinformatics-and-computational-biology-bcb-research-group/ |

## 3.1.7 ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் விருதுகள்

பின்வரும் அட்டவணை 2018 இல் ஆராய்ச்சி வெளியீடுகளின் சுருக்கத்தினைக் காண்பிக்கின்றது என்பதுடன் அனைத்து வெளியீடுகளின் விபரங்களும் இந்தப் பிரிவின் இறுதியில் தரப்படுகின்றன.

***அட்டவணை 3.1.7. –அ: வெளியீட்டுச் சுருக்கம் - 2018***

| வெளியீடுகளின் வகை | இலங்கையில் இடம்பெற்ற / பிரசுரிக்கப்பட்டவை | இலங்கைக்கு வெளியே இடம்பெற்ற /பிரசுரிக்கப்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|
| **மாநாடுகள்** | 23 | 20 | **43** |
| **இதழ்கள்** | 02 | 17 | **19** |
| **புத்தக அத்தியாயங்கள்** | 01 | - | **01** |
| **புத்தகங்கள்** | 01 | - | **01** |
| **மொத்தம்** | **27** | **36** | **64** |

கல்விசார் பதவியினர், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்களை வழிப்படுத்துவதன் மூலம் ஆராய்ச்சிக் கட்டுரைகளை பிரசுரித்தல் வசதிப்படுத்தும் பங்களிப்பு வகிக்கின்றனர். அவர்கள் கற்பித்தல் மற்றும் நிர்வாக வேலைச் சுமைகள் காரணமாக முதலாவது

நூலாசிரியராக இருப்பதற்கு போதிய நேரத்தினை அரிதாகவே காண்பிக்கின்றார்கள். பின்வரும் அட்டவணை 2018 இல் ஒவ்வொரு பதவியினர் உறுப்பினர் தொடர்பிலான வெளியீடுகளின் முகப்பார்வையினைக் காண்பிக்கின்றது.

### *3.1.7. எம்.பி: வெளியீடுளின் விபரப் பகுப்பாய்வுகள் - 2018*

| பதவியினர் உறுப்பினரின் பெயர் | மாநாடுகள் | இதழ்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| பேரா. கே.பீ. ஹோகமகே | 6 | 1 | **7** |
| பேரா. என்.டீ.கொடிகார | | 2 | **2** |
| டாக்கடர். ஏ.ஆர்.. வீரசிங்க | 6 | 1 | **7** |
| டாக்கடர். ஏ.எஸ். அத்துகோரல | 1 | | **1** |
| திரு. ஜிகன்செனவிரட்ன | | 2 | **2** |
| டாக்டர்.ரி.என். கே. டீ. சொய்சா | 4 | | **4** |
| டாக்டர். ஜி.டீ.எஸ்.பீ. விமலரட்ன | 1 | 4 | **5** |
| டாக்டர். ரி.சிறிதரன் | 1 | | **1** |
| டாக்டர்.. டி.டி. கருணாரட்ன | 3 | 3 | **6** |
| டாக்டர். எம்.டீ.ஜே.எஸ். குணதிலக்க | 4 | | **4** |
| டாக்டர். கே. ஏல். ஜயரட்ன | 3 | 4 | **7** |
| டாக்டர்.எஸ். எம்.கே.டீ.அருணதிலக்க | 1 | 1 | **2** |
| டாக்டர். சமத்கெப்பெற்றியகம | 7 | 1 | **8** |
| டாக்கடர். எச்.ஏ. கலதெர | 1 | | **1** |
| டாக்டர். எம். ஜி. என்.ஏ. எஸ். பர்ணாந்து | 1 | | **1** |
| டாக்டர். ரி.எம்.எச். ஏ. அசூவ் | 1 | | **1** |
| திருமதி. சீ.ஆர். விஜேசிங்க | 2 | 1 | **3** |
| டாக்டர்..எம்.ஐ. ஏ.விக்கிரமசிங்க | 3 | | **3** |
| டாக்டர். எச். .இ எம். எச்.பி. ஏக்கநாயக்க | 1 | | **1** |
| டாக்டர். கே.சந்தரூவன் | 2 | 2 | **4** |
| டாக்டர். ரி.ஏ.வீரசிங்க | 3 | | **3** |
| டாக்டர். எப். எச்.ஏ.எம்.பிரேமச்சந்திர | 1 | | **1** |

| | | | |
|---|---|---|---|
| டாக்டர்.எல்.என்.சி.டீ.சில்வா | 1 | | **1** |
| திருவதி.டி.என்.பெரேரா | 1 | | **1** |
| டாக்டர். கே. ஜி.ஜி.குணவர்தன | 3 | 1 | **4** |
| டாக்டர். கே.எச்.ஈ. ஏல். டபிள்யு.ஹெட்டியாராச்சி | 5 | | **5** |
| திரு. இசுறுதர்மதாஸ | 2 | | **2** |
| திரு. ரங்கனஜயசேகர | 4 | | **4** |
| செல்வி. லக்சிகா நாணயக்கார | 1 | 1 | **2** |
| திரு. பிரபாஸ்குமாரசிங்க | 1 | | **1** |
| திரு.ஏ. சயாக்கார | 2 | | **2** |
| திரு.ஆர்.என். ராஜபக்ச | | 1 | **1** |
| டாக்டர். திலினிநாகுன்கொட | 2 | | **2** |
| டாக்டர். ரந்தில்புஸ்பானந்த | 2 | | **2** |

### 3.1.7.1 2018இல் ஆராய்ச்சிக்கான விருதுகள்

UCSCஇனால் தேசிய மற்றும் சருவதேச அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிவாரி மதிப்பீட்டுக்காக மாணவர்கள் மற்றும் பதவியினரை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலையினை சமர்ப்பிக்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கு தொடரப்பட்டது. 2018 இல், வெவ்வேறான வெளிவாரி அமைப்புக்களிடமிருந்து ஆராய்ச்சி வேலைக்காக 8 விருதுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

***அட்டவணை 3.1.7.1- அ: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான விருதுகள்-2018***

| விருதுகளின் பெயர்கள் | விருது வழங்கும் முகவராண்மை | வெளியீடு அல்லது செயற்றிட்டம் | அணி உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| அதிசிறந்த ஆய்வுக் கட்டுரை விருது | நான்ஜிங் நோமல் பல்கலைக்கழகம் விஞ்ஞான கல்விப் கல்விப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட யுபி ஊடகக் கணிணிக் கல்வி மற்றுறும் பயிற்சிப்பட்டறை தொடர்பான 11 ஆவது சருவதேச மாநாடு | கற்றல் பகுப்பாய்வு மற்றும் கற்றல் வடிவமைப்புக்கு இடையில் கூட்டணி விருத்தியடைவதற்கான முக்கிய வெற்றிக் காரணிகள் | திரு . ரங்கன ஜனஜயசங்க , இ பேராசிரியர் கே.பீ. ஹேவகமகே மற்றும் டாக்டர்(திருவதி) ஈ. ஹெட்டியராச்சி |

| | | | |
|---|---|---|---|
| 1 வது இடம்- செயற்றிட்டம்: சுகாதார கல்வி மற்றும் சுகாதார மேம்பாடு | 3 வது பொதுநல டிஜிற்றல் சுகாதார மாநாடு ரூ விருதுகள் | செயற்றிட்டம்: சீபீஆர் க்கான வீஆர் | திருவதி.எச்.எஸ். யு. லியனகே, டாக்கடர். கே எல் ஜயரட்ன, டாக்டர். எம் ஜ ஈ விக்கிரமசிங்க |
| 1வது இரண்டாம் இடம்- செயற்றிட்டம்: இ கற்றல் | | செயற்றிட்டம்: பீசீனு க்கான ஒன்லைன் | திருவதி எம் ஏ டீ எல் முடனாவக்க, டாக்டர்.ரி.ஏ. வீரசிங்க |
| வெள்ளி விருது: மூன்றாம்நிலை மாணவர் செயற்றிட்டம்(வியாபார ம்) | தேசிய சிறந்த தரம் த.தொ.நு விருது (NBQSA) 2018இ இலங்கை | செயற்றிட்டம்: ஒன்லைன் சந்தை இடத்திற்கான இணைய ஆடை பொருத்துவதற்கான த.தொ.நு அடிப்படையிலான தீர்வு | டாக்டர். கே.டீ. சந்தரூவன் மற்றும் மகேஸ்யவீரசிங் க |
| தேசிய விஞ்ஞான மன்றம் ஆதிசிறந்த தொழில்நுட்ப விருது | தேசிய விஞ்ஞான மன்றம்,இலங்கை | செயற்றிட்டம்: முக ஐடி: 3 டி கிரபிக்ஸ் ஐ உபயோகித்து சட்ட முக மீளஅமைப்பு அடிப்படையிலான கணிணி | டாக்டர். ஏ.ரி.தர்மரட்ன, டாக்டர். கே.டீ. சந்தரூவன், டாக்டர். டீ.டீ கருணாரட்ன மற்றும் பேரா. ஏம். விதானபத்திரன |
| சிறந்த ஆய்வுக் கட்டுரை விருது | மி.இ.பொ.நி. கற்றல் தொழில்நுட்பங்களில் முன்னேற்றங்கள் தொடர்பான சருவதேச மாநாடு(ஐசிரிஏஎல் 2018), இந்தியன் தொழில்நுட்பநிறுவகம்,பம்பா ய், மும்பை | கற்றல் வடிவமைப்பு மற்றும் கற்றல் பகுப்பாய்வுக்கு இடையிலான கூட்டணி ஊடாக உயர் கல்வியில் கலப்புக் கற்றலினை மேம்படுத்தல் | திரு ரங்கனஜயசங்க , இ பேராசிரியர் கே.பீ. ஹேவகமகே மற்றும் டாக்டர்(திருவதி) ஈ. ஹெட்டியராச்சி |
| விஞ்ஞான வெளியீடுகளுக்கான சனாதிபதி விருதுகள் | தேசிய ஆராய்ச்சி பேரவை/சனாதிபதி அலுவலகம் | விஞ்ஞான வெளியீடுகளின் இணையம் | டாக்டர்.ஜி.டீ.எ ஸ்.பீ. விமலரட்ன |
| சிறந்த ஆய்வுக்கட்டுரை விருது | 2018 மேலெழும் பிராந்தியங்களுக்கான த.தொ.தொ.நு இல் முன்னேற்றங்கள் தொடர்பான 2018 சருவதேச மாநாடு(த.தொ.தொ.நு லாளர்) | சிறுபராய என்புமச்சையில் ஏற்படும் புற்றுநோய்பீடிக்கப்பட்ட வரகளின் தப்பிப்பிழைக்கும் நேரத்தினை ஊகிப்பதற்கு அணுகும் இயந்திரக் கற்றல் | திரு ரங்கனஜயசங்க, திருவதி.சி.ஆர். விஜேசிங்க, டாக்டர். ஏ.ஆர். வீரசிங்க, திரு.டீ.சீ.பீரிஸ் |

5. 2019 - 2023 பொருட்டான தந்திரோபாய திட்டத்துடன் சேர்ந்து வெளிப் பயிற்சித்திட்டம் 2018 நவம்பர் மாதத்தில் நடைபெற்றது. பதவியினர்களிடையே சமூக ஒற்றுமை மற்றும் நட்புறவை மேம்படுத்தும் முகமாக நலன்புரி சங்கத்தின் உதவியுடன் மூன்று நாள் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது. அது மிகவும் பயன்மிக்க செயலமர்வாக இருந்ததுடன் தோற்றுவிக்கப்பட்ட இயைபான ஒதுக்கீடு செயற்பாட்டுக்கு நிதியீட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டது.
6. 2018இல், தாய்லாந்தில் இடம்பெற்ற சர்வதேச செயலமர்வொன்றில் பங்குகொள்ள நிர்வாக பதவியினர் ஒருவருக்கு உதவியளிக்கப்பட்டதுடன் இந்தியாவில் இடம்பெற்ற கிரிக்கற் சுற்றுப் போட்டியில் பங்குகொள்ள கல்விசாரா பதவியினர் ஒருவருக்கு உதவியளிக்கப்பட்டது.

### 4.4.1 மருத்துவ உதவித்திட்டம்

UCSC க்கு நிறுவனத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பற்றிய நிறுவனம்சார் கொள்கையின் ஒரு பகுதியாக மருத்துவ உதவித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மருத்துவ உதவித் திட்டத்தில், பணியாளர்களுக்கு மூன்று திட்டங்களில் ஒன்றுக்கு பதிவுசெய்யும் வாய்ப்புத் தரப்படுகின்றது. அது வைத்தியச் செலவுகள் ஏற்படுகின்ற போது பல்வேறு உதவி எல்லைகளைக் கொண்டிருக்கின்றன. இதன் குறிக்கோள், மருத்துவ பாசறைகளை நடாத்துவது மற்றும் அவர்களுடைய மருத்துவச் செலவினங்களுக்குப் பகுதியளவில் உதவுவதன் மூலம் பணியாளர்கள் அவர்களின் சுகாதார நிலைமையில் ஒரு நல்ல சுயவிவரத்தை பேணுவதற்கு உதவுவதாகும். இது அதன் ஊழியர்களை ஊக்கப்படுத்தி பணியிடத்தில் அவர்களின் செயல்திறனை அதிகரித்து நிறுவனத்திற்கு மேலதிக வருமானத்தினை தோற்றுவிப்பதில் முழு ஒத்துழைப்பினையும் வழங்குவதற்கு குறிப்பாக வேலைநேரத்தின் பின்னர் உதவும் என UCSC எதிர்பார்க்கின்றது. ஊழியர்கள் அவர்களது வாழ்க்கையில் முகங்கொடுக்கும் பாரதூரமான நிலைமைகளில் குறிப்பாக எதிர்பாராத மோசமான நேரங்களில் முகங்கொடுக்க அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை பெறுவதற்கு அக்கறையுள்ள ஊழியர்களுக்கு UCSC பகுதியளவில் உதவி வழங்குகிறது.

### 4.4.2 UCSC இன் நலன்புரி சங்கம்

UCSC யின் நலன்புரிச் சங்கம் ஊழியர்களின் வகை மற்றும் தரங்களை கருதாது அனைத்துப் பணியாளர் குழாம் உறுப்பினர்களுக்கும் ஒரு தன்னார்வ சமூகமாக இருந்து வருகின்றது. அதன் முக்கிய கட்டளை பணியாளர் நலன்புரி தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதாகும். ஒரு பணியாளர் குழாம் உறுப்பினரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர் ஒருவர் காலஞ்சென்ற போது, நலன்புரிச் சங்கம் மற்றைய பணியாளர் குழாம் உறுப்பினர்கள் இறுதி நிகழ்விற்குச் சமூகமளிப்பதற்கும் அத்துடன் நிறுவனத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவருக்கு உதவுவதற்கும் போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்கின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது குறித்த பணியாளருக்கு நிதிசார் அல்லது வேறு சில வழிகளிலும் கூட உதவுகின்றது. UCSC யில் குறைந்தபட்சம் ஒரு வருட சேவை காலத்தினைப் பூர்த்தி செய்திருக்கின்ற அனைத்துப் பணியாளர்களுக்கும் நலன்புரிச் சங்கத்தின் உறுப்புரிமை திறந்துள்ளதுடன் அவர்கள் உறுப்பினராவதற்கு ஒரு உறுப்புரிமைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

# 5. நிறுவனம்சார் அபிவிருத்தி

# 5. நிறுவனம்சார் அபிவிருத்தி

## 5.1 தர உத்தரவாதம் மற்றும் சான்றளிப்பு

வெளிவாரிப் பட்டநிகழ்ச்சித்திட்டங பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தரப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க கொழும்பு பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழகத்திலுள்ள சகல பீட்ங்கள் மற்றும் நிறுவகங்களின் தர உத்தரவாதத்தை ஒருங்கிணைப்பு செய்வதற்கு பிரதான நிலையமாக உள்ளக தர உத்தரவாத கூறினை(IQAU) தாபித்துள்ளது. UCSC இன் தர உத்தரவாத கலம் அதன் நடவடிக்கைகளை 2015 யூன் மாதம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்ததுடன் நிறுவனம்சார் மீளாய்வு அறிக்கையை தயாரித்தல் முதல் பணியாக விளங்கியது. 2016இல் பௌதிக இடமொன்று த.உ.சா பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் த.உ.சா இன் முதலாவது சபை கூட்டம் 2016 ஒக்டோபர் 7 ஆம் திகதி நடைபெற்றது. UCSC இன் தர உத்தரவாத கலத்தின் நோக்கம் யாதெனில், நிறுவகத்திலுள்ள சகல கல்விசார் மற்றும் பிற செயற்பாடுகளின் தரத்தை தொடர்ந்து மேம்படுத்துவதற்கான சூழலை உருவாக்குவதாகும்.

### த.உ.சா. குழு உறுப்பினர்கள் 2018

(i) பணிப்பாளர்- பேராசி. கே.பீ.ஹேவாகமகே, பணிப்பாளர்/UCSC

(ii) தவிசாளர் / நிறுவகத்தின் தலைவர், த.உ.கலம் - பேரா.என்.டி.கொடிக்கார, இணைப்பாளர் த.உ.சா.

(iii) செயலாளர்/த.உ.சா. - கலா.கே.எச்.ஈ.எல்.டபிள்யூ.ஹெட்டியாரச்சி, சிரேஷ்ட விரிவுரையாளர், செயலாளர் த.உ.சா.

(iv) சிஉப /த.உ.சா. - திருவதி. ஜே.ஏ.எம்.எஸ்.விஜேரத்ன, சிரேஷ்ட உதவி பதிவாளர்

(v) தவிசாளர்- பாடவிதான & கல்விசார் அபிவிருத்திக் குழு - கலா.(திருமதி)எம்.டி.ஜே.எஸ்.குணதிலக,

(vi) துறைகளின் தலைவர்கள்

(vii) இளமாணி/பட்டப்பின்/வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் இணைப்பாளர்கள்

- கலா. எம்.ஜி.என்.ஏ.எஸ்.பர்னாந்து, சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்– கணினி விஞ்ஞானம் ( CS)
- கலா. ரி.என்.கே. த சொய்ஸா, சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்– தகவல் முறைமை (IS)
- திரு. டபிள்யூ.வி.வெல்கம –சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்– மென்பொருள் பொறியியல் ( SE)
- திருவதி. எம்.டபிள்யூ.ஏ.சி.ஆர்.விஜேசிங்ஹ, சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்/CS –விஞ்ஞா ன பீடம்
- கலா. ரி.என்.கே. த சொய்ஸா, சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்–தகவல் பாதுகாப்பு முது மாணி (MIS)
- கலா. எச்.ஏ.கல்தேரா, சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்– தகவல் தொழில்நுட்ப முதுமாணி (MIT)
- கலா. எச்.ஈ.எம்.எச்.பி.ஏக்கநாயக்க, சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்– கணினி விஞ்ஞான மு துமாணி (MCS)
- கலா. டி.டி.கருணாரத்ன, வெளிவாரிப் பட்டநிகழ்ச்சித்திட்டத்தின் கல்விசார் இணைப்பாளர்

(viii) நிலையங்களின் இணைப்பாளர்கள் (e-கற்கை மற்றும் உயர்தொழில் அபிவிருத்தி)

- கலா. டி.டி.கருணாரத்ன, சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப்பாளர்/ e-கற்கைநிலையம் (eLC)
- கலா. எல்.என்.சி.த சில்வா, விரிவுரையாளர், இணைப்பாளர்/ உயர்தொழில் அபிவிருத்தி நிலை யம் (PDC)

(ix) கல்விப்பிரிவின் பிப./சிஉப., பிரதிநிதித்துவம் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சை

(x) முறைமை விருத்தியாளர் - திரு. ஆர்.என்.ஆர். ராஜபக்ஷ, விரிவுரையாளர்(தகுதிகாண்)

(xi) உதவி முறைமை விருத்தியாளர் - திரு.ஆர்.ஜே.அமரவீர, உதவி விரிவுரையாளர்

(xii)முகாமைத்துவ உதவியாளர்- திருவதி என்.எஸ்.கஜசிங்க

**2018 இல் மேற்கொள்ளப்பட்ட த.உ.சா. செயற்பாடுகள்**

- 80% வரவு விதி இளமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மீது விதிக்கப்பட்டது.
- வேலைவாய்ப்புத்திறன் அளவீட்டு பொழிப்பு அறிக்கை, கற்கை பிரிவுகள் தொடர்பில் UCSC பட்டதாரிகளினால் தயாரிக்கப்பட்டது.
- சகல பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை கருத்திற்கொண்டு UCSC இன் த.உ.சா இன் தந்திரோபாய திட்டத்தை விருத்தி செய்வதற்கான செயலமர்வொன்று 2018 ஜனவரி 15ம் திகதி நடைபெற்றது.
- 2020 நிகழ்ச்சித்திட்ட மீளாய்விற்கான சான்று சேகரிப்பு உள்வாரி இளமாணி பட்டங்களை கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- பீடாதிபதி நிரல் மற்றும் பீட விருதுகள் பிரமாணங்கள் திருத்தப்பட்டன. அவர்களது பெயர்கள் பணிப்பாளர் நிரல் மற்றும் UCSC விருதுகளில் பெயர் மாற்றம்
- இளமாணி மற்றும் பட்டப்பின் இரண்டிற்குமான மாணவர் பின்னூட்டல் பொழிப்பு அறிக்கை விருத்தி செய்யப்பட்டதுடன் உரிய விரிவுரையாளர்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்துக்கான இணைப்பாளர்களுக்கும் தலைவர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.
- பதவியினர்களிடையே தரச் சூழலை விருத்தி செய்வதற்காக மாணவர் பின்னூட்டலை மதிப்பிடுதல் பற்றிய கொள்கை உருவாக்கப்பட்டது.
- ஒரு விரிவுரையாளரை விட அதிகமானவர்களின் தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு மாணவர் பின்னூட்டல் படிவங்கள் மீள வடிவமைக்கப்பட்டதுடன் தன்னியக்க பகுப்பாய்வுக்கான உரிய மென்பொருள் புதிய தேவைப்பாட்டிற்காக இற்றைப்படுத்தப்பட்டது.
- வேலைவாய்ப்புத்திறனை கணக்கெடுப்பதற்காகவும் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அவர்களது அக்கறையை இனங்காணவும் BIT பட்டதாரிகளிடமிருந்து மாணவர் பின்னூட்டல் பெறப்பட்டது.
- மாணவர் பின்னூட்டல் பகுப்பாய்வு மென்பொருள் ஏனைய பீடங்களுக்கிடையில் பகிரப்பட்டதுடன் பயிற்சியும் வழங்கப்பட்டது.
- UCSC இல் த.உ.செயற்பாடுகளுக்காக மேலதிக நிதியை வேண்டி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.
- தர உத்தரவாத செயன்முறையை விருத்தி செய்வதற்கு இடைவருகை பேராசிரியர் ஒருவரை ஆட்சேர்க்க தீர்மானிக்கப்பட்டது.
- தேவையான கடமைகளை மேற்கொள்வதற்காக முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் த.உ.கு க்கு நியமிக்கப்பட்டார்.
- த.உ.கு இன் 10 கூட்டங்கள் நடைபெற்றன என்பதுடன் கூட்டறிக்கைகளின் பிரித்தெடுப்புக்கள் கல்வி திட்டக்குழு / மூதவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாத கூறின் முகாமைத்துவ குழு கூட்டங்கள் அனைத்திலும் கலந்துகொண்டமை.

## 5.2 உட்கட்டமைப்பு அபிவிருத்தி

### 5.2.1 நிறைவுசெய்த மூலதன செயற்றிட்டங்கள் - 2018

உரிய சேவைகளை விரிவாக்குவதற்கு வசதியளிக்கும் அதேவேளை மாணவர் சிற்றுண்டிச்சாலை, நூலகம் மற்றும் நிருவாக பிரிவுகளின் கட்டம் II முடிவுறுத்தப்பட்டது. அது பிரதான கட்டடத் தொகுதியுடன் இணைக்கப்பட்ட ஐந்து மாடிக் கட்டடமாகும். 2018 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட மூலதன செயற்றிட்டங்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இந்த பிரதான

நிருமாணத்துக்கு மேலதிகமாக, பல்வேறு மூலதன செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செயற்றிட்டத்தின் பெயர் | வற் இன்றி மதிப்பிடப்பட்ட பெறுமதி | வழங்கப்பட்ட தொகை | வற் & பிடிப்புபணம் இன்றி செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| மின்மாற்றி அறைக்கு அருகில் எல்லைச்சுவர் மீள் நிருமாணம் | 512,120.49 | 493,451.40 | 468,326.83 |
| குடிநீர் & தீ எதிர்ப்பு பொருட்டு நீர்த்தொட்டி நிருமாணம் | 19,973,980.00 | 19,323,257.00 | 18,146,781.97 |
| சிற்றுண்டிச்சாலை, நூலகம் மற்றும் நிருவாக பிரிவுகளின் கட்டம் II | 82.9 மில். | 70,165,000.00 | 66,657,320.00 |
| மின்மாற்றி & எம்டிபி அறை நிருமாணம் | 3,964,915.95 | 3,939,100.00 | 2,654,307.16 |
| மின்சார வடங்களையும் அடைசுபலகைகளையும் இடுதல் | 13,464,250.00 | 11,765,245.00 | 943,225.75 |

## 5.3 நிறுவனஞ்சார் அங்கீகாரத்தின் மேம்பாடு

UCSC தொடங்கியதிலிருந்து அரசாங்க மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் பொருட்டு ஆலோசனை சேவைகளை வழங்கி வருகிறது. இந்த ஆலோசனை திட்டங்கள் ஊடாக ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களுக்கு சேவையை வழங்குவதற்கும் அதேபோன்று இலங்கையில் கணினி கற்கைக்கான உயர் கல்வி நிறுவகமாக வியங்குவதற்கு மேலதிகமாக எமது இயலளவுகள் பற்றிய மக்களை விழிப்பூட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி குறிக்கோள்களை 2018ஆம் ஆண்டில் எய்துவதற்கு UCSC இன் பின்வரும் பதவியினர் பங்களித்தனர்.

| | பெயர் | அமைப்பு |
|---|---|---|
| | அத்துகோரல டிஏஎஸ் | • பதில் தலைவர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை, த.தொ.பீடம், கொ.ப.<br>• பொருளாளர்&இலங்கை கணினிச் சமூகத்தின் பேரவைஉறுப்பினர்<br>• செயற்றிட்ட இணைப்பாளர்– சிசிஎஸ்எல் மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட தேசிய பாடசாலை மென்பொருள் போட்டி<br>• உயர் கல்வியில் டிஜிட்டல் வாய்ப்புக்களை உருவாக்குவது பற்றிய யுனெஸ்கோ-எஸ்எப்ஜரி செயற்றிட்டத்துக்கான செயற்றிட்ட தொழினுட்ப நிபுணர்: கம்போடியா மற்றும் இலங்கை த.தொ.தொ.நோக்கிய புத்தாக்கத்துக்கான பதவியினர் இயலளவினை கட்டியெழுப்பல்<br>• தவிசாளர்- தொ.ம.கு.-AHEAD செயற்றிட்டம்<br>• தொ.ம.கு.உறுப்பினர் – இலங்கை தேயிலைச் சபை<br>• தொழில் கல்விமாணி பாடவிதானம் பற்றிய மீளாய்வுக் குழு உறுப்பினர், IHRA<br>• ப.மா.ஆ.தத்துவமுதுமாணி/கலாநிதி வழங்கலுக்கான தெரிவுக் குழு உறுப்பினர்<br>• தொ.ம.கு.உறுப்பினர், பிரதான நூலகம், கொ.ப. |

| | | |
|---|---|---|
| | | • தொ.ம.கு.உறுப்பினர், ஆசிரியர் மற்றும் மாணவர் பொருட்டான டெப் செயற்றிட்டம் - கல்வி அமைச்சு<br>• ப.மா.ஆ.இன் வெளிவாரி பட்டம் பற்றிய நிலையியற் குழு உறுப்பினர்<br>• SLITS சேவை பிரமாணத்துக்கான ப.மா.ஆ.அங்கீகரித்த த.தொ. பட்டம் சேர்த்தல் பற்றிய உப குழு உறுப்பினர் |
| | கல்தேரா எச்ஏ | • தொ.ம.கு.உறுப்பினர் -பொலிஸ் திணைக்களம் |
| | தயாரத்னஎம்என்ஆர் | • மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்<br>• தொகைமதிப்புமற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்<br>• கல்வி திணைக்களம்<br>• தேசிய போக்குவரத்து ஆணைக்குழு<br>• தேசிய காப்புறுதி நம்பிக்கைபொறுப்பு நிதியச் சபை<br>• கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு<br>• டவர் மண்டப தியேட்டர் மன்றம் |
| | த சொய்சா ரீஎன்கே | • தொ.ம.கு.உறுப்பினர் - அரச ஈட்டு&முதலீட்டு வங்கி<br>• ஆலோசகர்- கூட்டுறவு கிராமிய வங்கி சம்மேளன லிமிடட்<br>• உள்நாட்டு இறைவரித் திணைக்களம் |
| | பர்னாந்துஎம்ஜிஎன்ஏஎஸ் | • ஆலோசகர் - எச்டிஎப்சி வங்கி<br>• நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு குழாம் உறுப்பினர்– உயர் கல்வி அமைச்சு– அரசு சார்பற்ற பட்ட நிகழ்ச்சித்திட்டம் |
| | குணதிலக ஜேஎஸ் | • விஞ்ஞானம்,ஆராய்ச்சி,திறன் அபி. & தொழிற் பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமை அமைச்சு |
| | ஹெட்டியாரச்சி ஈ | • வளவாளர்- கலப்பு கற்றல்ஸ்ரீ பாலி வளாகம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| | ஹேவகமகே கேபீ | • பாடசாலை பிள்ளைகளுக்கான லெப்ரொப் கணினி பொருட்டான சனாதிபதி செயலணி மற்றும் அமைச்சரவை நியமித்த குழுவின் உறுப்பினர்<br>• உயர் கல்வியில் டிஜிட்டல் வாய்ப்புக்களை உருவாக்குவது பற்றிய யுனெஸ்கோ-எஸ்எப்ஜரி செயற்றிட்டத்துக்கான மதியுரையாளரும் ஆலோசகரும்: கம்போடியா மற்றும் இலங்கை த.தொ.தொ.நோக்கிய புத்தாக்கத்துக்கான பதவியினர் இயலளவினை கட்டியெழுப்பல<br>• LEARN பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>• ப.மா.ஆ.இன் கணினியியல் பற்றிய நிலையியற் குழுவின் உறுப்பினர்<br>• ப.மா.ஆ.இன் வெளிவாரி பட்டம் பற்றிய நிலையியற் குழுவின் உறுப்பினர்<br>• SLITS சேவை பிரமாணத்துக்கான ப.மா.ஆ.அங்கீகரித்த த.தொ. பட்டம் சேர்த்தல் பற்றிய உப குழு உறுப்பினர்<br>• இன்டர்நஷனல் ஒலிம்பியாட் இன்போமெடிக்ஸ் (IOI) குழுவுக்கான மதியுரையாளர் |
| | ஜயரத்னகேஎல் | • ஆலோசகர்–ஆட்பதிவுத் திணைக்களம்<br>• ஆலோசகர்- வீதி அபி.,போக்குவரத்து,வீடமைப்பு அமைச்சு& CI&RD, வடமேல் மாகாணசபை<br>• தொ.ம.கு.உறுப்பினர்- சட்டமா அதிபர் திணைக்களம்<br>• தொ.ம.கு.உறுப்பினர்- அபிவிருத்தி லொத்தர் சபை<br>• தொ.ம.கு.உறுப்பினர்- நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| | ஜயசிங்க ஜிபீ | • நேர்முகப்பரீட்சை குழாம் உறுப்பினர் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை |
| | கருணாரத்ன டிடிகே | • தொ.ம.கு.உறுப்பினர் - கல்வி அமைச்சு<br>• நேர்முகப் பரீட்சை குழாம்உறுப்பினர்- பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு |

| | | |
|---|---|---|
| | | • நேர்முகப் பரீட்சை குழாம்உறுப்பினர் - இலங்கை சான்றளிப்புச் சபை |
| | மாதரஆரச்சி எஸ்எஸ்பீ | • இணைப்பாளர் –எப்ஐரீஜஎஸ் மற்றும் கல்வி அமைச்சு அகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்ட இளம் கணினி விஞ்ஞானி<br>• தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு குழுவின் உறுப்பினர் - ஹொரஸ் சிடீஸ் கொப் 18, சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசி மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சு |
| | ரணசிங்க டிஎன் | • தொ.ம.கு.உறுப்பினர்- வளிமண்டலவியல் திணைக்களம் |
| | வீரசிங்க ஏஆர் | • மதியுரைக் குழு உறுப்பினர்- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை<br>• மதியுரைக் குழு உறுப்பினர்- அரச நிதி திணைக்களம்<br>• உறுப்பினர்,உயிர்தொழினுட்பவியலுக்கான இலங்கை நிறுவகத்தின் தேசிய திட்டமிடல் குழு<br>• தவிசாளர், பேராசி.வி.கே.சமரநாயக்க மானியங்கள் சபை, இலங்கை ஆள்களம் பதிவகம்<br>• உறுப்பினர், பணிப்பாளர் சபை, தீக்ஷன.<br>• உறுப்பினர், பணிப்பாளர் சபை, SLCert.<br>• சபைஉறுப்பினர், தரவு விஞ்ஞான நிலையம், கொழும்பு பல்கலைக்கழகம்.<br>• நெறிப்படுத்தும் குழு உறுப்பினர்,கொழும்பு பல்கலைக்கழகத்தின் பாலியல் சமத்துவத்துக்கான நிலையம்.<br>• உறுப்பினர், பொறியியல் விஞ்ஞானங்கள் பற்றிய செயற்குழு, தேசிய விஞ்ஞான மன்றத்தின் கட்டிடக்கலை&ததொதொ.<br>• உறுப்பினர், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின்ICT/BPM மதியுரைக் குழு.<br>• உறுப்பினர், ICTA இல் உள்ளூர் மொழி செயற்குழு<br>• உறுப்பினர், இலங்கை தரக்கட்டளைகள் நிறுவகத்தில் தகவல் தொழில்நுட்பம் பற்றிய பகுதியளவுக் குழு |
| | வீரசிங்க ரீஏ | • தொ.ம.கு.தவிசாளர்- கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கல்வி அமைச்சு<br>• செயற்றிட்ட முகாமைத்துவக் குழுவின்உறுப்பினர்– செயற்றிட்ட இணைப்பாளர், யுனெஸ்கோ கலப்பு கற்றல்செயற்றிட்டம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| | விக்ரமசிங்க எம்ஜ | • ஆலோசகர்- ஆட்பதிவுத் திணைக்களம்<br>• தொ.ம.கு.உறுப்பினர்- தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை |
| | விமலரத்ன ஜிடிஎஸ்பீ | • கல்வி அலுவல்கள் சபையின் உறுப்பினர், தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு<br>• மதியுரைக் குழு உறுப்பினர்,கல்வி அலுவல்கள் சபை, கல்வி அமைச்சு |
| | எல்ரீஆர்எல்<br>ஆராய்ச்சிக் குழு | • கண்காட்சி பங்கேட்பு –<br>  ◦ டிஸ்ரப் ஆசியா ஸ்டாட்அப் மாநாட்டில் அனுகுகை/உள்ளடக்கத்தில் எல்ரீஆர்எல் கூடம், 2018 ஆக்ஸ்ட் 11<br>  ◦ SLAAS அமர்வில் எல்ரீஆர்எல் மற்றும் பயோஇன்பொமெடிக்ஸ் கூடங்கள், 2018 |

# 6. நீதி

# 6. நிதி

புதிய நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம், முகாமைத்துவச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பிற்பாடு 2019ஆம் ஆண்டின் முதல் இரு மாதங்களினுள் இறுதிக் கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரிவில் பின்வரும் பிரித்தெடுப்புக்கள்,கணக்காய்வாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கணக்குகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பின்னரான மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. நிதிக் கூற்றுக்கள் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இப்பிரிவில், நிறுவனத்தின் நிதி நிலமை விபரிக்கப்பட்டு ஆராயப்படுகின்றது.

## 6.1 மீண்டுவரும் செலவினம்

நிறுவனத்தின் அன்றாட செயற்பாடுகளின் தேவைகளை ஈடுசெய்வதற்கு திறைசேரி நிதிகள் போதாமையினால், நிறுவனத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தோற்றுவிக்கப்பட்ட வருமானம் முக்கிய வருமான மூலமாக மாறியுள்ளது. நிறுவகத்தின் பிரதான அலுவல் உள்வாரி இளமாணி நிகழ்ச்சித்திட்டங்களை நிருவகிப்பதாகும், அதற்காக ஒரு வாரத்தின் 7 நாட்களில் 5 நாட்கள் ஒதுக்கப்படுகின்றன. எனவே,மீண்டுவரும் செலவினத்தின் பெருந்தொகை இளமாணி நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கு நேரடியாக தொடர்புபடுகின்றது.2018 இல்,ஒரு மாணவருக்கு 339,512/= மீண்டுவரும் செலவினம் என்ற அடிப்படையில்செலவிடப்பட்டிருந்தது.

பொதுவாக,மீண்டுவரும் செலவினங்கள்487.80 மில்லியன் ஆகவிருந்ததுடன் அதில்275 மில்லியன் UCSCஇன் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ஆகவிருந்தது. வேறு விதமாக கூறின்,மொத்த மீண்டுவரும் செலவினத்தில் 56% UCSC தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தில் இருந்தாகும். மீண்டுவரும் செலவினத்தின் பிரதான வகைப்படுத்தல் அட்டவணையில் கீழே தரப்பட்டுள்ளது.(மீண்டுவரும் செலவினம்).

**அட்டவணை *6.1.* அ: மீண்டுவரும் செலவினம் ரூ. *000'***

| விடயம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 163,513 | 194,627 | 234,711 |
| பிரயாணம் | 535 | 632 | 533 |
| வழங்கல்கள் | 5,818 | 8,673 | 7,411 |
| பராமரிப்பு | 5,186 | 8,428 | 6,525 |
| ஒப்பந்த சேவைகள் | 38,103 | 38,216 | 37,775 |
| ஏனையன | 122,219 | 164,319 | 200,847 |
| மொத்தம் | **335,374** | **414,895** | **487,802** |
| அரசாங்க ஒதுக்கீடு | **160,000** | **164,723** | **198,785** |

சம்பள அதிகரிப்பு பற்றிய அரசாங்க தீர்மானத்தின் காரணமாக ஆளுக்குரிய வேதனாதிகள் (பதவியினரின் சம்பளங்கள்) 2018 இல் கணிசமாக அதிகரிக்கப்பட்டன. ஆளுக்குரிய வேதனாதிகளை ஈடுசெய்வதற்காக மீண்டுவரும் செலவினங்களுக்கான அரசாங்க ஒதுக்கீடு போதாமையினால் முகாமைத்துவமானது, செலவு தொடர்பில் மிகவும் கவனமாக இருந்ததுடன் பிற செலவுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தியது; இதனை மீண்டுவரும் செலவின அட்டவணையில் 2017ஆம் ஆண்டுடன் 2018ஆம் ஆண்டு தொகைகளை ஒப்பிடும்போது நீங்கள் அவதானிக்கலாம்.

## 6.2 மூலதன செலவினம்

அரசாங்க மூலதன மானியம் போதாமையினால் திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக UCSC தோற்றுவிக்கப்பட்ட நிதியங்கள் பயன்படுத்தப்பட்டன. மூலதன செலவினம் 147.20 மில்லியன் ஆகும், அதில் 34 மில்லியன் UCSC இன்தோற்றுவிக்கப்பட்ட வருமானமாகும். பொதுவாக,ஒரு மாணவருக்கான மூலதன செலவினம் ரூ.171,170/= ஆகும். மூலதன செலவினத்தின் விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. (மூலதன செலவினம்)

**அட்டவணை *6.2.* அ: மூலதன செலவினம் ரூ. *000'***

| விடயம் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| தளபாடம் &அலுவலக உபகரணங்களை கொள்ளல் | 28,741 | 86,917 | 61,579 |
| இயந்திரங்களை கொள்ளல் | 8,782 | - | - |
| கட்டடம் &கட்டமைப்புக்களை கொள்ளல் | 146,406 | 111,222 | 85,628 |
| ஏனையன | 15,759 | 2,681 | - |
| மொத்தம் | **510,682** | **200,820** | **147,207** |
| அரசாங்க ஒதுக்கீடு | **245,000** | **107,450** | **112,250** |

### 6.3 ஆலோசனைச் சேவை மற்றும் ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் (வெளிவாரியாக நிதியிடப்பட்ட)

அனைத்து செயற்றிட்டங்களும் UCSC யின் ஆலோசனைச் செயற்றிட்டங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆலோசனைச் சேவைச் செயற்றிட்டங்கள் வெளித்தரப்பினர்களுக்கு ஒரு சேவையாக மேற்கொள்ளப்பட்டன. ஆலோசனைச் சேவைச் செயற்றிட்டங்களில் 30%,UCSC அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யப்பட்டதுடன் எஞ்சிய நிதி செயற்றிட்ட செலவுகளை ஈடுசெய்வதற்காக பயன்படுத்தப்பட்டது. செயற்றிட்டத் தொகை பெரிதாக இருந்தால், பிரதான ஆய்வாளர் பணியாளர் குழாம் உறுப்பினர்களின் மறைமுகப் பங்களிப்பினை உள்ளடக்கும் வகையில் நலன்புரி ஒதுக்கத்திற்காக செயற்றிட்ட நிதிகளின் 2-3% இனைப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவர்.

வெளிக்களத் தரப்பினர்களினால் நிதியிடப்பட்ட ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள், உடன்பட்ட குறிக்கோளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. விளைவுகள் வழமையாக இரண்டு நிறுவனங்களினாலும் பகிரப்பட்டு இணைந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளில் பிரசுரிக்கப்படுகின்றன. ஆராய்ச்சித் திட்டங்களின் 10% நிர்வாகக் கட்டணங்களாக அறவிடப்படுவதுடன் மீதி பிரதான ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பயன்படுத்தப்படுகின்றது.

அனைத்து மென்பொருள் அபிவிருத்தி செயற்றிட்டங்களும் ஆலோசனைச் சேவை வகைத் திட்டங்களாகக் கருதப்படுகின்றன. இந்தச் செயற்றிட்டங்களின் சில, அந்தச் செயற்றிட்டங்களுக்கான பிரதான ஆலோசகர் என்றவாறு தனிநபர் சிரேஷ்ட பதவி உறுப்பினர்களினால் நேரடியாக ஒருங்கிணைக்கப்படுகின்றன. UCSC இன் நிரந்தரப் பதவியினரான பிரதான ஆலோசகர் எவரினதும் சேவையை முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் பெறமுடியும். எனினும், அத்தகைய வேலைக்கான செலவு ஆலோசனை பாதீட்டினுள் மாத்திரமே நிதியீட்டப்படல் வேண்டும் மற்றும் பிரதான ஆலோசகர் முன்னேற்றத்தை, அந்த ஆலோசனைச் செயற்றிட்டங்களின் ஒட்டுமொத்த இணைப்பாளரான பணிப்பாளர் அவர்களுக்கு நேரடியாக அறிக்கையிடல் வேண்டும். ஏனெனில்,

பணிப்பாளரே UCSC முகாமைத்துவச் சபையின் ஒத்திசைவுக்கு உட்பட்டு அந்த வெளித்தரப்பினர்களுடனான உரிய சேவை உடன்படிக்கையில் கைச்சாத்திடுகிறார். கணித்தல் சேவை நிலையத்தின் கீழான மென்பொருள் அபிவிருத்தி அலகு அத்தகைய செயற்பாடுகளுக்கான அர்ப்பணிக்கப்பட்ட இடமாகும்.

**அட்டவணை *6.3.* அ: செயற்றிட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்ரூ. *000'***

| செயற்றிட்டத்தின் பெயர் | பாதீடிடப்பட்ட | விலை சிட்டையிடப்பட்ட | பெறப்பட்ட | செலவினங்கள் |
|---|---|---|---|---|
| ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் (நிதியீட்டம் உள்நாடு) | 2,000 | 1,896 | 1,896 | 1,896 |
| ஆராய்ச்சி செயற்றிட்டங்கள்(நிதியீட்டம் வெளிநாடு) | 1,350 | 1,349 | 1,349 | 1,349 |
| ஆலோசனை&மென்பொருள் அபி. செயற்றிட்டத்தின் வகை | 5,567 | 5,567 | 5,220 | 3,314 |
| மொத்தம் | **510,682** | **8,812** | **8,465** | **6,559** |

**அரசாங்க அதிகாரபீடங்களினால் தரப்பட்ட சேவைஒப்படைகள்**

பல்வேறு பாராளுமன்றச் சட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகளுக்கிணங்க, காலத்துக்குக் காலம் சேவைகளை வழங்குமாறு UCSC கேட்டுக்கொள்ளப்பட்டது. டிஜிட்டல் சட்டமருத்துவவியலுக்கான நிலையம் (டி.ச.நி) நீதிமன்ற உத்தரவுகள் அல்லது பிற தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட நெறிப்படுத்தல்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சில ஒப்படைகளுக்கு பெயரளவிலான கட்டணமொன்று செலுத்தப்படுகின்றது. எனினும்,UCSC யினால் மேற்கொள்ளப்பட்ட செலவு சேவைஒப்படைகளின் வருமானத்தினை விட அதிகமானதாக இருக்கின்றது.

## 6.4 நிதி உதவி பகுப்பாய்வு மற்றும் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்

அரசாங்க உதவியானது இளமாணி கற்கைகளுக்காக மட்டுமே வழங்கப்படுகிறது, எனினும் இந்த உதவி இளமாணி பட்டநிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து தேவைகளையும் ஈடுசெய்வதற்கு போதுமானதாக இல்லை. உரிய கல்விசார் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பட்டப்பின் மற்றும் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மாணவர்களிடமிருந்து நேரடியாக நிதி சேகரிக்கப்படுகின்றது. வெளித் தரப்பினர்களினால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகள்,செயற்றிட்டங்கள் மற்றும் ஒப்படைகளின் சேவை வகை என்பன விலைச்சிட்டை வழங்குவதன்மூலம் அறவிடப்படுகின்றன. பின்வரும் அட்டவணை UCSCஇன் பாதீடப்பட்ட தொகையையும் பல்வேறு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற வருமானத்தையும் விபரிக்கின்றது.

**அட்டவணை *6.4.* அ: நிதி முன்னேற்றம்*(*பாதீடிடப்பட்ட, விலை சிட்டையிடப்பட்ட, பெறப்பட்ட*)* ரூ. *000'***

| பிரதான வருமான மூலங்கள் | பாதீடிடப்பட்ட | விலை சிட்டையிடப்பட்ட | பெறப்பட்ட | (குறைவு) / மிகை |
|---|---|---|---|---|
| இளமாணி பட்ட கற்கைகள் | 3,930 | 4,707 | 4,707 | 777 |
| பட்டப்பின் கற்கைகள் | 80,000 | 87,116 | 87,116 | 7,116 |
| ஆலோசனைகள் | 5,567 | 5,567 | 5,220 | (347) |
| வெளிவாரி பட்டம் | 60,296 | 75,451 | 75,451 | 15,155 |
| ஏனையன | 100,000 | 105,227 | 105,227 | 5,227 |
| மொத்தம் | **510,682** | **278,068** | **277,721** | **27,928** |

## *6.4.1* நிதிச் செயலாற்றுகை பகுப்பாய்வு

**அட்டவணை *6.4.1.* அ: நிதிச் செயலாற்றுகை பகுப்பாய்வு – *2018*ரூ. *000'***

| விடயம் | சூத்திரம் | மாணவருக்கான செலவினம் |
|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டுவரும் செலவினம் (RE) | RE / மொத்த மாணவர் எண்ணிக்கை | 339,512 |
| ஒரு மாணவருக்கான மூலதன செலவினம்(CE) | CE / மொத்த மாணவர் எண்ணிக்கை | 171,170 |
| | மொத்தம் | **510,682** |

## 6.4.2 இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிசார் விபரங்களின் பகுப்பாய்வு

***'000***

| | 2018 | % | 2017 | % | 2016 | % | 2015 | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 228,297 | | 183,495 | | 163,513 | | 132,789 | |
| பிற மீண்டுவரும் செலவுகள் | 62,666 | | 67,728 | | 51,739 | | 51,868 | |
| | 290,963 | | 251,223 | | 215,252 | | 184,657 | |
| பெற்றமீண்டுவரும் மானியம் | 198,785 | 68 | 167,862 | 67 | 160,000 | 74 | 122,300 | 66 |
| **மீண்டுவரும் நடவடிக்கைகளுக்காக தோற்றுவிக்கப்பட்ட நிதியங்கள்** | **92,178** | **32** | **83,361** | **33** | **55,252** | **26** | **62,357** | **34** |
| | | | | | | | | |
| **மூலதன செலவினம்** | 146,829 | | 195,033 | | 175,269 | | 104,948 | |
| பெற்ற மூலதன மானியம் | 112,250 | 76 | 153,714 | 79 | 149,258 | 85 | 45,000 | 43 |
| **மூலதன நடவடிக்கைகளுக்காக தோற்றுவிக்கப்பட்ட நிதியங்கள்** | **34,579** | **24** | **41,319** | **21** | **26,011** | **15** | **59,948** | **57** |
| | | | | | | | | |
| **மொத்த செலவினம்(மீண்டுவரும் + மூலதன)** | 437,792 | | 446,256 | | 390,521 | | 289,605 | |
| மொத்த அரச மானியம் | 311,035 | 71 | 321,576 | 72 | 309,258 | 79 | 167,300 | 58 |
| **இளமாணி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட நிதியங்கள்** | **126,757** | | **124,680** | | **81,263** | | **122,305** | |
| **மொத்த செலவினத்தில் %ஆக தோற்றுவிக்கப்பட்ட நிதிய பயன்பாடு** | | **29** | | **28** | | **21** | | **42** |

## 6.4.3 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதி நிலைமைக் கூற்று

| | 2018 | 2017 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | ரூ. | ரூ. |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 83,380,078 | 76,965,301 |
| வருமதிகள், வைப்புக்கள் &முற்கொடுப்பனவுகள் | 94,312,393 | 101,077,492 |
| இருப்புக்கள் | 2,988,578 | 2,924,591 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **180,681,049** | **180,967,384** |
| கட்புலனாகா சொத்துக்கள் | 4,492,911 | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | |
| முதலீடுகள் | 748,616,266 | 661,675,469 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும் | 38,273,299 | 38,943,994 |
| நடைபெறும் நிருமாண வேலைகள் | 152,000,649 | 65,826,421 |
| ஆதனம், பொறித்தொகுதி &உபகரணம் | 556,768,660 | 578,355,115 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | **1,495,658,874** | **1,344,800,999** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **1,680,832,834** | **1,525,768,383** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| அட்டுறுகள் &பிற சென்மதிகள் | 110,627,418 | 106,718,845 |
| கடன்கொடுத்தோர் | 20,220,499 | - |
| பிடித்துவைத்தல் | 8,536,210 | 18,223,589 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | **139,384,127** | **124,942,435** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | |
| இளைப்பாறல் நலன்கள் | 45,991,433 | 43,303,361 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | **45,991,433** | **43,303,361** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **185,375,560** | **168,245,795** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை** | **1,495,457,275** | **1,357,522,588** |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 3,458,277 | 4,314,513 |
| செலவிடப்பட்ட மூலதன மானியம் | 762,472,881 | 665,748,903 |
| செலவிடப்படாதசெயற்றிட்ட மானியம் | 12,067,546 | 4,917,110 |
| செலவிடப்பட்டசெயற்றிட்ட மானியம் | 8,614,242 | 9,797,613 |
| கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தான பங்களிப்பு | 8,155,714 | 8,155,714 |
| **மொத்த மானியங்கள்** | **794,768,660** | **692,933,853** |
| ஒதுக்கங்கள் | 468,413,542 | 444,634,020 |
| மீள்விலைமதித்தல் ஒதுக்கம் | 35,505,497 | 35,505,498 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள் | 196,769,576 | 184,449,217 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை** | **1,495,457,275** | **1,357,522,588** |

## 6.4.4 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | 2018 | 2017 |
|---|---|---|
| **இளமாணி நிகழ்ச்சித்திட்டம்** | ரூ. | ரூ. |
| **வருமானம்** | | |
| அரச மானியம் | 201,404,530 | 167,862,330 |
| தோற்றுவிக்கப்பட்ட நிதி –செயற்றிட்ட வருமானம் | 11,517,430 | 2,654,102 |
| பிற்போட்ட வருமானம் | 49,912,357 | 28,475,295 |
| மகாபொல& உதவிப்பணம் | 14,199,000 | 13,860,080 |
| பிற வருமானம் | 4,706,673 | 10,851,276 |
| | **281,739,990** | **223,703,083** |
| **செலவினம்** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 189,144,829 | 153,142,602 |
| பிரயாணச் செலவு | 349,851 | 501,812 |
| வழங்கல்கள் | 5,808,036 | 7,430,741 |
| ஒப்பந்த சேவைகள் | 39,288,888 | 41,597,241 |
| இளைப்பாறல் நலன்கள் | 39,151,808 | 30,352,279 |
| பிற மீண்டுவரும் செலவுகள் | 17,218,993 | 18,197,970 |
| மகாபொல& உதவிப்பண கொடுப்பனவுகள் | 14,199,000 | 13,860,080 |
| **தேய்மானத்துக்கு முன் மொத்தச் செலவினம்** | **305,161,404** | **265,082,724** |
| கூட்டு: தேய்மானம் | 71,290,059 | 45,869,380 |
| **தேய்மானத்தின் பின் மொத்தச் செலவினம்** | **376,451,464** | **310,952,104** |
| **இளமாணி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தான குறைவு** | **(94,711,474)** | **(87,249,021)** |
| **விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம்** | | |
| முதுமாணி நிகழ்ச்சித்திட்டம்-(MSc) | 35,931,494 | 56,508,866 |
| வெளிவாரிப் பட்டங்கள் நிலையம் -(EDC) | 52,964,021 | 39,464,688 |
| கணிப்புச் சேவைகள் நிலையம்-(CSC) | 8,623,936 | 3,121,776 |
| e-கற்கை நிலையம்-(eLC) | 10,985,293 | 14,213,153 |
| உயர்தொழில் அபிவிருத்தி நிலையம்-(PDC) | (50,158) | (54,477) |
| உயர் டிஜிட்டல் ஊடக தொழினுட்பவியல் நிலையம்-(ADMTC) | (707,228) | 266,167 |
| **விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான மிகை** | **107,747,358** | **113,520,174** |
| **செயற்றிட்டங்கள்** | | |
| வெளிநாட்டு நிதியீட்டப்பட்ட செயற்றிட்டங்கள் | 6,649,668 | 1,624,093 |
| ICTer மாநாடு | (174,216) | 949,194 |
| **செயற்றிட்டங்களிலிருந்தான மிகை** | **6,475,452** | **2,573,287** |
| | | |
| **தேறிய மிகைகள்/(குறைவுகள்)** | **19,511,337** | **28,844,440** |

## 6.4.5 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இணைந்த காசுப் பாய்வுக் கூற்று

| | 2018 | 2017 Restated |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான /(பயன்படுத்திய) காசுப்பாய்வு** | | **Rs** |
| ஆண்டுக்கான மிகை/(குறைவு) | 19,511,337 | 28,844,440 |
| சீராக்கங்கள் : | | |
| தேய்மானம் | 75,146,326 | 58,102,147 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 11,490,540 | 8,781,090 |
| பிற்போட்ட வருமானம் | (50,811,647) | (29,137,350) |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் விற்பனையிலிருந்தான இலாபம் /(நட்டம்) | 117,535 | (646,003) |
| முந்திய வருட சீராக்கம் | 5,673,690 | 33,960,209 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு மிகை** | **61,127,781** | **99,904,532** |
| தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள் | 21,142,808 | (8,564,199) |
| **செயற்பாட்டிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட/(பயன்படுத்திய) காசு** | **82,270,589** | **91,340,333** |
| பரிமாற்றல் நயம் /(நட்டம்) | | - |
| செலுத்திய பணிக்கொடை | (7,638,272) | (607,369) |
| **செயற்பாட்டிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட/(பயன்படுத்திய) தேறிய காசு** | **74,632,317** | **90,732,965** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) காசுப் பாய்வு** | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் கொள்ளல் | (61,957,497) | (86,917,515) |
| நிருமாண நடைபெறும் வேலை | (83,055,582) | (106,576,947) |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் விற்பனையிலிருந்தான முன்னெடுப்பு | 214,560 | 911,795 |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் புனரமைப்பும் பராமரிப்பும் | (2,193,736) | (1,505,833) |
| நீண்டகாலமுதலீடு | (86,940,797) | (77,043,200) |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தோற்றுவிக்கப்பட்ட / (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு** | **(233,933,053)** | **(271,131,700)** |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) காசுப் பாய்வு** | | |
| பெற்ற மூலதன மானியம்- அரச நிதி | 112,250,000 | 107,450,000 |
| பெற்ற மூலதன மானியம்- தோற்றுவிக்கப்பட்ட நிதி | 36,206,563 | 41,318,842 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியத்துக்கு மாற்றுதல் | | (20,560,978) |
| பெற்ற செயற்றிட்ட மானியம் | 38,073,429 | 10,495,808 |
| பெற்ற செயற்றிட்ட மானியத்திலிருந்து வருமானத்துக்கு மாற்றுதல் | (30,455,310) | (14,621,716) |
| மூலதன மானியத்திலிருந்து செயற்பாட்டு வருவாய்க்கு மாற்றுதல் | (2,679,530) | (5,820,669) |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களிலிருந்தான தேறிய பெறுவனவு/ கொடுப்பனவு | 12,320,362 | (4,233,050) |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான தோற்றுவிக்கப்பட்ட /** | **165,715,514** | **114,028,238** |

| | | |
|---|---|---|
| **(பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு** | | |
| | | |
| **காசும் காசுக்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு)** | **6,414,778** | **(66,370,497)** |
| வருட ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | 76,965,300 | 143,335,797 |
| **வருட இறுதி காசும் காசுக்குச் சமமானவைகளும்** | **83,380,078** | **76,965,300** |

## 6.5 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மையில் மாற்றங்கள் பற்றிய கூற்று

| Description | செலவிடப் படாத மூலதன மானியம் | செலவிடப்பட்ட மூலதன மானியம் | செலவிடப்படாத செயற்றிட்ட மானியம் | செலவிடப்பட் ட செயற்றிட்ட மானியம் | கொழும்பு பல்கலைக்க ழகத்திலிருந் தான பங்களிப்பு | ஒதுக்கம் | மீள்விலைம தித்தல் ஒதுக்கம் | கட்டுப்படுத்தப் பட்ட நிதியங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **2017திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **53,419,312** | **503,143,703** | **10,747,840** | **8,902,702** | **8,155,714** | **374,368,612** | **35,505,498** | **210,335,449** | **1,204,578,830** |
| வருடத்திற்கான செலவிலும் மிஞ்சிய வருமான மிகை | - | - | - | - | - | 28,844,440 | - | - | **28,844,440** |
| முந்திய வருட சீராக்கங்கள் | - | (972,479) | | (147,857) | - | 41,420,968 | - | - | **40,300,632** |
| குறைப்பு | - | (28,475,295) | - | (662,055) | - | - | - | - | **(29,137,350)** |
| வருடத்தில் பெற்ற மானியம் | 148,768,843 | - | 10,495,809 | - | - | - | - | - | **159,264,652** |
| வருடத்தில் மாற்றல்கள் | (197,873,642) | 192,052,974 | (16,326,539) | 1,704,823 | - | - | - | (25,886,232) | **(46,328,616)** |
| | | | | | | | | | |
| **2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **4,314,513** | **665,748,903** | **4,917,110** | **9,797,612** | **8,155,714** | **444,634,020** | **35,505,498** | **184,449,217** | **1,357,522,588** |
| வருடத்திற்கான செலவிலும் மிஞ்சிய வருமான மிகை | - | - | - | - | - | 19,511,337 | - | - | **19,511,337** |
| முந்திய வருட சீராக்கங்கள் | 25,000 | (25,000) | - | (748,696) | - | 4,268,186 | - | - | **3,519,490** |
| குறைப்பு | - | (49,909,289) | - | (902,358) | - | - | - | - | **(50,811,648)** |
| வருடத்தில் பெற்ற மானியம் | 148,456,563 | - | 37,903,780 | - | - | - | - | - | **186,360,343** |
| வருடத்தில் மாற்றல்கள் | (149,337,798) | 146,658,268 | (30,753,345) | 467,685 | - | - | - | 12,320,359 | **(20,644,832)** |
| | | | | | | | | | |
| **2018திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **3,458,277** | **762,472,881** | **12,067,545** | **8,614,243** | **8,155,714** | **468,413,542** | **35,505,498** | **196,769,576** | **1,495,457,275** |

# 7. உலகின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உலக மக்களின் நலனுக்காக 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG)இனங்கண்டுள்ளது. அவையாவன:

இலக்கு 1 : வறுமையின்மை
இலக்கு 2 : பசி இன்மை
இலக்கு 3 : சிறப்பான ஆரோக்கியமும் நல்வாழ்வும்
இலக்கு 4 : தரமான கல்வி
இலக்கு 5 : பால்நிலை சமத்துவம்
இலக்கு 6 : சுத்தமான குடிநீரும் துப்புரவும்
இலக்கு 7 : மலிவானதும் சுத்தமானதுமான சக்தி மூலங்கள்
இலக்கு 8 : ஏற்புடைய தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி
இலக்கு 9 : கைத்தொழில், புத்தாக்கம், உட்கட்டுமானம்
இலக்கு 10 : சமத்துவமின்மையை குறைத்தல்
இலக்கு 11 : நிலைபேறான நகரங்களும் சமூகங்களும்
இலக்கு 12 : பொறுப்பான நுகர்வும் உற்பத்தியும்
இலக்கு 13 : காலநிலை நடவடிக்கைகள்
இலக்கு 14 : நீர் சார் சூழற்தொகுதி
இலக்கு 15 : நிலம் சார் சூழற்தொகுதிகள்
இலக்கு 16 : சமாதானம், நீதி, உறுதியான நிறுவனங்கள்
இலக்கு 17 : இலக்குகளுக்கான பங்காளர்கள்

மேற்படி 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு(SDG) ஏற்றவாறு இலங்கை பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக இலங்கை அரசாங்கம் விருத்திசெய்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்தியிருந்தது. சொல்லப்பட்ட நி.அ.இ. மீது UCSC கவனம் செலுத்தியிருந்ததுடன் அதன் செயற்பாடுகள் 2018இல் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணைக்கப்பட்டிருந்தன.

**2018ஆம் ஆண்டு பொருட்டு இலங்கை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான(SDG) UCSC கூட்டு திட்டத்தின் கண்ணோட்டம்**

| இலக்கு இல. | இலக்கு விவரணம் | இலங்கை நி.அ.இ.ஏற்றவாறு UCSC செயற்பாடுகள் | 2030ம் ஆண்டளவில் இலக்கு | 2018முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 01 | எங்குமுள்ள எல்லா விதத்திலுமான வறுமையை ஒழித்தல் | இந்நாட்டில் வறுமையை குறைக்கும் வழியொன்றாக UCSC, அதன் உள்வாரி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான இலவச கல்வி முறைமை மேம்படுத்துகிறது. இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தினை விருத்தி செய்வதற்கு அரச நிதி மற்றும் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் இரண்டும் பயன்படுத்தப்படுகிறது. குறைந்த வருமான குடும்பங்களிலுள்ள மாணவர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை பின்பற்றுகிறார்கள் என்பதுடன் அவர்களது நலன்களை குறிப்பாக விடுதிகள், விசேட புலமைப்பரிசில் திட்டங்களை பூர்த்திசெய்ய UCSC, பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. | 2030 இல் மாணவர் உள்ளெடுப்பினை 500 க்கு அதிகரிக்க திட்டமிடல் | 300 க்கு அதிகரிக்கப் பட்டுள்ளது. |
| 02 | பசியை ஒழித்தல், உணவு பாதுகாப்பினை | தரமான உணவுடன் மாணவர் பொருட்டான விலைகுறைந்த சிற்றுண்டிச்சாலை | தற்போதிருக்கும் சிற்றுண்டிச்சாலை | மாணவர் சிற்றுண்டிச்சாலையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடைதல், போசாக்கினை விருத்திசெய்தல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல் | உணவு பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான சிற்றுண்டிச்சாலை குழு பதவியினரினதும் மாணவர்களினதும் போசாக்கு அறிவை விருத்திசெய்ய கருத்தரங்குகளை நடாத்துதல் நாட்டிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதை குறைப்பதற்காக தாள்அற்ற சூழலை ஊக்குவித்தல் பதவியினர்க்கும் மாணவர்களுக்கும் ஆலோசனை சேவை | வசதிகளை விருத்திசெய்தலும் பதவியினர், மாணவர்கள் பொருட்டு உயர் தர உணவுகளை வழங்குதலும், குறைந்த வருமான குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கும் நெருக்கடி நிலமையிலுள்ள மாணவர்களுக்கும் நிதியுதவி வழங்கல், நெருக்கடி நிலமையிலுள்ள பதவியினர்க்கு கடன்வசதியை வழங்கல். பதவியினர் நலனோம்பல் தொடர்பில் நடவடிக்கைகளை விருத்திசெய்தல். ஆலோசனை சேவையை மேம்படுத்தல். 90%தாள்அற்ற நிறுவனமாக மாறுதல். நிறுவனத்தில் பசுமை சூழலை விருத்திசெய்தல். இ-விவசாயம் தொடர்பில் த.தொ.தொ.ஆராய்ச்சியை நடாத்தல். நல்ஆரோக்கியத்தைத உறுதிசெய்வதற்கு சகல மாணவர்கள் & பதவியினர் பொருட்டு உயர்தர உணவை வழங்கல் | கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது.<br><br>தோற்றுவிக்கப்பட்ட வருமானத்தில் குறித்த சதவீதம் பயன்படுத்தப்பட்டு மாணவர் நெருக்கடி மற்றும் நலனோன்பல் பொருட்டடு நிதியம் ஏற்படுத்தப்பட்டது. (நடைமுறைத் திட்டத்தில் பல நடவடிக்கைகள்) |
| 03 | ஆரோக்கிய வாழ்வை உறுதிப்படுத்தல் மற்றும் சகல வயதினரின் நல்வாழ்வை மேம்படுத்தல் | UCSC அதன் பதவியினர் பொருட்டு மருத்துவத் திட்டத்தை செயற்படுத்தியதுடன் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கு செய்தமை மருத்துவ நிலையம் UCSC மாணவர் பொருட்டு மருத்துவ உதவியை வழங்கியது இடர்கடன் திட்டம் சுற்றாடல் பாதுகாப்பை மேம்படுத்தல் (நுளம்பு பிரச்சினையைக் குறைத்தல்) | பதவியினர் மற்றும் மாணவர்களின் இறப்பு எண்ணிக்கையை குறைத்தல் அல்லது மிகக் குறைந்த வீதத்தில் பேணுதல் பதவியினர் மற்றும் மாணவர்களின் திருப்தி மட்டத்தை மேம்படுத்தல் 2030 ஆண்டளவில் பதவியினர் | இறப்பு எதுவும் பதிவாகவில்லை மருத்துவத் திட்டம் காரணமாக UCSC சுகாதார நிலமையை மேம்படுத்த முடிந்தது மருத்துவ நிலையத்தினால் அளிக்கப்படும் வசதியை செயற்படுத்தலும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மற்றும் மாணவர்கள் அனைவருக்குமான தற்போதைய சுகாதார நலன் வசதிகளை மேம்படுத்தல் | பதவியினரிடையே விழிப்பூட்டல் திட்டத்தை செயற்படுத்தலும் |
| 04 | உள்ளடக்க சமமான தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவர் பொருட்டும் வாழ்வுகால கற்றல் வாய்ப்புக்களை மேம்படுத்தல் | இலவசக் கல்வி, சமமான தரமான கல்வியை UCSC வழங்கியது பின்லருவனவற்றையும் வழங்கியது.<br>1. சான்றிதழ், டிப்ளோமா, உயர் டிப்ளோமா கற்கை நெறிகள்<br>2. BIT பட்டம்<br>3. விஞ்ஞானமானி பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்<br>4. பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | உள்ளெடுப்பினை 40-50% ஆல் அதிகரித்தல் | ப.மா.ஆ. ஒதுக்கீட்டிலிருந்து 2018 பொருட்டு 300 இளமானி மாணவர்களுக்கு UCSC அனுமதித்தது.<br>BIT பட்டம் பொருட்டு 4445 மாணவர்களும் முதுமானிப் பட்டங்கள் பொருட்டு 556 மாணவர்களும் பதியப்பட்டனர். |
| 05 | பால் நிலை சமத்துவத்தை அடைதலும் சகல மகளீர் மற்றும் பெண்பிள்ளைகளை வலுவூட்டுதவும் | 1. அனுமதியின் போது பால்நிலை வேறுபாடு இல்லை அல்லது உயர்கற்றல் பொருட்டு சம வாய்ப்புக்களை வழங்குதல்.<br>2. மகளீர் அனைவரையும் வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | 2030 ஆண்டளவில் தற்போது இருக்கும் பால் நிலை சமத்துவக் கொள்கையைப் பேணுதல் | அனுமதி மற்றும் வேலைவாய்ப்பின் போது மகளீர் அனைவருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படுகிறது. |
| 06 | அனைவருக்குமான நீர் மற்றும் துப்புரவு கிடைக்கச் செய்தலையும் தொடர் முகாமைத்துவத்தையும் உறுதிப்படுத்தல் | குடிநீர் வசதி மற்றும் துப்புரவு வசதிகள் சகல மாணவர் மற்றும் பதவியினருக்கு வழங்கப்பட்டன. | சகல மாணவர் மற்றும் பதவியினர் பொருட்டு நீர் கிடைப்பதையும் விசேட திறனுள்ள மாணவர்கள் உள்ளிட்ட அனைருக்கும் துப்புரவு வசதிகள் கிடைப்பதையும் உறுதி செய்தல். | சகல மாணவர் மற்றும் பதவியினர் பொருட்டு நீர் மற்றும் துப்புரவு வசதிகள் வழங்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | அனைவர் பொருட்டும் வாங்கத்தக்க நம்பகர நிலையான நவீன மின்வலு கிடைப்பதை உறுதிப்படுத்தல் | மின்வலு சேமிப்பு செயற்பாடுகளை அறிமுகப்படுத்தலும் வினைத்திறனான மின்வலு கிடைப்பதை உறுதிசெய்தலும். மாணவர் பொருட்டு புதிய கணினிகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஆய்வுகூடங்களை வழங்கல் | புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மின்வலுவை 15% ஆல் சேமித்தல் | மின்சாரப் பட்டியலை கட்டுப்படுத்தல் மற்றும் மின்குமிழ்களை மாற்றியமை மற்றும் மின்வலுவைச் சேமிப்பதற்கு புதிய காற்றுச் சீராக்கி முறை பொருத்தியமை |
| 08 | நிலைபேறான, உள்ளடக்க, தொடர் பொருளாதார விருத்தியை, முழு மற்றும் பயனுறு வேலைவாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் அனைவருக்கும் ஏற்படைய தொழில் | நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய போட்டித் தன்மையுள்ள மற்றும் உயர் ஆக்கபூர்வ பட்டதாரிகளை உருவாக்குதல் UCSC இன் வேலைவாய்ப்புத் திறன் 100% ஐ அடைந்தது | வேலைவாய்ப்புத் திறன் 100% ஐ பேணுதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியூடாக போட்டித் தன்மையான புத்தாக்கமுள்ள ஆக்கபூர்வமான உயர்தர பட்டதாரிகளை உருவாக்குதல் | சகல UCSC பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு உள்ளது தற்போதைய வேலைவாய்ப்பு 100% |
| 09 | ஈடுகொடுக்கும் உட்கட்டமைப்பை கட்டியெழுப்பல், உள்ளடக்க நிலைபேறான கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்தல் மற்றும் புத்தாக்கத்தை வளர்த்தல். | UCSC மாணவர்கள் பொருட்டு உயர்தரமான கல்வியை வழங்குவதற்கு ஆய்வுகூடங்கள் நவீனமயப்படுத்தப்பட்டு தரமுயர்த்தப்பட்டுள்ளன. அத்துடன், மாணவர்கள் பொருட்டு புதிய விரிவுரை மண்டபங்களையும் விளையாட்டரங்கையும் நிர்மாணித்தல். த.தொ.தொ.வசதிகளை அதிகரிப்பதற்கு UCSC உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கியுள்ளது. | சகல மாணவர்கள் பொருட்டு நவீன வசதிகளையும் தொழில்நுட்பங்களையும் வழங்குதல். எதிர்பார்த்த இலக்கு 100% | சகல மாணவர்களுக்கும் அவர்களது கற்கை பொருட்டு புதிய கணினிகளும் வசதிகளும் வழங்கப்பட்டன. |
| 10 | நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கு இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல். | ஆங்கிலத்தில் பலவீனமான மாணவர்களுக்கு ஆங்கில வகுப்புக்களை நடாத்துதல் படிப்பில் பலவீனமான மாணவர்களுக்கு உதவி வகுப்புக்களை நடாத்துதல் | மாணவர்களில் அதிகமானோர் GPA 2.5 அல்லது மேல் பெறுமிடத்து மாணவர் செயலாற்றுகையை அதிகரித்தல் | தற்போதைய சித்தியடையாமை வீதம் 15% இலிருந்து 10% ஆக குறைக்கப்பட்டுள்ளது. |
| 11 | நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புக்க | UCSC பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு நேரடியாக ஏற்புடையதன்று | நாட்டிலுள்ள கிராமியப் பரதேசங்களை | கிராமிய பாடசாலைகளைக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ளை உள்ளடக்க, பாதுகாப்பான, ஈடுகொடுக்கக் கூடிய மற்றும் நிலைபேறான இடங்களாக மாற்றுதல் | மாணவர் உள்ளெடுப்பு பொருட்டு மாவட்டப் பங்குமுறையை UCSC பின்பற்றுகிறது. மாணவர்களும் பதவியினரும் கிராமிய பாடசாலைகள் பொருட்டு செயலமர்வுகளை நடாத்துகின்றனர். | இலக்காகக் கொண்டு அதிக மாணவர் செயற்பாடுகள் | கருத்திற் கொண்டு மாணவர்கள் வருடத்திற்கு ஒரு செயற்பாட்டினை நடாத்துகின்றனர். |
| 12 | நிலைபேறான நுகர்வையும் உற்பத்தியையும் உறுதிப்படுத்தல் | UCSC கழிவு முகாமைத்துவக் கொள்கைகளைப் பின்பற்றுவதுடன் மீள்சுழற்சிப் பொருட்டு கழிவுகளை அனுப்புகிறது. சுற்றாடல் சேதங்களை இழிவுபடுத்துவதற்கு e-கழிவகற்றல் செயன்முறையை UCSC கருத்தில் கொள்கிறது. | சக்தி மற்றும் பிற வளங்களின் நுகர்வினைக் கட்டுப்படுத்தல். பொருட்கள்/ சொத்துக்கள் அகற்றப்படுவதற்கு முன்னர் உச்ச பயனைப் பெறுதல். நுகர்வினைக் கட்டுப்படுத்துவதற்கு கொள்கைகளை விருத்தி செய்தலும் அவற்றைப் பிரயோகித்தலும்<br><br>சிறந்த கழிவு முகாமைத்துவத்தையும் மீள்சுழற்சி முறைமையையும் பேணுதல். | விரையத்தைத் குறைத்து உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு சகல சொத்துக்கள் மற்றும் வளங்களின் நுகர்வினை UCSC கண்காணிக்கிறது. |
| 13 | காலநிலை மாற்றத்தை மற்றும் அதன் தாக்கங்களை குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல். | காலநிலை மாற்றம் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறு இலத்திரனியல் கருவிகள் போன்ற பண்டங்கள் பாவிப்பதைக் கட்டுப்படுத்தல். | சூழல் நேயமுள்ள பொருள் பாவனையை ஊக்கப்படுத்தும் கொள்கைகளை விருத்தி செய்தல் | CFL மின்குமிழ்களுக்குப் பதிலாக LED பயன்படுத்தும் கொள்கைகளை கடைப்பிடித்தல். |
| 14 | நிலைபேறான அபிவிருத்தி பொருட்டு சமுத்திரங்கள், கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாத்தலும் நிலைபேறாகப் | இந்த இலக்கு UCSC கூட்டுத்திட்டத்துடன் தொடர்பில்லை. | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தலும். | | | |
| 15 | ஆட்புல சூழல்தொகுயின் நிலைபேறான பயன்பாட்டை பாதுகாத்தலும் மேம்படுத்தலும், வனங்களை தொடர்ந்து பேணுதல், காடழிப்பினைத் தடுத்து நிறுத்தல் மற்றும் காணி நிரப்பப்படுதலைத் தடுத்தல். மற்றும் உயிர்ப் பல்வகைமை இழப்பினை தடுத்தல். | இந்த இலக்கு UCSC கூட்டுத்திட்டத்துடன் தொடர்பில்லை. | ஏற்புடையதன்று | ஏற்புடையதன்று |
| 16 | நிலைபேறான அபிவிருத்தி பொருட்டு சமாதானமான உறுதியான சமூகங்களை மேம்படுத்தல், அனைவருக்கும் நீதி கிடைக்கச் செய்தல், சகல மட்டங்களிலும் பயனுறு வகைகூறும் உறுதியான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல். | UCSC மாணவர்களுக்கிடையில் வன்முறைகளோ அது தொடர்பான நடவடிக்கை ஏதும் இல்லை. நிறுவனத்துக்குள்ளேயும் ஏனைய பீட மாணவர்களுக்கிடையிலும் சமாதானமான சூழலைக் கொண்டிருக்கிறது. | முறையான விழிப்பூட்டல் மற்றும் கண்காணிப்பு முறைமையூடாக வன்முறையற்ற சூழலையும் மாணவர் நேயமுள்ள சூழலையும் பேணுகிறது. | 2018 இல் வன்முறை எதுவும் பதிவாகவில்லை. |
| 17 | செயற்பாட்டு ஊடகத்தை பலப்படுத்தலும் நிலைபேறான அபிவிருத்தி பொருட்டு உலகளாவிய பங்குடமையை பேணுதலும். | இளமானி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளின் நலன் பொருட்டு சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் த.தொ.தொழிற்துறை நிறுவனங்களுடன் பங்குடமைகளை UCSC கொண்டிருக்கிறது. | சர்வதேச பங்குடமை மற்றும் தொழிற்துறை இணைப்பை 20% ஆல் அதிகரித்தல் | அத்தகைய ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதற்கு உயர்தொழில் அபிவிருத்தி நிலையம் என அழைக்கப்படும் அர்ப்பணிக்கப்பட்ட நிலையம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஒன்று உள்ளது. |

பேராசிரியர் கே.பி.ஹேவாகமகே
பணிப்பாளர்
கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கல்விப்பிரிவு
2018.12.31

# 8. கணக்காய்வு அறிக்கை - 2018

1615

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. HED/B/UCSC/6/18/02 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2019 නොවැම්බර් 29 දින

UNIVERSITY OF COLOMBO, SCHOOL OF COMPUTING
18 DEC 2019
DIRECTOR'S OFFICE

අධ්‍යක්ෂ

කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනය

කොළඹ විශ්වවිද්‍යාලයට අනුබද්ධිත කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනයේ 2018 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ එහි කටයුතු පිළිබඳව ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2019 අගෝස්තු 30 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ ඉංග්‍රීසි හා දෙමළ අනුවාද මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.එම්.පී.ඒ.ෆොන්සේකා
සහකාර විගණකාධිපති

UNIVERSITY OF COLOMBO, SCHOOL OF COMPUTING
19 DEC 2019
ESTABLISHMENTS & ADMINISTRATION

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் மீது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க

மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு ‘‘திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு’’ என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது. பொது பேரேடு, நாட்குறிப்பு முறைமையொன்று நிறுவகத்தின் நாட்குறிப்பு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் ஏனையவை போன்ற முக்கிய கணக்கீட்டு பதிவேடுகளின் பராமரிப்பு தொடர்பான சர்ச்சைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட முடியும்.

### 1.5.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கைகள்

இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கைகள் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகளும் இந்தத் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் | நேரொத்த அறிக்கைகளின் பிரகாரம் | வித்தியாசம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு -கட்டிடங்கள் | 381,536,572 | - | 381,536,572 | 2019 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினுள் நிலையான சொத்துக்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அனைத்து சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினுள் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெவேண்டிய நிதியங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு சர்ச்சை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2 - 7 வருடங்களிற்கு மேலாக கணனி சேவைப்பிரிவில் தொடர்ச்சியாகவுள்ள ருபா 4,985,367 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணனி மற்றும் மென்பொருள் சேவைகளை வழங்குவது தொடர்பில் பல்வேறுபட்ட சேவை நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன்கள் தொடர்ந்தும் இருந்தது. ஞபாகமூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்த போதும், பல அரச நிறுவனங்கள் பதிலளித்திருக்கவில்லை. | பெறவேண்டிய நிதியங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பிணைமுறி நிபந்தனைகளை மீறிய இரு விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,465,330 தொகை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து திரு.ஆர். சேனநாயக்கவிடமிருந்து அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். திரு.எஸ்.ஜே.பகீரதனிடமிருந்து மீதமாகவுள்ள மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பெறவேண்டிய பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய நிதி

| கணக்காய்வு சர்ச்சை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்களுக்கு மேலாகவுள்ள ரூபா 848,235 கூட்டுத்தொகையான அட்டுறு மற்றும் ஏனைய கொடுப்பனவு மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அவுஸ்ரேலியாவில் இப்போது வசிக்கின்ற பேராசிரியர் அதுல ஜின்ஜிக்கு சொந்தமாகவுள்ள அதனுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 389,911 தொகையானது அவர் இலங்கைக்கு திரும்பியதுடன் செலவீனங்களை ஏற்படுத்தும் நோக்குடன் மீதமாகவிருந்தது. 2019 ஆம் ஆண்டில் மீதமாகவுள்ள ரூபா 458,324 மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தவேண்டிய நிதியங்கள் தீர்க்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 19,511,337 மிகையுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 28,844,440 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,333,103 பின்னடைவொன்று

அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானத்துடன் ஒப்பிடும் போது செயற்பாட்டுச் செலவீனங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமை இந்தப்பின்னடைவிற்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு சர்ச்சை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்கு மின்சாரத்தை கொடுப்பதற்காக புதிய மின் பரிமாற்றத்தை பயன்படுத்தி 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 27,264,245 தொகையொன்று செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டு இறுதிவரை மின்சாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மின்சாரத்தை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் மின்சாரம் வழங்கலும் காலதாமதப் படுத்தப்பட்டது. | உரிய நேரத்தில் சேவையை பெறுவதற்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயம்

| கணக்காய்வு சர்ச்சை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக அமைச்சரவையின் அனுமதியில்லாமல் வரையறுக்கப்பட்ட தீக்ஷன கம்பனியானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சின் சிபாரிசின் கீழ் 2006 திசெம்பர் 29 இல் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக கணனிகள் கல்லூரியின் அங்கீகாரத்தின் கீழ் | கொழும்பு கணனிகள் கற்கைகள் பல்கலைக்கழ கல்லூரியின் உத்தியோகத்தர்கள் தீக்ஷனா கம்பனியின் பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்தனர். சொல்லப்பட்ட கம்பனியின் தற்போதைய முகாமைத்துவம் ஞாபகார்த்த அகவிதியானது திருத்தப்பட்டிருந்தது என எங்களுடைய நிறுவனத்தின் முகாமைத்துவ | கம்பனியானது சட்ட ரீதியாக்கப்பட்டோ அல்லது யூசிஎஸ்சி யின் நோக்கெல்லை யிலிருந்து அகற்றப்பட்டிருக்க வேண்டும். |

ஸ்தாபிக்கப்பட்டதுடன் சொல்லப்பட்ட கம்பனியானது 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதேசமயம் மீண்டும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2009 மார்ச் 02 இல் மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கம்பனியானது யூசீஎஸ்சீ இன் இடங்களில் அதனுடைய வளங்களை பயன்படுத்துவதன் மூலம் பராமரிக்கப்பட்டது. 32 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு கணனிகள் பல்கலைக்கழக கல்லூரியின் உத்தியோகத்தர்கள் சொல்லப்பட்ட கம்பனியின் முகாமைத்துவ சபைக்கு முன்னைய அலுவலராக நியமிக்க வேண்டும். அதனால், யூஎஸ்சீசீ ஆல் 100 சதவீதம் நிர்வாகம் மேற்கொள்ளும் துணைக்கம்பனியானது இருக்கிறது என அவதானிக்கப்பட்டது. யூஎஸ்சீசீயின் உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சபையிலிருந்து சென்றார்கள் என கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும், தீக்ஷனா கம்பனியின் ஞாபகார்த்த அகவிதியானது அதற்கிணங்க திருத்தப்பட்டிருக்கவில்லை.

சபையினூடாக சட்டரீதியாக அறிவித்திருந்தது. அதற்கிணங்க கம்பனியின் செயலாளரானவர் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது என இலத்திரனியல் தபால் ஒன்றை கம்பனியின் செயலாளர் அனுப்பியிருந்தனர்.

## 3.3 நிதிகளின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறுபட்ட நடவடிக்கைகளிற்காக நிறுவனமானது 30 நிதியங்களை பராமரித்திருந்ததுடன் அதிலிருந்து ரூபா 2,886,372 பெறுமதியான 05 நிதியங்கள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தேவையான நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | அத்தகைய நிதியங்களை பயன்படுத்துவதற்கு அதனை பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய 2019 ஆம் ஆண்டு முதல் அந்த பணம் பயன்படுத்தப்படுகிறது. | நிதியமானது எதற்காக ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 18,522,348 பெறுமதியான நிதியத்தில் செயற்திட்ட நிர்வாகம் மற்றும் பொது நோக்கங்களிற்காக பராமரிக்கப்பட்ட ரூபா 9,131,505 தொகையானது 2016 இல் பெறப்பட்ட அனுமதியை பின்பற்றி யூசீஎஸ்சியின் உட்கட்டமைப்பினை முன்னேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும். சொல்லப்பட்ட நிதியமானது 02 வருடங்களிற்கு மேலாக பயன்படுத்தாது மீதமாகவிருந்தது. | நிறுவகத்தின் உள்ளக மாணவர்களின் பொதுவான வசதிகளை உயர்த்துவது தொடர்பில் 2019 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மீது நிதியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியமானது எதற்காக ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) வெளிவாரி பட்டதாரிகள் பிரிவின் தகவல் தொழில்நுட்ப நிதியத்தின் (BIT) இளங்கலைமாணி தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 5,940,314 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதியங்களானது குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமையால் ஆண்டின் இறுதியில் ரூபா 16,714,952 மீதியாக இருந்தது. | இந்நிதியமானது தற்போது பிற் (BIT) பாடநெறியால் எதிர்கொள்ளப்படுகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு ஸ்தாபிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. நிதியங்களால் யூசிஎஸ்சீ இற்கு வெளியிலுள்ள இடத்தில் வெளிவாரி கட்டங்களிற்காக ஒரு வீட்டைக் கட்டுவதற்கு கட்டிடமொன்றை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படும். | நிதியமானது எதற்காக ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகை செயற்திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் பெறுகை செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 39 மில்லியன் பெறுமதியான சேவைகள் மற்றும் வழங்கல்களுக்குரிய 05 நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் முகாமைத்துவ சபையானது ஒப்பந்தக்காரர்கள் செயற்பாட்டிலிருந்த அதேநேரம் அவர்களால் எதிர்கொள்ளப்பட்ட நடைமுறை பிரச்சினைகள் தொடர்பில் ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுதல்களை முறையாக மதிப்பீடு | முடிந்தளவிற்கு பெறுகை திட்டத்தின் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படுவதுடன் ஒப்பந்தங்களை பூர்த்தியாக்கல்களிற்காக காலநீடிப்பு வழங்கப்பட்டது. | |
| (ஆ) | பெறுகை திட்டத்தின் பிரகாரம் 04 சேவைகளின் தொடக்கம் மற்றும் பூர்த்தியாக்கல் மற்றும் ரூபா 25 மில்லியன் பெறுமதியான வழங்கல்கள் 1 ½ - 07 மாதங்கள் காலப்பகுதிக்கு காலதாமதமாகியிருந்தது. | 2019 இன் முதலான காலாண்டு அளவில் அனைத்து பெறுகைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அந்தப் பெறுகையானது 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பல்கலைக்கழக கல்விசாரா உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பால் பாதிக்கப்பட்டது. | முடிந்தளவிற்கு பெறுகை திட்டத்தின் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்விசாரா உத்தியோகத்தர்களில் 47 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் அத்தியாவசதிய வருகை விரிவுரையாளர்களை உள்ளடக்கிய 57 வருகை விரிவுரையாளர்கள் மீளாய்வாண்டின் போது பெற்றிருந்ததுடன் ரூபா 3,037,975 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசார் உத்தியோகத்தர்களில் தகுதிவாய்ந்த நபர்கள் இல்லாமையால் கல்விசார் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் கஷ்டமாகிவிருந்தது. 57 வருகை தரும் விரிவுரையாளர்களின் சேவையானது தொடர்ச்சியாக பெறப்பட்டிருக்காததுடன் அதற்குப் பதிலாக, நேரத்திற்கு நேரம் தேவைப்படும் போது அவர்களுடைய சேவை | காலதாமதிக்காமல் வெற்றிட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கல்விசாரா உத்தியோகத்தரில் வெற்றிடங்கள் இருந்தமையால் அவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கிய பின்னர் ஒப்படை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 49 ஊழியர்கள் வேலைக்கமர்த்தப் பட்டிருந்தனர். | பெறப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது கல்விசாரா பதவியணியில் பதவிகளை ஆட்சேர்ப்பதற்கு பொறுப்பாகவுள்ளது. நிறுவகமானது வரையறுக்கப்பட்ட குறைந்தளவு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு அனுமதித்துள்ளது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட 07 இலக்குகளின் கீழான நோக்கங்களை அடைவதற்காக திட்டமிடப்பட்ட 88 தந்திரோபாயங்களின் உண்மையான செயன்முறையின் பரீட்சிப்பானது 16 தந்திரோபாயங்களின் செயன்முறையானது 31 சதவீதத்திலிருந்து 100 சதவீத வீச்சிலிருந்தது என வெளிப்படுத்தியிருந்தது. | போதிய பதவியணியினர், எதிர்பார்த்த நிதியங்களை பெறாமை, மனிதவளங்களை பெறுவதிலுள்ள கஷ்டம் மற்றும் ஏனைய நடைமுறை பிரச்சனையால் அத்தகைய நடவடிக்கைகளில் சிலவற்றை முடித்திருக்க முடிந்திருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

# 9. UCSC கணக்காய்வு அறிக்கைக்கான பதில்கள்

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைப் பிரிவு

2019.06.10

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இல.306/72,
பொல்தூவ வீதி
பத்தரமுல்லை.

ஐயா,

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கல்வி நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட, ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகள் தொடர்பில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற்குறிப்பிட்ட தலைப்புக்கு ஏற்புடையதாக 2019 மே 29 ஆம் திகதி உமது இல.: எச்ஈடி/பீ/யுசீஎஸ்சீ/06/18/02 கொண்ட கடிதம் சார்பானது.

மேற்படி அறிக்கை எமது நிறுவகத்தில் 2019 யூன் 06 ஆம் திகதி நடைபெற்ற 220 வது முகாமைத்துவச் சபைக் கூட்டத்தில் கருத்திற்லெடுக்கப்பட்டதன் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொருட்டான எமது நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற பதில்கள் (இணைப்பு இல.01) இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. நன்றி.

ஒப்பம்/ பேராசி. கே.பீ.ஹேவாகமகே
பணிப்பாளர்

பிரதிகள் :

1. செயலாளர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு
2. செயலாளர், நிதி அமைச்சு
3. தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. துணை வேந்தர், கொழும்பு பல்கலைக்கழகம்
5. கணக்காய்வு அத்தியட்சகர், அரச கணக்காய்வுப் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்

1. **நிதிக் கூற்றுக்கள்**

குறித்துக் கொள்ளப்பட்டது.

2. **ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பதில்கள் |
|---|---|
| கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்படி மற்றும் அளவுரீதியான விடயங்களுக்கு மட்டுப்படுத்தலினுள், பின்வருமாறு தெரிவிப்பதற்கேனும் எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.<br><br>2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த நிறுவகத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு நிறுவகம் சம்பந்தப்பட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார நிலைக்கு அப்பால் தொடர்வு உள்ளதாக | குறித்துக் கொள்ளப்பட்டது. |
| 2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவகத்தின் கட்டுப்பாட்டு நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காதவாறு செயற்பட்டுள்ளதாக | குறித்துக் கொள்ளப்பட்டது. |
| 2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த நிறுவகத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.<br><br>பல்வேறு செயற்பாடுகள் பொருட்டு 30 நிதியங்கள் நிறுவகத்தினால் பேணப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூ.2,886,372 பெறுமதியான 05 நிதியங்கள் உரிய குறிக்கோள்கள் பொருட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | இந்த 30 நிதியங்களில் கிட்டத்தட்ட 20 நிதியங்கள் பேணப்படுவது, நிறுவகத்தில் பயிலும் இளமாணி மாணவர்களின் திறமைகளை மதிப்பிடுவதற்காக பரிசுகளை வழங்குவதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் பேரிலாகும். ஏனைய மீதிகள் நிதியங்கள் அன்றி நிதியேற்பாடுகள் ஆவதுடன் நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் கற்கை நடவடிக்கைகள் பொருட்டு நிறுவகத்தின் முகாமைத்துவச் சபைக்கு உட்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன.<br>மேலும், இந்த நிதியை பயன்படுத்துவாறு அந்தந்த நிதியத்தை பயன்படுத்தல் தொடர்பில் அதிகாரமுள்ள தரப்பினர்களை விழிப்பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய 2019ஆம் ஆண்டு முதல் இந்த நிதியை |

| | |
|---|---|
| | பயன்படுத்துதல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டதிட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என<br>(அ) பெறுகைத் திட்டத்தின்படி 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்திசெய்ய வேண்டிய ரூபா 39 மில்லியன் பெறுமதியுடைய 05 வழங்கல் & சேவை நடவடிக்கைகள் முடிந்திருக்கவில்லை | ஒப்பந்த நிறுவனங்கள் உரிய ஒப்பந்தங்களை முன்னெடுக்கும்போது முகங்கொடுக்க நேரிட்ட பல்வேறு பிரயோக பிரச்சினைகள் தொடர்பில் அவர்களது கோரிக்கைகள் நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையினால் உரிய மதிப்பீடு செய்யப்பட்டு உரிய ஒப்பந்தங்களை முடிவுறுத்தும் கால எல்லையை நீடித்தல் இதற்கு காரணமாகும். |
| 2.4 ஆ) பெறுகைத் திட்டத்தின்படி பூர்த்திசெய்ய வேண்டிய ரூபா 25 மில்லியன் பெறுமதியுடைய 04 வழங்கல் & சேவைகள் நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் முடிவுறுத்தலும் 1 ½ மாதங்கள் முதல் 7 மாதங்கள் வரை தாமதமடைந்திருந்தன. | நிறுவகத்தின் பெறுகைத் திட்டத்தில் அடங்கிய 04 பெறுகைகளை ஆரம்பித்தலும் முடிவுறுத்தலும் சில மாதங்கள் தாமதமடைந்த போதிலும், அந்த சகல பெறுகைகளும் 2019 முதலாவது காலாண்டளவில் முடிவுறுத்தப்பட்டுள்ளன.<br>மேலும், இந்த பெறுகைகளின் தாமதம் பொருட்டு 2018ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 1 ½ மாதங்கள் நிலவிய கல்விசாரா பதவியினர் வேலை நிறுத்தமும்தாக்கம் செலுத்தியது. |
| 2.4 இ) வெளிவாரி பட்ட பிரிவில் மீளாய்வாண்டில் தகவல் தொழினுட்பவியல்மாணி (BIT) பட்ட அபிவிருத்தி நிதியம் பொருட்டு ரூ.5,940,314 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டு இறுதியில் நிதியத்தில் ரூ.16,714,952 மீதி காணப்பட்ட போதிலும் குறித்த தொகை உரிய குறிக்கோள்கள் பொருட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது தகவல் தொழினுட்பவியல்மாணி (BIT) பொருட்டு எழுந்துள்ள சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பொருட்டும், வெளிவாரிப் பட்டங்கள் நிலையத்தை நிறுவகத்திற்கு வெளியே தாபிப்பதற்கான கட்டடமொன்றை கொள்வனவு செய்வதற்கு இந்நிதியம் கட்டியெழுப்பப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 2.4 ஈ) நிறுவகத்தின் மின்சக்தி தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வதற்காக விஞ்ஞான பீட வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மின்மாற்றி ஊடாக நிறைவேற்றிக் கொண்டிருந்தது. புதிய மின்மாற்றி மூலம் நிறுவகத்திற்கு தேவையான மின்சாரம் பெறப்பட்டதன் பொருட்டு ரூ.27,264,245 தொகை 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் செலவிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையில் மின் வழங்கல் கிடைத்திருக்கவில்லை | 2017 ஆம் ஆண்டில் நிறுவகத்தில் நிருமாணிக்கப்பட்ட புதிய கட்டடம் பொருட்டு மின்சாரம் பெறுவதற்கு (விஞ்ஞான பீடத்தில் நிறுவப்பட்டுள்ள மின்மாற்றி) விண்ணப்பிக்கையில் விஞ்ஞான பீடம் பொருட்டு புதிதாக நிருமாணிக்கப்படும் கட்டடம் பொருட்டு அந்த மின்மாற்றியின் இயலளவு போதியதாக |

| | |
|---|---|
| | இல்லாமையினால் புறம்பான மின்சக்தி வழங்கலை பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவித்தமையினால் புதிய மின்மாற்றி பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டது.<br>மேலும், நிறுவகத்திற்கு மின்சக்தி வழங்கலை பெற்றுக்கொள்வதற்காக மின்சார சபைக்கும் கொழும்பு மாநகர சபைக்கும்(வீதி தோண்டுவதற்காக) செலுத்த வேண்டிய தொகையை உரிய திகதிகளில் செலுத்தி வேறு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பினும் எமது நிறுவகத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணம் காரணமாக அதாவது மின் வழங்கும் நிறுவனங்களில் பாரிய வழங்கல் (Bulk supply) பொருட்டு கடைப்பிடிக்கும் நடைமுறையின் தாமதம் காரணமாக மின்சாரம் பெறுவது தாமதமாகியள்ளது என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

3. **ஏனைய அவதானிப்புக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பதில்கள்** |
|---|---|
| 3 அ) கல்விசார் பதவியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் மேலும் 47 வெற்றிடங்கள் நிலவின. அதன் பெறுபேறாக மீளாய்வாண்டில் அத்தியாவசியமான சில வெளி விரிவுரையாளர்கள் உள்ளிட்ட 57 விரிவுரையாளர்கள் பொருட்டு ரூ.3,037,975 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், கல்விசாரா பதவியினரில் நிலவிய வெற்றிடங்கள் பொருட்டு பணிஒப்படைத்தல் அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் 49 ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதன்மூலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கல்விசார் பதவியினர் பொருட்டு தகைமையுள்ள நபர்கள் வராத காரணத்தினால் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிரமமாயுள்ளது. எனினும், இந்த வெற்றிடங்களை எதிர்காலத்தில் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 57 வெளி விரிவுரையாளர்களின் சேவை தொடர்ந்து பெறவில்லை என்பதுடன் தேவைக்கேற்பவே அடிக்கடி பெறப்பட்டது.<br>மேலும், கல்விசாரா பதவியினர் பொருட்டு ஆட்சேர்த்தலானது அந்தந்த பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கமைய இடம்பெறுவதுடன் குறித்த பதவிகள் பொருட்டு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கும் வரை தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளது. |
| 3 ஆ) செயல் திட்டம் 07 இலக்குகளைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு இலக்கின் கீழ் 17 குறிக்கோள்கள் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். |

| | |
|---|---|
| அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அந்த ஒவ்வொரு குறிக்கோளை செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த 88 தந்திரோபாயங்களின் உண்மையான முன்னேற்றத்தை சோதனை செய்கையில் 16 தந்திரோபாயங்களின் முன்னேற்றம் நூற்றுக்கு 31 முதல் நூற்றுக்கு 100 வரை குறைவாக காணப்பட்டது | 2018ஆம் ஆண்டு பொருட்டு சம்பளம் மற்றும் படிகள் தவிர்ந்த பிற செலவுகள் (other recurrent) பொருட்டு போதிய நிதி கிடைக்காமை மற்றும் ஏனைய பிரச்சினை காரணமாக செயல் திட்டத்தில் அடங்கிய 88 தந்திரோபாயங்களில 16 அதாவது 18% எதிர்பார்த்த இலக்கினை அடைவதற்கு முடியாதிருந்தது. |
| 3 இ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின்படி பாதீட்டு எண்ணிக்கையை உண்மையான எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் முறையே நூற்றுக்கு 72 ஆல் மற்றும் நூற்றுக்கு 213 ஆல் அதிகரித்திருந்தது. லீவு நாள் கொடுப்பனவு மற்றும் பணிக்கொடை படி முறையே நூற்றுக்கு 75 ஆல் மற்றும் நூற்றுக்கு 2826 ஆல் அதிகரித்திருந்ததுடன் வேறு படிகள் நூற்றுக்கு 81 ஆல் குறைந்திருந்தது. அதற்கிணங்க, நிறுவகத்தின் பாதீடு தர்க்கரீதியாக தயாரிக்கப்பட்டு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 இல் தோற்றுவிக்கப்பட்ட உண்மையான வருமானம் ரூ.182,700,619.00 ஆகும் என்பதுடன் பாதீட்டு வருமானம் ரூ.145,600,000.00 ஆகும். அதன்படி, தோற்றுவிக்கப்பட்ட வருமானம் அதிகரித்திருந்தது நூற்றுக்கு 72 ஆல் அல்ல மாறாக நூற்றுக்கு 25 ஆல் ஆகும். எதிர்பார்த்ததை விட முதலீடுகள் அதிகரித்தமையினால் முதலீட்டு வருமானம் அதிகரித்திருந்தது. மேலும், லீவு நாள் கொடுப்பனவினுள் மேலதிக நேர கொடுப்பனவும் அடங்கியிருந்தமையினால் அதன் அதிகரிப்பு நூற்றுக்கு 75 ஆல் அல்ல மாறாக நூற்றுக்கு 15 ஆல் ஆகும். அதாவது முழு உண்மையான செலவினம் ரூ.2,422,362.00 ஆகும் என்பதுடன் பாதீட்டு செலவினம் ரூ.2,100,000.00 ஆகும். பணிக்கொடை படி நூற்றுக்கு 2826 ஆல் அல்ல மாறாக நூற்றுக்கு 1573 ஆல் அதிகரித்துள்ளது. இதற்கான காரணம், எதிர்பாராதவாறு விரிவுரையாளர் ஒருவர் சேவை காலத்தினுள் இறத்தல் மற்றும் இரு விரிவுரையாளர்களும் ஊழியர் ஒருவரும் பதவி விலகியமையாகும். இருப்பினும், இந்த குறைபாடுகளை சரிசெய்து 2020 ஆண்டிலிருந்து தர்க்கரீதியான பாதீட்டினை தயாரிப்பதற்கு இணங்குகிறேன். |
| 3 ஈ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்திற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி அமைச்சரினதும் பரிந்துரையுடன் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 2006 திசெம்பர் 29 ஆம் திகதி கணினி கற்கைகள் நிறுவகத்தினுள் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனி தாபிக்கப்பட்டு 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தது. அது மீண்டும் 2009 | வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனியின் அமைப்புவிதியை திருத்துமாறு எமது முகாமைத்துவச் சபை ஊடாக குறித்த நிறுவனத்தின் தற்போதைய முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தேவையான திருத்தங்களை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கம்பனியின் செயலாளர் எமது நிறுவனத்துக்கு அறிவித்துள்ளார். |

| | |
|---|---|
| மார்ச் 02 ஆம் திகதி 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது. இக்கம்பனியானது கணினிக் கற்கை நிறுவகத்தின் வளங்களை பயன்படுத்துவதன்மூலம் கற்கைகள் நிறுவக வளாகத்தினுள் பேணப்படுகிறது. கம்பனி அமைப்புவிதியின் 32 ஆம் பிரிவின்படி குறித்த கம்பனியின் முகாமைத்துவச் சபைக்கு கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் அலுவலர்கள் பதவிவழியில் நியமிக்கப்படல் வேண்டும் என்பதனால் இக்கம்பனி கணினிக் கற்கை நிறுவகத்தின் நூற்றுக்கு 100 பூரண கட்டுப்பாட்டு அதிகாரத்துடனான நிலவும் நிருவாக கம்பனியொன்றாக அவதானிக்கப்படுகிறது. கணினி கற்கைகள் நிறுவகத்தின் பதவியினர் முகாமைத்துவச் சபையிலிருந்து விலகியதாக கணக்காய்வுக்கு அறிவித்திருந்தும் தீக்ஷண கம்பனியின் அமைப்புவிதி இதுவரையில் திருத்தப்பட்டிருக்கவில்லை. | |
| 3 உ) 2015 திசெம்பர் 31 ஆம் திகதியன்று செயற்றிட்ட நிருவாகம் மற்றும் பொது பணிகளை உள்ளடக்கும் முகமாக நிறுவகத்தில் பேணப்பட்டிருந்த ரூ.18,522,348 ஆன நிதியத்தில் ரூ.9,131,505 தொகை 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் கணினிக் கற்கை நிறுவகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பொருட்டு ஒதுக்கப்பட்டிருப்பினும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அந்நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் உள்வாரி மாணவர்களின் பொது வசதிகளை மேம்படுத்துவதற்காக இத்தொகையை 2019 ஆம் ஆண்டினுள் திட்டமிட்ட பணிகள் பொருட்டு பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 3 ஊ) முறி உடன்படிக்கைகளை மீறிய 3 விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியளவில் அறவிடப்பட வேண்டிய தொகை ரூ.4,341,554.28 ஆக இருந்ததுடன் அதில் ஒரு விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூ.798,588 தொகையில் எதுவும் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | திரு ஆர்.சேனாநாயக்க என்பவரின் ஊ.சே.நிதியை விடுவித்துக் கொள்வதற்காக அடிப்படை ஆவணங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டதுடன் அவரது முன்னைய சேவைக்காலம் மற்றும் ஊ.சே.நிதிய பங்களிப்பு தொடர்பில் பிரச்சினை எழுந்தமையினால் அவர் முன்பு சேவையாற்றிய கொழும்பு பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைப்பு செய்து பிரச்சினைளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2019இல் இத்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>திரு எஸ்.ஜே.பஹீரதன் என்பவரின் எஞ்சிய தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>திரு எம்.சி.ஜயவர்தன என்பவரிடமிருந்து அறவிட வேண்டிய தொகையான ரூ.1,876,224.24, 2019.03.26ஆம் திகதி அறவிடப்பட்டது. |

| | |
|---|---|
| 3 எ) கணினி சேவைப் பிரிவில் 2 ஆண்டுகளுக்கும் 7 ஆண்டுகளுக்கும் இடையிலான காலத்திலிருந்து இருந்துவரும் ரூ.4,985,367 கடன்பட்டோர் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வருமதி கடன்தொகை அரச துறையின் பல்வேறு நிறுவனங்கள் பொருட்டு கணினி அல்லது மென்பொரள் சேவை வழங்கல் தொடர்பில் கிடைக்க வேண்டிய தொகையாகும். மேலும், கடன்பட்டோர் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு வாய்மூல நினைவூட்டலுக்கு மேலதிகமாக 2018.11.13 மற்றும் 2018.12.18 திகதிகளுடைய நினைவூட்டல் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டன. எனினும், பல அரச நிறுவனங்கள் இக்கடிதம் பொருட்டு பதிலளிக்கவில்லை. இக்கடன்களை மேலும் திரட்டுதல் தொடர்பில் முகாமைத்துவச் சபைக்கு அறிவித்து எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. |
| 3 ஐ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டையும் நிதிக்கூற்றுக்களையும் ஒப்பிடுகையில் ரூ.444,948,011 பெறுமதியான கட்டடங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கி இருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன்.<br>2019 ஆம் ஆண்டில் கட்டடங்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

ஒப்பம்/ பேராசி. கே.பீ.ஹேவாகமகே
பணிப்பாளர்

# 10. UCSC சிறப்பம்சங்கள் 2018 – புலப்படுதன்மை, நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள்

## 10. UCSC சிறப்பம்சங்கள் 2018 – புலப்படுதன்மை, நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள்

UCSC இன் இணையத்தளம் நிறுவனத்தின் முக்கிய சிறப்பம்சங்களை அறிவிப்பதற்கான பிரதான நுழைவாயிலாக இருக்கின்றது. 2018 ஆம் ஆண்டில்,UCSC இணையத்தளம் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பிரதான தொனிப்பொருளைக் கருத்திற்கொண்டு முற்றாக மறுசீரமைக்கப்பட்டு உள்ளது. அது, குறிப்பாக http://www.ucsc.cmb.ac.lkமற்றும்http://www.ucsc.lkஎனும் இரட்டைத்தள URL இனைக் கொண்டுள்ளது. நிறுவனத்தின் முன்னேற்றங்கள் பற்றிய புலப்பாடு மற்றும் பிரச்சினைகளைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் நடைபெறுகின்ற அனைத்து முக்கிய செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவச் சபை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக மூதவைக்கு அறிவிக்கப்படுகின்றன. UCSC யின் இணையத்தளம் நிறுவனத்தின் செயற்பாடுகளை மக்களுக்கு நாளதுவரைப்படுத்துவதற்காக சமூக வலையமைப்புக்களுடனும் இணைக்கப்பட்டு உள்ளது. 2018 ஆம் ஆண்டின் ஒவ்வொரு மாதம் தொடர்பான முக்கிய சிறப்பம்சங்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

### 10.1 மாதாந்த சிறப்பம்சங்கள் - செயற்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்க

| மாதம் | செயற்பாடுகள் |
|---|---|
| **சனவரி, 2018** | • 2018 புதிய ஆண்டு கொண்டாட்டம் 2018 சனவரி 01இல் இடம்பெற்றது.<br>• காலஞ்சென்ற சிரேஷ்ட பேராசிரியர் ஜி.என்.விக்ரமநாயக்க அவர்களுக்கு இறுதி அஞ்சலி, சனவரி 6, பு.க.அ.,கொ.ப.<br>• BIT 2018 பதிவு சனவரி 06ம் 07ம் திகதிகளில் இடம்பெற்றது.<br>• “பெரிய தரவுகள், பயோஇன்போமெடிக்ஸ் மற்றும் மருத்துவம் : புற்றுநோயில் திட்ப மருத்துவம்” பற்றிய விரிவுரை வைத்தியர் மஹேஷ் இத்தவெல அவர்களினால் நடாத்தப்பட்டமை. (ஈ.ஜே.விடின் கரும உபகார & மருத்துவ என்பு நிபுணர், துணையுறுப்பு சிரேஷ்ட விரிவுரையாளர்,சிகிச்சை விஞ்ஞான கல்லூரி, புற்றுநோய் ஆராய்ச்சித்திட்டம், உடற்றொழியியல் & அபிவிருத்திசார் உயிரியல் துறை, மொனாஷ் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியா) சனவரி 11<br>• 2ம் வருட குழு செயற்றிட்டங்கள் பொருட்டு தங்க/வெள்ளி/வெண்கல விருது வழங்குவதற்கு சிறந்த மென்பொருள் உற்பத்தி போட்டி நடாத்தப்பட்டமை. சனவரி 11<br>• UCSC ISACA மாணவர் குழு ஒழுங்குசெய்த ஆண்டு பொதுக் கூட்டம் 2018 சனவரி 12ஆம் திகதி நடைபெற்றது.<br>• 2016/2017 புதிய இளமாணி மாணவர் உள்ளெடுப்பு அங்குரார்ப்பண வைபவம் சனவரி 17ஆம் திகதி நடைபெற்றது.<br>• 2016/2017 புதிய இளமாணி மாணவர் பொருட்டான திசைமுகப்படத்தும் நிகழ்ச்சித்திட்டம் சனவரி 18 முதல் 31 வரை நடைபெற்றது.<br>• JAVA-SE பயன்படுத்தி ஜாவா பிரயோக அபிவிருத்தி பற்றிய குறுங்கால பாடநெறியொன்று கணிப்புச் சேவை நிலையத்தினால் சனவரி 20ம் 21ம் திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டமை.<br>• முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான தெரிவு நேர்முகப்பரீட்சை சனவரி 21 முதல் 28 வரை நடைபெற்றது.<br>• 2012/2013 தொகுதி மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட ‘கொயின் டவுன் 2017’ நிகழ்வு சனவரி 27 இல் தெகிவளை கிளேன் வரவேற்பு மண்டத்தில் நடைபெற்றது. |
| **பெப்ரவரி, 2018** | • இளமாணி மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட “றீட் ஹந்தாவ” கலாசார நிகழ்வு பெப்ரவரி 15 இல் UCSC கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. |

| | |
|---|---|
| | • “சசல தியே றுவ சொயா”- UCSC மாணவர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட புத்தக வெளியீட்டு வைபவம் பெப்ரவரி 21 இல் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.<br>• முதுமாணிப் பரீட்சை பெப்ரவரி 24 முதல் 25 வரை நடைபெற்றது.<br>• UCSC பதவியினர் பொருட்டு திரு ஹர்ச பெரேராவினால் நடாத்தப்பட்ட “Google ஐ எவ்வாறு பயன்படுத்துவது” என்பதுபற்றிய பயிற்சிப்பட்டறை பெப்ரவரி 27 இல் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. |
| **மார்ச், 2018** | • முதுமாணிப் பரீட்சை மார்ச் 3ம் 4ம் 10ம் 11ம் திகதிகளில் நடைபெற்றது.<br>• UCSC பதவியினர் பொருட்டு திருவதி மாலதி அல்கமவினால் நடாத்தப்பட்ட கூட்டறிக்கை எழுதுதல் பற்றிய பயிற்சிப்பட்டறை மார்ச் 6ம் 13ம் 20ம் 27ம் திகதிகளில் நடைபெற்றது.<br>• ISAC ஆசிய பசுபிக் மாநாட்டின் ஆரம்ப வைபவத்தை மார்ச் 19ம் திகதி வித்யா ஜோதி பேராசி.வி.கே.சமரநாயக்க கேட்போர்கூடத்தில் நடாத்தியது.<br>• முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்ட முன்னேற்ற மீளாய்வு பற்றிய பயிற்சிப்பட்டறை மார்ச் 30ம் 31ம் ஏப்றல் 01ம் திகதிகளில் நடைபெற்றது. |
| **மே, 2018** | • UCSC பௌத்த மாணவர் சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட විදූ නෙතට දම් සිසිල 2018 – தர்ம பிரசங்கம் மே 3இல் நடைபெற்றது.<br>• முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் (கல்வியாண்டு 2017-18)அங்குரார்ப்பண வைபவம் மே 5ஆம் திகதி நடைபெற்றது.<br>• BIT 1வது அரையாண்டுப் பரீட்சை கொழும்பு/கண்டி/காலி/யாழ்ப்பாணம் நிலையங்களில் மே 5ம் 6ம் திகதிகளில் நடைபெற்றது.<br>• UCSC மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட “நின்னத” இசைக் கச்சேரி மே 18ஆம் திகதி இளைஞர் நிலையத்தில் நடைபெற்றது.<br>• BIT V வது அரையாண்டுப் பரீட்சை கொழும்பில் மே 19ம் 20ம் திகதிகளில் நடைபெற்றது.<br>• UCSC பதவியினரினால் ஒழுங்குசெய்யப்பட்ட එරබදු වසන්තය - புது வருட விழா மே 24ஆம் திகதி நடைபெற்றது |
| **யூன், 2018** | • சோதனை தன்னியக்க உருவரைச்சட்டகத்தைப் பயன்படுத்தி மென்பொருள் தர உத்தரவாதம் பற்றிய பயிற்சித்திட்டமொன்று கணிப்புச் சேவைகள் நிலையததினால் யூன் 3இல் ஆரம்பிக்கப்பட்டமை.<br>• கணினிவழி பாதுகாப்பு முதுமாணி, தரவுப் பகுப்பாய்வு முதுமாணி மற்றும் ஆராய்ச்சி முதுமாணி ஆகிய 3 முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்கள் பொருட்டு துணைவிதிகள், பிரமாணங்கள் மற்றும் பாடவிதானங்களை தயாரித்தல் பற்றிய பயிற்சிப்பட்டறை யூன் 7 ம் திகதி கோல் பேஸ் ஹொட்டலில் நடைபெற்றது.<br>• கொ.ப. மன நோயியல் துறை பேராசி.வருணி த சில்வா பொருட்டு வீடியோ உரையாடலுக்கு யூன் 12 ம் திகதி வசதியளிக்கப்பட்டது.<br>• UCSC க்கும் தாய்லாந்து தேசிய மத்திய பல்கலைக்கழகத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடுவதற்கு பேராசி. திமோதி சிவ் மற்றும் வேறு இரு பேராசிரியர்கள் யூன் 26 ம் திகதி விஜயம் செய்தமை.<br>• LEARN சபை கூட்டத்தை யூன் 29 ம் திகதி நடாத்துவதற்கு வசதியளிக்கப்பட்டது. |
| **யூலை, 2018** | • UCSC பதவியினர் பொருட்டு மருத்துவ பாசறை யூலை 17ம் 18ம் திகதிகளில் நடைபெற்றது.<br>• UCSC பயிற்சித்திட்டம் பொருட்டு தொழிற்றுறை பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் யூலை 17 இல் நடைபெற்றது<br>• கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு யூலை 25 இல் நடைபெற்றது (UCSC பட்டதாரிகளுக்கு காலை நேரம்- 244 மாணவர்கள் பட்டங்களை பெற்றார்கள்)<br>• உலக வங்கி மற்றும் ப.மா.ஆ. பிரதிநிதிகள் நடாத்திய ICE (புத்தாக்கம், வணிகமயப்படுத்தல், பெருப்பித்தல்) மதிப்பீட்டு செயற்றிட்ட பிரேரணை - யூலை 25<br>• கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் நூலக பதவியினர் பொருட்டான டி-ஸ்பேஸ் பயிற்சி யூலை 26ம் திகதி நடாத்தப்பட்டது. |

| | |
|---|---|
| | • UCSC பதவியினர் பொருட்டு மருத்துவ உளவள ஆலோசனை யூலை 31ம் திகதி நடைபெற்றது. |
| **ஆகஸ்ட், 2018** | • UCSC இன் இ-கற்கை நிலையத்தினால் இலங்கை தேசிய பரீட்சை பொருட்டு மூடில் எல்எம்எஸ் ஊடாக இ-சோதனை வசதிகள் பற்றிய செயலமர்வு ஆகஸ்ட் 1 இல் நடாத்தப்பட்டது.<br>• சொப்லொஜிக் மற்றும் அவர்களது பங்காளர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட டிஜிட்டல் வகுப்பறை பற்றிய கருத்தரங்கு ஆகஸ்ட் 17 இல் UCSC இல் நடாத்தியமை.<br>• 1ம் 2ம் வருட இளமாணி மாணவர்கள் பொருட்டான இடர் நிதிய புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மதிப்பீடு ஆகஸ்ட் 7-13 வரை நடைபெற்றது.<br>• UCSC இன் கல்விசார் பதவியினரினால் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான இளம் கணினி விஞ்ஞானி போட்டி பற்றிய மதிப்பீடு மட்டம் 1 ஆகஸ்ட் 14 இல் நடைபெற்றது.<br>• இலங்கை கடற்படை பெடி (Petty) அலுவலர்களின் கல்விச் சுற்றுலா- ஆகஸ்ட் 09<br>• ஐரோப்பிய சங்கத்தினால் நிதியீட்டப்பட்ட கணினிவழி பாதுகாப்பு முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு இயங்கலை தெரிவு நேர்காணல் மதிப்பீட்டினை ஆகஸ்ட் 15-20 வரை நடாத்தியமை.<br>• பங்குபற்றல் பொருட்டு அபேட்சகரை தெரிவுசெய்வதற்கு இளம் கணினி விஞ்ஞானி இறுதி மதிப்பீட்டினை ஆகஸ்ட் 17 இல் நடாத்தியமை.<br>• ஆகஸ்ட் 29-31 வரை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் மொனராகலையில் ஒழுங்குசெய்யப்பட்ட என்டர்பிரைஷ் ஸ்ரீ லங்கா கண்காட்சியில் பங்குபற்றியமை.<br>• 3ம் வருட மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட UCSC පැදුර 2018 ஆகஸ்ட் 31 இல் இடம்பெற்றது. |
| **செத்தெம்பர், 2018** | • BIT டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா வழங்கும் வைபவம் கொ.ப.,பு.க.அ.இல் செத்தெம்பர் 05 இல் நடைபெற்றது.<br>• மகரகம, புவனெக மகா வித்தியாலய சா.தர மாணவர்களுக்கான கணித கருத்தரங்கு UCSC எக்ஸ்புலோரேஷன் கழகத்தின் மாணவர்களினால் செத்தெம்பர் 05 இல் நடாத்தப்பட்டது.<br>• பஹசர வருடாந்த பொதுக் கூட்டம் 2018 செத்தெம்பர் 12இல் UCSC இல் நடைபெற்றது<br>• பேராசி.வி.கே.சமரநாயக்க ஞாபகார்த்த சொற்பொழிவு கொ.ப. புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞான துறையின் முன்னாள் தலைவர் கலா.கெவின் செனவிரத்ன அவர்களினால் செத்தெம்பர் 26 இல் நிகழ்த்தப்பட்டது.<br>• ICTer மாநாடு செத்தெம்பர் 26 முதல் 30 வரை UCSC இல் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 5 முக்கிய பேச்சுக்கள்,செயலமர்வு,மாநாட்டு இரவு உணவு மற்றும் சீகிரியா சுற்றுலா இடம்பெற்றன. |
| **ஒக்டோபர், 2018** | • UCSC 4ம் வருட மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட தொழில் சந்தை 2018 ஒக்டோபர் 01 இல் இடம்பெற்றது.<br>• கணினிவழி பாதுகாப்பு முதுமாணி பொருட்டான புதிய மாணவர் பதிவு ஒக்டோபர் 01 இல் ஆரம்பிக்கப்பட்டது.<br>• கல்வி அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட "19 Plus வெற்றிப் பாதையை நோக்கி" கண்காட்சி ஒக்டோபர் 03 முதல் 07 வரை குளியாப்பிட்டியவில் நடைபெற்றது.<br>• UCSC ISACA மாணவர் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட iHack 4.0 போட்டி ஒக்டோபர் 06ம் 07ம் திகதிகளில் நடைபெற்றது.<br>• 1ம் 3ம் அரையாண்டு மாணவர்கள் பொருட்டான முதுமாணிப் பரீட்சைகள் ஒக்டோபர் 06ம் திகதி நடாத்தப்பட்டது. |

| | |
|---|---|
| | • MCS MIT, MIS and வியாபார பகுப்பாய்வு ஆகிய முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களக்கான புதிய மாணவர் பதிவு ஒக்டோபர் 21ம் திகதி இடப்பெற்றது.<br>• JayaSE பயன்படுத்திய சான்றிதழ்கள் 22 பங்குபற்றுநர்களுக்கு ஒக்டோபர் 21ம் திகதி(8 நாட்கள்) வழங்கப்பட்டது.<br>• Java SE இல் சான்றிதழ்நெறியின் புதிய தொகுதியினர் ஒக்டோபர் 28 இல் ஆரம்பித்தனர். |
| **நவம்பர், 2018** | • UCSC தமிழ் மாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட வாணி விழா'' நவம்பர் 01 இல் நடைபெற்றது.<br>• UCSC 'பதவியினர் பொருட்டு வெளிப் பயிற்சி ஹபரண சினமென் ஹோட்டலில் நவம்பர் 03-05 வரை நடாத்தப்பட்டது.<br>• கணினிவழி பாதுகாப்பு முதுமாணியின் 1ம் தொகுதியினர் பொருட்டான கல்விசார் நடவடிக்கை நவம்பர் 09 இல் ஆரம்பிக்கப்பட்டது.<br>• வெளிவாரி பட்டமளிப்பு வைபவம் நவம்பர் 10 இல் வித்யா ஜோதி பேராசி.வி.கே.சமரநாயக்க கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது.<br>• CSCஇனால் மென்பொருள் தர உத்தரவாத சான்றிதழ் நவம்பர் 11 இல ஆரம்பிக்கப்பட்டது.<br>• UCSC பட்டப்பின் பட்டமளிப்பு வைபவம் நவம்பர் 12ம் 13ம் திகதிகளில் வித்யா ஜோதி BMICH இல் நடைபெற்றது.<br>• தொழில் அபிவிருத்திக்கான கணினி பற்றிய சான்றிதழ்நெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்த 28 பங்குபற்றுநர்களுக்கு சான்றிதழ்கள் நவம்பர் 18 இல் வழங்கப்பட்டன.<br>• UCSC இளமாணி புலமைப்பரிசில் வைபவம் நவம்பர் 23 இல் நடைபெற்றது. |
| **திசெம்பர், 2018** | • தொடங்குபவர்களுக்கான த.தொ.அடிப்படை பற்றிய பயிற்சிநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்த 23 பங்குபற்றுநர்களுக்கு சான்றிதழ்கள் திசம்பர் 01 இல் வழங்கப்பட்டன.<br>• Exhibition on Computing @ UCSC இல் கணினி பற்றிய கண்காட்சி மற்றும் SLAASஇல் கண்காட்சக்கு சமமாக பாடசாலை பிள்ளைகளுக்கான பொது கருத்தரங்கு திசம்பர் 05-08 வரை நடைபெற்றது.<br>• கலப்பு கற்றல் அபிவிருத்தி மற்றும் யுனெஸ்கோ செயற்றிட்ட மீளாய்வு கூட்டம் தொடர்பிலான கருத்தரங்கு திசம்பர் 13ம் 14ம் திகதிகளில் UCSC நடாத்த வசதியளிக்கப்பட்டது.<br>• 1ம் 2ம் 4ம் இளமாணி மாணவர்கள் பொருட்டான 2வது அரையாண்டு பரீட்சைகள் திசம்பர் 10-28 வரை நடைபெற்றன.<br>• JayaSE பயன்படுத்தி ஜாவா பிரயோக அபிவிருத்தி பற்றிய சான்றிதழ்நெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்த 19 பங்குபற்றுநர்களுக்கு சான்றிதழ்கள் திசம்பர் 15 இல் வழங்கப்பட்டன.<br>• ஜநா சினிமா விழா திசம்பர் 18ம் திகதி UCSC கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.<br>• சோதனை தன்னியக்க உருவரைச்சட்டகத்தைப் பயன்படுத்தி மென்பொருள் தர உத்தரவாதம் பற்றிய சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த 29 பங்குபற்றுநர்களுக்கான சான்றிதழ்கள் திசம்பர் 30ம் திகதி நடைபெற்றது. |